24 பக்கங்கள்

# உதயன்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 089 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 11 சனிக்கிழமை (23/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



பக்கம் 8 — முன்பே தெரிந்த குண்டு வெடிப்பு





பக்கம் 9 — கார்க் குண்டு வெடிப்பு: 53 பேர் சாவு





பக்கம் 15 — தமிழர் நிலங்கள் பறிப்பு





பக்கம் 23 — அதிரடி ஆட்டம் ஆரம்பம்




# ஜெனிவாவில் இந்தியா இலங்கையை எதிர்க்கும்

## தீர்மானத்தை ஆதரிப்போம் என்று மன்மோகன் உறுதி


புதுடில்லி, பெப்ரவரி 23

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை இந்தியா நிச்சயம் ஆதரிக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளதாகத் தமிழகக் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று தமிழகக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியது. போரின் போது மனிதஉரிமை மீறல்களைப் புரிந்த இலங்கை அரசுக்கு எதிராக, அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணையை மேற்கு நாடுகளுடன் இணைந்து இந்தியாவும்


பார்க்க பக்கம் 04


"இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதன் மூலம், தமிழர்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும்."



### பிரேரணை குறித்து இந்தியாவுக்கு விளக்கியது அமெ.

நியூயோர்க், பெப்.23

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை தொடர்பிலான தனது விளக்கத்தை அமெரிக்கா இந்தியாவிடம் உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளது.

அத்துடன், பிரேரணைக்கான ஆதரவையும் டில்லி நிர்வாகத்திடம் அமெரிக்கா கோரியுள்ளது.

அமெரிக்காவுக்கு விஜயம்


பார்க்க பக்கம் 04


## இலங்கைக்கு எதிராக மற்றுமொரு குண்டு





### அரச படைகளின் பாலியல் கொடுமை அறிக்கையை வெளியிடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

நியூயோர்க், பெப்.23

இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் மீதான இலங்கை அரச படைகளின் பாலியல் கொடுமைகளை அம்பலப்படுத்தும் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கைதாகிப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான படங்களை லண்டன் தொலைக்காட்சியான சனல்-4 வெளியிட்டதால் ஏற்பட்டுள்ள பரபரப்பும் அதிர்ச்சியும் அடங்குவதற்கு முன்னர் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளது.

140 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை


பார்க்க பக்கம் 04


## ஜெனிவா செல்லும் குழுவை திடீரென மாற்றியது இலங்கை

### மஹிந்த சமரசிங்கவுக்கும் இடம்

கொழும்பு, பெப்.23

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தொடருக்காக அனுப்பும் குழு பற்றி எடுத்திருந்த முடிவை இலங்கை அரசு திடீரென மாற்றிக் கொண்டுள்ளது.

அதன்பிரகாரம், அமைச்சர் மகிந்த சமரசிங்கவே ஜெனிவா செல்லும் குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த சமரசிங்க மட்டுமே, ஜெனிவா கூட்டத்தில் இலங்கைக் குழுவில் இடம்பெறவுள்ள ஒரே அமைச்சராவார். ஏனையோர் அதிகாரிகள் நிலையில் உள்ளவர்களாவர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே, தம்மை ஜெனிவா


பார்க்க பக்கம் 04


### உகண்டாவும் கென்யாவும் இலங்கைக்கு ஆதரவு

கொழும்பு, பெப்.23

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் இருந்து இலங்கையைக் காப்பாற்ற, உகண்டாவும், கென்யாவும் உதவும் என்று இலங்கை வந்துள்ள அந்த இருநாட்டுப் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர்.

கென்யாவின் மருத்துவ சேவைகள் அமைச்சர் பேராசிரியர் அன்யாங் நயொங்கோவும், உகண்டா நாடாளுமன்ற உறுப்பினர் முகமட் நசேரே கோவுமே ஜெனிவாவில் இலங்கைக்குத் தங்களது நாடுகள் உதவும் என்று கூறியுள்ளனர்.

இந்த இருநாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ளன.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது, உகண்டா அதற்கு எதிராகவே வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## நெஞ்சைப் பதற வைக்கும் 'மோதல் தவிர்ப்பு வலயம்'

### புதுடில்லியில் நேற்று வெளியீடு





புதுடில்லி, பெப்.23

இலங்கை அரசின் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தும் சனல் -4 தொலைக்காட்சியின் 'மோதல் தவிர்ப்பு வலயம்' என்ற ஆவணப்படம் முதன் முறையாக புதுடில்லியில் நேற்று வெளியிடப்பட்டது.

புதுடில்லியில் உள்ள அரசியல் கழகத்தில் நேற்றுப் பிற்


பார்க்க பக்கம் 04


## குற்றச்சாட்டுகள் பொய்

### மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, பெப்.23

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நம்பகத்தன்மை வாய்ந்தவை அல்ல என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது தொடர்பான 75 சாட்சியங்கள் அடங்கிய 140 பக்கங்களை கொண்ட அறிக்கை, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் நாளை மறுதினம் திங்கட்கிழமை வெளியிடப்பட உள்ளதாகவும் தகவல்கள் வந்துள்ள நிலையில் அதனை இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.


பார்க்க பக்கம் 04


## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முஸ்லிம் பிரிவு அவசியமானது

### ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் வலியுறுத்து



கொழும்பு, பெப்.23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முஸ்லிம் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரான சி.வே. விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம் கட்சிகளைத் தொடர்ந்து நம்பியிருக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முஸ்லிம் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.


பார்க்க பக்கம் 04


## விபத்தில் சிக்கினார்கள் இரட்டையர் ஒருவர் சம்பவ இடத்திலேயே சாவு

### நாய் குறுக்கே பாய்ந்ததால் விபரீதம்

வலி. வடக்கு, பெப்.23

தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரட்டைச் சகோதரர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றவர் படுகாயங்களுக்கு ஆளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணத்தில் இருந்து இரட்டைச் சகோதரர்கள் இரவு 11.30 மணியளவில் வேலை முடிந்து தமது சிறுவிளான், இளவாலையில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

அவ்வேளை, தெல்லிப்



பழை மகாஜனக் கல்லூரிக்கு அண்மையில் மோட்டார்


பார்க்க பக்கம் 04



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை

## சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு,பெப்.23

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை என்று சொல்வதற்கு கிழக்கு முதலமைச்சருக்கு எந்தத் தகுதியுமில்லை- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும்கஷ்டப்பட்டு பெற்ற இந்த பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் மாகாண சபைகளில் இருந்து ஒழிக்க முடியாது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையிலேயே இதனை மிக உரிமையுடன் கூறுகின்றேன்.

கபடகரமான உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இந்த தீர்ப்பிற்கு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். இந்த இரண்டு மாகாணங்களும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்பதற்கு பல நியாயங்கள் உண்டு.

இந்த இரண்டு மாகாணங்கள் இணைவதன் மூலம் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் உண்டு. எனினும் அவற்றை தீர்த்து வைக்க முடியும். அத்துடன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் மறைந்த அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் தலைமையிலான முஸ்லிம் குழுவினர் சென்னை சென்று ஒப்பந் தங்களில் கைச்சாத்திட்டுப் பல உரிமைகளை பெற்றுக் கொண்டனர்.

பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புடன் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வந்தோம். அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு மற்றும் தென் கிழக்கு என மாகாணங்களை உருவாக்குவதாகும். எனினும் அது நிறைவேறவில்லை.

தமிழ் மற்றும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சமமானதாகும். இது மொழி, கலாசார, தொழில் உள்ளிட்ட பல விடயங்களில் சமனாக காணப்படுகின்றது. ஒற்றுமைப்படுவதன் மூலமே இதனை பெற முடியும். பிரிந்து செயற்படுவதன் மூலம் பெறமுடியாது.

முஸ்லிம்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் ஒருபோதும் கைவிடமாட்டோம். மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதே போல் உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும் -என்றார் இரா.சம்பந்தன். (த)

## மயானத்திலிருந்து வெடிபொருள் மீட்பு

### சீ–4 ரக வெடிபொருள் ஒரு கிலோ, சைக்கிள் போல்ஸ் மற்றும் கறுப்பு வெடிமருந்து

அம்பாறை,பெப்.23

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் உள்ள பொது மயானத்திலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை, திருக்கோயில் தம்பிலுவில் பொது மயானத்தில் இருந்தே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்றுத் தெரிவித்தனர்.

சீ-4 ரக வெடிபொருள் ஒரு கிலோ, சைக்கிள் போல்ஸ் மற்றும் கறுப்பு வெடிமருந்து பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக விசேட பிரிவினர் அறிவித்துள்ளனர்.(த)

## காலியில் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை தாக்குதல்

கொழும்பு,பெப்.23

காலி, ஹிரும்புரை முஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாத சிலர் கற்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலினால் பள்ளிவாசலின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தாமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு உடனடியாக இத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்துமாறும், பள்ளிவாசலில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுள்ளார்.

பொலிஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## மகாவலியில் மூழ்கி 5 இளைஞர்கள் சாவு

கொழும்பு,பெப்.23

நாவலப்பிட்டி வெலிகம்பொல பாலத்துக்கு அருகில் மகாவலி கங்கையில் நீராடச் சென்ற இளைஞர்கள் ஐவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த இளைஞர்கள் ஐவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

உயிரிழந்த ஐந்து இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டு நாவலப்பிட்டி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. (த)

## வெளிநாடுகளில் தஞ்சமடைவோரின் குடியுரிமையை நீக்குவதற்குத் திட்டம்

கொழும்பு,பெப்.23

வெளிநாடுகளில் அடைக்கலம் கோருவோரின் குடியுரிமையை நீக்கும் புதிய சட்டம் ஒன்றை இலங்கை கொண்டு வரவுள்ளது.

இந்தத் தகவலை குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

புதிய சட்டத்தின் படி, வெளிநாடுகளில் புகலிடம் கோரியோர், இலங்கையில் இரட்டைக் குடியுரிமைபெற விண்ணப்பிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இரட்டைக் குடியுரிமை பெறுவதைத் தடுக்கும் நோக்கிலேயே பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்தப் புதிய விதி முறையைக் கொண்டு வரவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# உள்ளூராட்சி சபை அதிகாரங்களை பறிக்கிறது வடக்கு மாகாண சபை

## உள்ளூராட்சி அமைச்சு செயலருக்கு தமிழரசுக் கட்சி கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.23

உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் வடமாகாண சபை நிர்வாகத்தினரால் தன்னிச்சையாக-சட்ட ஏற்பாடுகளுக்குப் புறம்பாக மீளப்பெறப் படுகின்றன. அத்துடன் சேவைக்குறிப்பு பிரமாணங்களையும் சபை நிர்வாகம் மீறி செயற்படுகின்றது- எனத் தமிழரசுக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினாலும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினாலும், உள்ளூராட்சி நிறுவனங்களில் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்யுமாறு இலங்கை தமிழரசுக் கட்சி வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் அனுப்பியுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது சகல உள்ளூராட்சி சபைகளின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கமைய வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் கடந்த 8 ஆம் திகதியும், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் 7 ஆம் திகதியும் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அமைவாக, வடமாகாணத்தின் ஆறு உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான அரசியல் கூட்டமைப்பு கட்சி என்ற வகையில் சில முக்கிய விடயங்களில் எழுந்துள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

சுகாதாரத் தொழிலாளி மற்றும் வீதித் தொழிலாளி போன்ற அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமாகாண சபையினால் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி விடுக்கப்பட்ட சேவைக் குறிப்பிலேயே 8 ஆம் வகுப்பு தான் அடிப்படை கல்வித் தகைமையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழு செயலாளரால் 1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 01/1986 சுற்றறிக்கை மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றில் அடிப்படைக் கல்வித் தகைமையாக தரம்- 8 சித்தியே குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வாரம் மேல் மாகாண சபைக்குரிய உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்படி பதவிகளுக்கு ஆளணி வெற்றிடம் கோரப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் கல்வித் தகைமையாக தரம் 8 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்குக்கு ஒரு நீதி வடக்குக்கு ஒரு நீதியா? வடமாகாண சபையின் இந்தச் செயற்பாட்டால் , உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கனவே ஒப்பந்த, தற்காலிக அடிப்படையில் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்பங்களைப் பிரதம செயலாளருக்கு அனுப்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சபைகளின் பிரதான நிறைவேற்று அதிகாரியான தவிசாளரையோ அல்லது தெரிவு செய்யப்பட்ட சபைகளையோ எதுவிதத்திலும் தொடர்புபடுத்தாமல், சபையின் செயலாளர்கள் மூலம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது பொருத்தமானது அல்ல. மேலும் நேர்முகப் பரீட்சை சபையை நியமிப்பது யார் என்பது பற்றியோ தெளிவுபடுத்தப்படவில்லை.

1985 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் 01/1986 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் படி செயலாளர் நியமன நடவடிக்கை எடுக்கலாம். எனினும் நேர்முகப் பரீட்சைக் குழு நியமனம், ஊழியர் நியமனம் என்பன தொடர்பான இறுதித் தீர்மானம் சபைகளுக்கு உரியது என்று சொல்லப்பட்டுள்ளது.

இதன் பின்பு 13 ஆவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாண சபை சட்டத்திலும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதாவது மத்திய அரசினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஒரு போதும் மாகாண சபையினால் குறைக்கப்பட முடியாது.

ஆனால் வடமாகாண சபையினால் எந்த அடிப்படையில் மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது? இதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் பறிக்கப்படுகிறது- என்றுள்ளது. (த-5)

## புனர்வாழ்வு வழங்கக் கோரி தமிழ்க் கைதி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,பெப்.23

புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி ஒருவர் தன்னைப் புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்யுமாறு கோரி கடந்த 20ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

தியாகராஜா பிரபாகரன் (வயது-25) என்ற தமிழ் அரசியல் கைதியே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றார். இது தொடர்பில் குறித்த கைதியினால் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

"நீண்ட காலம் சிறை வைக்கப்பட்டிருக்கும் உங்கள் அனைவரையும் புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைக்க அரசு முடிவு செய்துள்ளது. கடந்த காலத்தில் நீங்கள் இத்தகைய சம்பவத்துடனும் தொடர்புபட்டிருக்கலாம். உங்கள் மீது எத்தகைய குற்றமும் சுமத்தப்பட்டிருக்கலாம். இவற்றை எல்லாம் விடுத்து சகலருக்கும் ஒரு வருட காலத்துக்கு மேற்படாத காலம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் தனித் தனியாக புனர்வாழ்வு கோரி கடிதமொன்றை சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக அரசுக்கு அனுப்பி வையுங்கள்" என்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி மகசின் சிறைக்கு வருகை தந்த ஆணையாளர் காமினி குலதுங்க தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து ஏனையோரைப் போன்று நானும் புனர்வாழ்வுக் கோரிக்கைக்கு கடிதம் அனுப்பியிருந்தேன். 8 மாதங்களாகியும் பதில் எதுவும் கிடைக்கவில்லை. கடந்த 4 வருடங்களாகச் சிறை வைக்கப்பட்டிருக்கும் எனக்குச் சம்பந்தமில்லாத இடங்களில் 2 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் நான் ஒவ்வொரு தடவையும் நீதிமன்றத்துக்குப் போகும் போது அந்நிய நாட்டு நீதிமன்றில் ஏறுவது போலவே உணர்கின்றேன். தமிழ் மொழியில் கொடுக்கும் கடிதங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தமிழில் பேசும் போது நீதிவானால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

வழக்கு விசாரணை என்ற பெயரில் நீதிமன்ற நேரத்தை வீணாக்கவும் சிறைக்குச் சிரமத்தைக் கொடுக்காமலும் என்னை உடனடியாகப் புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைக்கவும். அரசின் வாக்குறுதியால் ஏமாற்றப்பட்டிருக்கும் என்மனோ நிலையை வெளிப்படுத்த வேறு வழியில்லாத காரணத்தினாலேயே உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கிறேன்- என்றுள்ளது. (த-5)

## நெஞ்சு வலியால் குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி,பெப்.23

நெஞ்சுவலி ஏற்பட்ட குடும்பஸ்தரை வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியில் அவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி அருந்தவராசா (வயது-45) என்பவரே மரணமானவராவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தி, சடலத்தை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மூலம் உடற் கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறும், உடற் கூற்றுப் பரிசோதனை அறிக்கையினை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாரை நீதிவான் பணித்தார். (த-9)

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறலாம்

தென்மராட்சி, பெப். 23

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான பெப்ரவரி மாதத்துக்குரிய ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் ரூபா கொடுப்பனவுப் பட்டியல்கள் நேற்று சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவினை மார்ச் இரண்டாம் திகதி (2013.03.02) சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# படையினரின் பெருமளவு மரக்கறி வகைகள் சந்தைக்கு வருவதால் விவசாயிகள் பாதிப்பு

## விலைகளின் திடீர் வீழ்ச்சிக்கும் இதுதான் காரணம்

அச்சுவேலி, பெப்.23

யாழ். குடாநாட்டு சந்தைக்கு பாதுகாப்புத் தரப்பினரால் செய்கை பண்ணப்படும் மரக்கறி வகைகள் பெருமளவில் விற்பனைக்கு வருவதால் மரக்கறி வகைகளின் விலை திடீரென குறைவடைந்துள்ளன.

இதனால் உள்ளூரில் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டுச் சந்தைகளில் பூ கோவா, முட்டைக் கோவா, பயிற்றங்காய், கறிமிளகாய், தக்காளி, கோவா இலை, புடலங்காய், கீரைவகை என்பன பெருமளவில் பாதுகாப்பு தரப்பால் மொத்தமாக இறக்கப்படுகின்றன.

பாதுகாப்புத் தரப்பால் உயர் பாதுகாப்பு வலயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் குடியமர்வுக்கு அனுமதி அளிக்கப்படாத வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பலாலி, தெல்லிப்பழை, மயிலிட்டி பகுதிகளிலும் வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் குடியமர்வுக்கு அனுமதி அளிக்கப்படாத பகுதிகளிலும் படையினரால் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிர்ச் செய்கைக்கு உகந்த வளமான செம்மண் பிரதேசத்தில் பெருமளவில் விவசாயப் பண்ணைகளை நிறுவி பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

அந்தப் பண்ணைகளில் இருந்து அறுவடை செய்யப்படும் மரக்கறி வகைகள் பொதுச் சந்தைக்கு வருவதால் குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உள்ளூர் விவசாயிகள் உற்பத்தி செய்யும் மரக்கறி வகைகளிலும் கவர்ச்சியானதாகவும், பெரிதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் சந்தைப்படுத்தும் மரக்கறிவகை காணப்படுவதால் பாவனையாளர்கள் ஆர்வத்தோடு அவற்றை கொள்வனவு செய்கின்றனர்.

இந்த நிலையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை உரிய நேரத்தில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-11)

# பிரதான கால்வாய்களை புனரமைப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். நகரில் உள்ள பிரதான கால்வாய்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக பலாலி வீதி ஊடாக ஆரியகுளத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வடிகால்வாயும் மற்றும் கஸ்தூரியார் வீதியூடாக கன்னாதிட்டிகுளம், வண்ணான் குளம் போன்றவற்றைச் சென்றடையும் கால்வாய்களும் இவ்வாறு முதற்கட்டமாகப் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தக் கால்வாய்கள் உரிய முறையில் புனரமைப்புச் செய்து கழிவு நீர் மற்றும் வெள்ளம் போன்றவற்றைச் சீராக வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் சீரமைக்கப்படவுள்ளன.

அதனைவிட ஆரியகுளம், கண்ணாதிட்டி போன்ற குளங்களையும் ஆழமாக்கி குளத்தின் தூய்மையைப் பேணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட வண்ணான்குளத்தை துப்புரவாக்கி அக்குளத்தைச் சீரமைத்து குளத்தின் மேல் மேம்பாலம் ஒன்று அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

# இருளில் மூழ்கிக் கிடக்கும் அச்சுவேலி பஸ் நிலையம்

அச்சுவேலி, பெப்.23

அச்சுவேலி பஸ் நிலையம் இரவில் இருளில் மூழ்கிக் கிடப்பதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி பஸ் நிலையம் 50 லட்சம் ரூபா செலவில் வலி. கிழக்கு பிரதேச சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மின் இணைப்பு வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பஸ் நிலையத்தில் மின் விளக்குகள் ஒளிராமல் இருப்பதால் இரவில் இருள் மண்டிக்காணப்படுகிறது.

பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து மூன்று நான்கு தினங்கள் மின்சார விளக்குகள் ஒளிர்ந்தன. அதன் பின்னர் இன்று வரை ஒளிராமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

50 லட்சம் ரூபா செலவில் புதிதாக பஸ் நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் மின் விநியோகம் செய்யப்படாமையால் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-11)

# பிறரை அடித்து காயப்படுத்தும் சம்பவம் குடாவில் அதிகரிப்பு

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தகவல்

யாழ்ப்பாணம், பெப்.23

*யாழ். குடாநாட்டில் பிறரை அடித்துக் காயப்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டில் 34 பேர் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 174 பேர் கடந்தவாரம் மாத்திரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.*

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். குடாநாட்டில் பிறரை அடித்துக் காயப்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. கடந்தவாரம் மாத்திரம் இந்தக் குற்றச்சாட்டில் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 43 பேர் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுக் குற்றச்சாட்டில் 11 பேரும், வீதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 6 பேரும், மது அருந்தி விட்டு கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 9 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 8 பேரும், வெளிநாட்டுப் பணத்தை சட்ட விரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும், சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் 8 பேரும், கொலைக் குற்றச்சாட்டில் 2 பேரும், சந்தேகத்தின் பேரில் 10 பேரும், சட்டவிரோத மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், ஏனைய பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 37 பேரும் மொத்தமாக 174 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், அவர்கள் மீதான குற்றச் செயல்கள் தொடர்பில் சிலர் அபராதம் செலுத்தியுள்ளனர்.

ஒரு பகுதியினர் பிணையில் சென்றுள்ளனர். மற்றொரு பகுதியினர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-86)

# மகாஜனா மாணவர் இரத்ததானம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் சேவை மூலம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இரத்தம் சேகரிப்பு இடம்பெற்றது.

இதன் போது கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் என நாற்பது பேர் இரத்ததானம் வழங்கினர்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி உத்தியோகத்தர்களும் இந்த நடமாடும் இரத்தம் சேகரிப்பு பணியில் இணைந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர் என தெல்லிப்பழை இரத்த வங்கி பொறுப்பு வைத்தியர் தெரிவித்தார். இதேவேளை கடந்த திங்கட்கிழமை இளவாலை கணினி நிலையம் ஒன்றில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 20 இற்கும் மேற்பட்டோர் இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-36)

# பூம்புகார் கடற்பகுதி ஊடாக கால்நடைகள் இரவில் கடத்தல்

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், பெப்.23

அரியாலை கிழக்கு, பூம்புகார் கடற் பகுதி ஊடாக கால்நடைகள் இரவு வேளையில் கடத்தப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் கட்டாக்காலியாக நடமாடும் மாடுகளைத் திருட்டு கோஷ்டியினர் இறைச்சிக்காக இரவு வேளையில் கடத்திச் செல்கின்றனர்.

கடத்தப்படும் இந்தக் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு, பின்னர் கடற்பகுதி ஊடாக கொண்டு செல்லப்படுகின்றன என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கடத்தல் காரணமாகக் கால்நடைகளின் எண்ணிக்கை அருகிச் செல்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பூம்புகார், நாவலடி பகுதியில் முன்னர் ஆயிரக் கணக்கான கால்நடைகள் கட்டாக்காலிகளாக வீதிகளில் நடமாடின.

இந்தக் கால்நடைகளை பாதுகாக்கும் முகமாக அவற்றை வெளிஇடங்களுக்குக்கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தற்போது கடத்தல் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

# நிகழ்வுகள் இன்று

**கண்காட்சி**

மனத்திடம் ஆக்கக் கண்காட்சியும் அறிவூட்டலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம)

**பிறந்தநாள் நிகழ்வு**

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் விழாவை காலை 9 மணிக்கு மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது. தாவடி இராமகிருஷ்ண சமாதியுடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளனர். (ம)

**நடமாடும் சேவை**

தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் நடத்தும் பொது மக்களுக்கான நடமாடும் சேவை காலை 9 மணிக்கு பன்னாலை ஜே/224 கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. ஆட்பதிவு அட்டைகள், மோட்டார் சாரதி பத்திரம் தொடர்பான ஆலோசனைகளும் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-36)

**நூல் வெளியீடு**

உயில் கலை இலக்கிய சங்கத்தின் முதல் வெளியீடாக சி.விமலனின் ''கிளை நதியின் பிரவாகம்'' நூல் வெளியீடு முற்பகல் 10 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியின் வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (ம-14-288)

**சொற்பொழிவு**

பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான சாவகச்சேரி நிலையத்தின் ஏற்பாட்டில் 'ஆளுமை விருத்திக்கு எட்டு வழிமுறைகள்' எனும் தலைப்பிலான சொற்பொழிவு மாலை 4 மணிக்கு இல.23 கந்தையா வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தியான நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)



*சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை பெயர் வளைவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம-17)*

# வடதாரகை பழுதான நிலையில் திருத்தத்துக்கு காரைநகருக்கு

நெடுந்தீவுச் சேவைக்கென வந்த வடதாரகை 2 மோட்டார் படகு கடந்த ஒரு வாரமாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

இது திருத்த வேலைகளுக்கென காரைநகருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவைக்கெனத் தருவிக்கப்பட்ட இந்தப் படகு அந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படாத நிலையில் விருந்தினர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்குமாக தனது சேவையை வழங்கி வந்தது. இப்போது வடதாரகை இயந்திரக் கோளாறு காரணமாக காரைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் இடம்பெற்று பிரமுகர்கள் செல்வதற்காக அது வந்து சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## நெஞ்சை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பகல் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. சர்வதேச மன்னிப்பு சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இதில் இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் பாதுகாப்பான பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களிலும் இலங்கை இராணுவம் கொத்துக் கொத்தாக குண்டுவீசிய கொடூரத்தை வெளிப்படுத்தும் காட்சிகள், ஊரெங்கும் மக்கள் உயிரிழந்து சடலங்களாகக் கிடக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

தாயும் குழந்தையும் ஒன்றாக வீழ்ந்து கிடப்பது, மருத்துவமனைகளில் நூற்றுக் கணக்கானோர் உடல் சிதைந்த நிலையில் சிகிச்சை பெறுவது போன்ற நெஞ்சை உறைய வைக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

பெண்கள் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சிகளும் இதில் உள்ளன. மேலும், விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பல பெண்களை ஒரு டிரக்கில் ஏற்றி இராணுவத்தினர் அழைத்துச் செல்கின்றனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

இலங்கை இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷ், மன்றாடும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தியிருப்பதும், இதனால் தமிழர்களின் உயிர் கொத்துக் கொத்தாகப் பறிக்கப்பட்டதாகவும் ஆவணப் படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20 நிமிடக் காட்சிகளைக் கொண்ட இந்த ஆவணப் படம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(த)

## ஜெனிவாவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆதரிக்க வேண்டும் என்று, இந்தக் குழுவினர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் வலியுறுத்தினர்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதன் மூலம், தமிழர்களுக்கு நிச்சயம் நீதி கிடைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர்கள், வடக்கு மாகாணத்தில் நீதியான தேர்தலை நடத்தவும், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கும் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பை முடித்து வெளியே வந்த தமிழகக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மான விடயத்தில் இந்தியா கடந்தமுறை எந்த நிலைப்பாட்டை எடுத்ததோ அதே நிலைபாட்டையே இம்முறையும் கடைப்பிடிக்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,எஸ்.வி.சித்தன், எம்.கிருஸ்ணசாமி, கே.எஸ்.அழகிரி, ஜே.எம்.ஹரூன், எஸ்.எஸ். ராமசுப்பு, பி.விஸ்வநாதன், மாணிக்கம் தாகூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பாலச்சந்திரன் பா த்தூ ன் போரா ட ம்

இதற்கிடையே, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படுகொலை விவகாரம், நேற்றும் இந்திய நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது.

நேற்றுக் காலை இந்திய நாடாளுமன்றம் கூடிய போது, படுகொலை செய்யப்பட்ட பாலச்சந்திரனின் ஒளிப்படங்களை ஏந்திய படி, அ.தி.மு.க, திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

இலங்கை அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பியபடி, சபாநாயகர் மீரா குமாரை நோக்கி அவர்கள் முன்னேறிச் சென்றனர். இதையடுத்து நாடாளுமன்றம் நண்பகல்வரை ஒத்திவைக்கப்பட்டது.(த)

## பிரேரணை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் மாத்தாய், நேற்றுமுன்தினம் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரச் செயலாளர் வெண்டி ஷேர்மன், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் நான்சி ஜே.பவல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர்களாக புதிதாகப் பதவியேற்ற பின்னர் இரு நாட்டு அமைச்சர்களும் சந்தித்துப் பேசும் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின்போது அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதார ரீதியிலான இருதரப்பு உறவு, பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் குறித்தும் பேசப்பட்டிருப்பதுடன், ஜெனிவா விவகாரம் தொடர்பிலும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போதே இலங்கைக்கு எதிராக தமது அரசு கொண்டுவரவுள்ள பிரேரணை குறித்த முழு விளக்கத்தையும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரி, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த பிரேரணைக்கு இந்தியாவின் ஆதரவையும் அவர் கோரியுள்ளார். குறிப்பாக, ஆசிய பிராந்தியத்தில் அமைதி நிலவவேண்டும் என்பதில் அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் இலங்கையில் நல்லிணக்கத்துக்கான பாதையைத் திறந்துவிடும் வகையில் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. இதற்கு தெற்காசிய பிராந்தியத்தின் முக்கிய பங்காளியான இந்தியாவின் ஆதரவு அவசியம் என அமெரிக்கா கருதுகின்றது என்றும் இந்தச் சந்திப்பின் போது இந்தியத் தரப்பிடம் அமெரிக்கக் குழு எடுத்துரைத்துள்ளது என்றும் இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ''கடந்த முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அலட்சியப்படுத்தி சர்வதேசத்தின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. அங்கு மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பொறுப்புக்கூறலில் முன்னேற்றமில்லை என்பது உட்பட இலங்கைத் தொடர்பில் மேலும் பல விடயங்களை இந்தியாவின் இராஜதந்திர குழுவுக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன், ஈரானிலிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(த-சி)

## இலங்கைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாளை மறுதினம் திங்கட்கிழமை வெளியிடப்படும் என நியூயோர்க்கைத் தளமாக கொண்டு இயங்கும் மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள் மீது இலங்கைப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட வன்புணர்வுகள், பாலியல் துன்புறுத்தல்கள், மூன்றாந்தரச் சித்திரவதைகள் குறித்து இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாங்கள் உங்களுக்கு ஒரு பாடம் கற்பிப்போம். தமிழர்களுக்கு எதிரான இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் பாலியல் வன்முறைகள்- என்ற தலைப்பில் வெளியிடப்படவுள்ள இந்த அறிக்கையில், 2006ஆம் ஆண்டுக்கும் 2012ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசின் இரகசிய மற்றும் அதிகாரபூர்வத் தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற 75 பாலியல் வன்புணர்வுகள் மற்றும் துன்புறுத்தல்கள் குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

2009 மே மாதம் விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர், தடுப்புக்காவலில் பரந்தளவிலான பாலியல் வன்புணர்வுகள் இடம்பெற்றுள்ளன. அரசியல் நோக்குடனான பாலியல் வன்முறைகள் இலங்கைப் படைகளாலும் பொலிஸாராலும், தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டறிந்துள்ளது என்று அந்த அமைப்பின் ஆசியப் பிரிவுப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

### தற்போதும் தொடர்வதாக அறிவிப்பு

இலங்கைப் படைகளால் தடுப்புக்காவலில் உள்ள எண்ணிலடங்காத தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் மீது பாலியல் வன்புணர்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவை போர்க்காலக் கொடுமைகள் மட்டுமல்ல, தற்போதும் தொடர்கின்றன.

விடுதலைப் புலிகள் சந்தேகநபர் என்று கைது செய்யப்படும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தீவிரமான ஆபத்தை எதிர்நோக்குகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் படையினரின் பாலியல் குற்றங்களை, விடுதலைப் புலிகள் ஆதரவு பரப்புரை என்றும், பொய் என்றும் இலங்கை அரசு நிராகரித்துள்ளது. இலங்கை அரசு இந்த மீறல்கள் குறித்து விசாரிக்கத் தவறியுள்ளதால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மூலம் அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள 75 பேரின் சாட்சியங்களில், மூவரின் சாட்சியங்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பிலுள்ள தனது வீட்டில் இருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பிடித்துச் செல்லப்பட்ட 31 வயதான தமிழ்ப்பெண் கூறுகிறார்.

கொழும்பில் நாலாம் மாடியில் உள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணியகத்துக்கு நான் கொண்டு செல்லப்பட்டேன்.

எனக்கு குடிக்க நீரோ, உணவோ தரப்படவில்லை. அடுத்த நாள், சீருடை அணிந்த ஒரு அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் என்னைப் படம் பிடித்தனர். எனது கைவிரல் அடையாளங்களை பதிவுசெய்தனர். வெற்றுத் தாளில் எனது கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டனர்.

எனது கணவர் பற்றிய எல்லா விவரங்களையும் தாம் வைத்துள்ளதாகவும், அவர் எங்கே பதுங்கியுள்ளார் என்ற விவரத்தை கூறிவிடுமாறும் அவர்கள் என்னிடம் கேட்டனர். எனது கணவர் வெளிநாடு சென்றுவிட்டதாக அவர்களுக்கு கூறினேன். அவர் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக, அவர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டினர்.

பல்வேறு பொருள்களால் நான் தாக்கப்பட்டேன். விசாரணையின்போது, வெண் சுருட்டினால் சுடப்பட்டேன்.

மணல் நிரப்பிய குழாயினால் தாக்கப்பட்டேன். அடித்துக் கொண்டே எனது கணவர் பற்றிய விவரங்களை கேட்டனர்.

ஒரு இரவில் நான் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டேன். சாதாரண உடையில் இரண்டுபேர் எனது அறைக்குள் வந்து என்னை வன்புணர்வுக்கு உட்படுத்தினர். அவர்கள் சிங்களத்தில் பேசினர். வேறு எதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது இருளாக இருந்ததால், அவர்களின் முகங்களை தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

### இளைஞர் கூறியதாக...

2012 ஒகஸ்ட் மாதம் பிடிக்கப்பட்ட இன்னொரு 23வயது இளைஞர் கூறுகிறார் -

அவர்கள் எனது கண் கட்டை அவிழ்த்துவிட்டபோது, நான் ஒரு அறைக்குள் இருப்பதைக் கண்டேன். அங்கு மேலும் நால்வர் இருந்தனர். நாற்காலி ஒன்றுடன் சேர்த்துக் கட்டப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளுடனான எனது தொடர்புகள் குறித்து விசாரிக்கப்பட்டேன். அண்மையில் வெளிநாடு சென்றதற்கான காரணம் என்ன என்று கேட்டனர்.

என்னைக் கட்டி வைத்து அடிக்கத் தொடங்கினர். மின் வயரினால் அடித்தனர். வெண் சுருட்டினால் சுட்டனர். பெற்றோல் நிரப்பிய பொலித்தீன் பைக்குள் அமுக்கினர். பின்னர் அன்றிரவு, நான் சிறிய அறை ஒன்றுக்குள் கொண்டு செல்லப்பட்டேன். தொடர்ந்து மூன்று நாள்களாக நான் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டேன். முதல் நாள் இரவு ஒருவர் தனியாக வந்து வன்புணர்வுக்கு உட்படுத்தினார்.

இரண்டாவது மூன்றாவது நாள்களில் இரண்டு ஆண்கள் எனது அறைக்கு வந்தனர். அவர்கள் என்னைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர்.

இதனை அடுத்து எனக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளதாக கூறும் ஆவணத்தில் நான் கையெழுத்திட்டுக் கொடுத்தேன்.

### மூன்றாவது நபர் கூறியதாக...

2009 மே மாதம் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த மற்றொரு இளைஞர் கூறுகிறார்-

இரண்டு அதிகாரிகள் எனது கைகளைப் பின்புறம் பிடித்திருக்க, ஒருவர் எனது அந்தரங்க உறுப்பில் உலோகத்துண்டு ஒன்றைச் செலுத்தினார். இலங்கையில் இருந்து நான் தப்பி வந்த பின்னர் அவை சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

இதற்கு ஆதாரமான மருத்துவ அறிக்கையும் உள்ளது என்று கூறியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

இதுபோன்ற சித்திரவதைகள், பாலியல் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் பலரும் தமக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாக ஒப்புக்கொள்ளும் ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளனர். இவ்வாறு சாட்சியமளித்துள்ளவர்கள் எவரும் முறைப்படியாக விடுதலையாகவில்லை-என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

(த)

## தமிழ்த்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முன்னாள் கல்முனை மேயரும் செனட்டருமான மசூர்மௌலானாவின் அகவை 80 நிறைவு விழா கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் தலைமையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் பெறவேண்டியவற்றை இலகுவாகப் பெறமுடியும்.

இந்த இரண்டு சிறுபான்மை இனங்களும் இணைந்து செயற்படுவதே இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரே வழியாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரின் மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை இந்தக் கட்சியில் ஒன்றிணைக்க முடியும். தமிழ்த் தேசியமும் முஸ்லிம் தேசியமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை முன்னர் எப்போதையும் விட இப்போது அவசியமானது.

முஸ்லிம்களில் பல்துறை சார்ந்தவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் அஷ்ரப் எவ்வாறு நுழைத்துக்கொண்டாரோ அப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் முஸ்லிம்களையும் உள்வாங்க வேண்டும்.

முஸ்லிம்களின் அபிலாஷைகளைத் தமிழ் தலைவர்கள் உள்வாங்க வேண்டும். அதற்கு ஏற்ப செயற்பட வேண்டும். ஒரே தமிழ், முஸ்லிம் தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் உரிமை போராட்டங்களை வலுவாக முன்னெடுக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் போட்டி அரசியல் நடத்துவதற்கான காலம் இதுவல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளும் இதை கவனத்திற்கொள்ள வேண்டும். சோரம் போகும் தமிழ்த் தலைமையை உண்மையுள்ள முஸ்லிம்கள் ஒருபோதும் வரவேற்கமாட்டார்கள்-என் றார். (த)

## விபத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சைக்கிளுக்குக் குறுக்காக நாய் ஒன்று பாய்ந்துள்ளது. அதனால் நிலைகுலைந்து வீழ்ந்த மோட்டார் சைக்கிள் வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு அருகில் இருந்த மதிலுடன் மோதியுள்ளது.

இதில் சகோதரர்களில் ஒருவருடைய தலையில் மிகவும் மோசமாக அடி வீழ்ந்துள்ளது. அத்துடன் முகமும் சிதைந்துவிட்டது.

அந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் பலத்த படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொதுமக்கள் இல்லாததை அடுத்து விபத்துப் பற்றிய விடயத்தைப் படுகாயத்துக்கு உள்ளான சகோதரர் தனது கையடக்கத் தொலைபேசி மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள நண்பர்களுக்கு அறிவித்துள்ளார்.

நண்பர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனங்களில் வந்தே இவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்தில் இராஜ்குமார் ரவிராஜ் (வயது -24) என்பவரே உயிரிழந்தவராவார். படுகாயங்களுக்கு ஆளாகிய இராஜ்குமார் ரகுராஜ் (வயது-24) என்பவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-4-5-86)

## குற்றச்சாட்டுகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இது குறித்து இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இவை.வெளிநாடுகளில் வாழும் சில தீய சக்திகள் வேண்டுமென்றே ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து கொண்டு இலங்கைப் படையினர் குற்றம் செய்தார்கள் என்று கூறுபவர்கள் இலங்கைக்கு வந்து இங்குள்ள தமிழர்களிடம் கேட்டு உண்மை நிலையை அறிய வேண்டும். உள்நாட்டிலுள்ள தமிழர்கள் இராணுவம் தொடர்பில் நன்கு அறிவார்கள்-என்றார். (த)

## ஜெனிவா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செல்லும் குழுவுக்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் அதற்கு தான் இணங்கியுள்ளதாகவும் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா கூட்டத்தை எதிர்கொள்வது குறித்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தி லேயே மகிந்த சமரசிங்கவை ஜெனிவாவுக்கு அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (த)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தட்டிக் கழிக்கும் போக்கு இவ்விதமே தொடர்ந்தால்....

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 வது கூட்டத் தொடர் நாளை மறுதினம் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கிறது. அத் தொடரிலே இலங்கைக்கு எதிராக இரண்டாவது பிரேரணை ஒன்றை அமெரிக்கா சமர்ப்பிக்கவிருப்பதைப் பின்புலமாகக்கொண்டு உருவாகியுள்ள பல்வேறு விதமான பிரதிபலிப்புகளை ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

பிரதானமாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் 12 வயது பாலகனின் கொலை தொடர்பான படங்கள் பிரதிபலிப்புகளுக்கு வகை செய்துள்ளன. இப்படங்கள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் கொந்தளிப்புகளை உருவாக்கியுள்ளன.

இந்திய நாடாளுமன்றத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நிதி நிலை அறிக்கை தொடர்பான கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது இடையூறு விளைவித்திருக்கிறார்கள். அதேசமயம் இலங்கைத் தமிழருக்கு, அமைதியான, கௌரவமான வாழ்வை வழங்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வகையில் பிரணாப் முகர்ஜியும் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது தமிழ் நாட்டு உறுப்பினர்களை ஆசுவாசப்படுத்துவதற்காக அவர் வெளியிட்ட கருத்தாக மட்டும் கருதிவிட இயலாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போரைத் தொடங்கிய காலத்திலிருந்து, இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் இலங்கை அரசு வழங்கி வந்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காட்டி வரும் இழுத்தடிக்கும் போக்கை அதற்கு நினைவுறுத்துவதாகவும் இனி வரப்போகும் காலத்தில் இந்தியா எடுக்கப்போகும் நிலைப்பாட்டினை சூசகமாக எடுத்தியம்புவதாகவும் கூட எடுத்துக்கொள்ளலாம்.

இந்திய ஜனாதிபதியின் இந்தக் கருத்து இந்திய மத்திய அரசின் கொள்கை வெளிப்பாடு என்பதால் சர்வதேச மட்டத்தில் உருவாகியுள்ள சூழ்நிலைகளை இந்தியா எந்த வகையில் கையாளப்போகிறது என்ற வகையிலான ஒரு முன்னோட்டம் என்றும் இதனைக் கொள்ளலாம்.

கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததால் இந்திய அனுசரணையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தைக்கூட செல்லாக் காசாக்கி விடுவதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி கடந்த வருடம் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைத் தரப்பில் கலந்து கொண்ட வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் ஜனாதிபதியின் மனித உரிமை விவகாரங்களுக்கான சிறப்பு ஆலோசகரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்கவும் அந்த கௌரவமான சபைக்கு வழங்கிய வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமான அம்சங்களைக்கூட செயற்படுத்த இலங்கை தவறிவிட்டது என்பது மிகவும் அப்பட்டமானது. இது குறித்த ஆதங்கத்தை மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் தமது அறிக்கையில் பேரவைக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

கடந்த முறை அமைச்சர்களின் ஒரு பட்டாளமே ஜெனிவா சென்றிருந்தது. அவர்களுடன் சம்பந்தமே இல்லாத அதிகாரிகளும் படையெடுத்திருந்தார்கள். அவ்வாறிருக்க இந்த முறை அமைச்சர் மட்டத்திலான குழு எதுவும் ஐ.நா. மேடைக்கு போகாமல் விடுவதற்கு காரணம் என்ன?

கடந்த முறை பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் முறையாக நிறைவேற்றப்படவில்லை. அதனால் தான் அமைச்சர்கள் எவரும் விழுந்தடித்துக் கொண்டு அங்கு செல்வதாக இல்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கிண்டல் செய்திருக்கிறார். இதில் நிறைந்த அர்த்தம் உள்ளது. கடந்த முறை ஒருவருட அவகாசம் கேட்டுவாங்கிக் கொண்டு வந்தவர்கள் அங்கு இம்முறை எழுப்பப்படக்கூடிய கேள்விகளுக்கு எத்தகைய பதில்களை வழங்குவார்கள்?

இந்த ஒருவருட காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் என்று எதை எதையெல்லாம் அரசு தரப்பில் எடுத்துக் காட்டுவதாக இருக்கும்.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தாக்கப்பட்டமை, அமைதியாக மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் முன்றிலில் நடத்திய உண்ணாவிரதம் குழப்பப்பட்டமை, கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாக விளக்கு ஏற்றி அஞ்சலி செலுத்திய மாணவர்களைத் தாக்கியமை, கைது செய்து காவலில் வைத்தமை இவையும் இவை போன்ற சம்பவங்கள் எல்லாம் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு முற்று முழுதாக நேர்மாறானவை.

இத்தகைய செயற்பாடுகள் வேண்டும் என்றே திட்டமிட்டு நடத்தப்படுபவை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு என்ன, வேறு எந்தக் கொம்பனும் எதனையும் செய்துவிட முடியாது என்ற இறுமாப்பு தொடரும் நிலையே தென்படுகிறது.

இந்தப் போக்கினால் நெருக்கடிகள் மேன்மேலும் குவிந்து பாதகமான விளைவுகள் உண்டாகும் என்பதனை இப்போதும் உணர மறுத்தால், யானை தன் தலையிலேயே மண்ணை வாரி தூற்றுவதற்கு ஒப்பானதாகவே தேறும்.

# பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவருக்கு கல்வி ஊக்குவிப்பு

அச்சுவேலி, பெப். 23

இந்த வருடம் பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களுக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியில் இருந்து கல்வி ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதிக்குத் தகுதியானவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் 2011 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றி இந்த வருடம் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

நிதி உதவி பெறத் தகுதியான மாணவர்கள் சுய விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பத்துடன், பல்கலைக்கழக தெரிவு தொடர்பான கடிதத்தின் பிரதியுடன் 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித் துள்ளார். (ம-11)

# பனை மரங்களைக் கணக்கெடுக்க கொழும்பில் இருந்து வருகிறது குழு

யாழ்ப்பாணம், பெப். 23

பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் இலங்கையில் உள்ள பனை மரங்களின் எண்ணிக்கை களைக் கணக்கெடுக்கும் பணிகள் இந்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் உள்ள பனை மரங்களின் எண்ணிக்கைகளைக் கணக்கிடும் பணிகள் இந்த மாதம் 26 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பனை வள புள்ளி விவர ஆராய்ச்சி தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

தகவல் திரட்டும் உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் 26 ஆம் திகதி, 27 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் தங்கி நின்று செயற் படவுள்ளனர்.

கிராம சேவகர், பிரதேச செயலர் ஆகியோருடன் விவசாய ஆராய்ச்சியாளர் உத்தியோகத்தர்களும் இணைந்து இந்த பனை கணக்கிடும் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த வருடங்களில் இலங்கை முழுவதும் 11 மில்லியன் பனைகள் உள்ளன என்றும் யாழ். மாவட்டத்தில் அண்ணளவாக 35 இலட்சம் பனைகள் உள்ளன என்றும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

போர்க் காலங்களிலும் பல்வேறு தேவைகள் காரணமாகவும் பல மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

தற்போது இருக்கும் பனைகளின் எண்ணிக்கையை கணக்கிட்டுக் கொள்வதற்காகவே இந்த உத்தியோகத்தர்கள் வருகை தரவுள்ளனர்.

கொழும்பில் இருந்து 3 பேர் கொண்ட குழு யாழ்ப்பாணத்துக்கு இந்த மாதம் வருகை தரவுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (ம-13)

# புன்னியாமீனின் நூல் வெளியீடு

கொழும்பு, பெப். 23

கலாபூஷணம் புன்னியாமீன் எழுதிய உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபரின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளையும் உளவியல் அடிப்படைகளையும் உள்ளடக்கிய "ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா" எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு 07, 191, தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஜே.ஆர். ஜயவர்த்தன கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழக கல்விப்பீடப் பேராசிரியர் மா.கருணாநிதி தலைமையில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் மனோவைத்திய நிபுணர் மருத்துவர் நிரோஷ மெண்டிஸ் பிரதம விருந்தினராகவும், மேடைப் பேச்சாளரும் விமர்சகருமான அல்ஹாஜ் என்.ஏ.ரஷீட் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் இருமொழி வித்தகர் கே.எஸ். சிவகுமாரன், சேவைச் செம்மல் அரூஸ் ஹாஜியார், சீர்மியச் செம்மல் திருமதி யமுனா பெரேரா, சேவைச் செம்மல் அல்ஹாஜ் அனீப் மௌலானா, இதழியல் வித்தகர் அல்ஹாஜ் என்.எம். அமீன், சீர்மியச் செம்மல் எம்.எஸ். மொஹம்மட் அஸ்மியாஸ் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-13)

# மாணவரின் கல்வியை மேம்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 23

வடமாகாண கல்வித் திணைக் களத்தினர் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த பாடக் கல்வியமைப்பை மாற்றுவதற்கான செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்காக மாகாண கல்வித் திணைக்களத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும் வலயக் கல்வி அலுவலகங்களில் அபிவிருத்தி உதவியாளர்களையும் நியமிக்கவுள்ளனர்.

இந்தத் திட்டத்தை மேற்கொள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட விரும்பும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்தில் உள்ளவர்களின் பெயரையும் செயற்றிட்டத்தினை மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி உதவியாளரின் பெயர் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

ஓர் அறிவுக் கேந்திரத்துக்கான அத்திவாரமாக பாட கல்வியமைப்பை மாற்றுவதற்காக செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

# வன்முறைகளை மூடி மறைக்கும் பெண்கள் உளநோயால் பாதிப்படையும் அபாய நிலை

## இலங்கை பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் தமது பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும். மாறாக பிரச்சினைகளை வெளிக்கொணராமல் மூடி மறைப்பதன் மூலம் உளநோயாளிகளாக மாற வேண்டிய அபாய நிலை ஏற்படும்.

இவ்வாறு இலங்கைப் பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் ஆர்.எ.சூலானந்த சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் இலங்கைப் பணியகத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களின் பிரச்சினைகள் வெளிக்கொணரப்படுவதில்லை. பாதிக்கப்படும் பெண்களும் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில்லை.

குடும்ப கௌரவம், உறவுகளிடையான பாசப் பிணைப்பு, பிள்ளைகளின் எதிர்காலம் இவற்றைக் கருத்தில் கொண்டு தமக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தமக்குள்ளே வைத்துக்கொள்வார்கள்.

இதனால் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள் அதிகமாக வெளியே தெரிவதில்லை. சமூகத்தில் உள்ளவர்கள் இதனை அறிந்து கொள்ள முடியாதவர்களாக பெண்கள் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக உள்ளார்கள் என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

சமூகத்தின் இத்தகைய வரைமுறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களும் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் தமது உரிமைகளைச் சுதந்திரமாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தமக்கு ஏற்படக்கூடிய வன்முறைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

அத்துடன் பெண்கள் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறலாம்.

இதன் மூலம் சமூகத்தில் இருக்கக் கூடிய ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிப்பதுடன் தமக்கு ஏற்படக்கூடிய உளத்தாக்கங்களில் இருந்து விடுபட முடியும்.- என்றார். (ம-14)

### மாரி கால அசௌகரியத்தை தவிர்க்க

## நொச்சிமோட்டையில் பாலம் அமைக்குமாறு கோரிக்கை

வவுனியா, பெப்.23

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் பாலம் ஒன்றை அடுத்த மாரி காலத்துக்கு முன்னர் அமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதியில் பெய்த மழையின்போது நொச்சிமோட்டைப் பகுதியிலுள்ள வீதியை ஊடறுத்து 3 அடிக்கு மேலாக வெள்ள நீர் பாய்ந்து சென்றது. இதன் காரணமாக ஏ-9 வீதிக்கான போக்குவரத்து சில மணிநேரம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதனால் இங்கு வீதிக்குக் கீழான புதிய பாலம் ஒன்றை அமைப்பதன் மூலமாக வெள்ள நீர் செல்வதற்கான வழி ஏற்படுத்தப்படும். இதன் மூலமாக மழை காலங்களில் ஏற்படக் கூடிய போக்குவரத்துத் தடைகளைத் தவிர்க்க முடியும் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த வீதியின் இருமருங்கிலும் அகலமான வடிகால்கள் அமைக்கப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## வவுனியா பொது மருத்துவமனையில் இலவச ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை

### உலோகத் துண்டுகளையும் அகற்றலாம்

வவுனியா,பெப்.23

வவுனியா பொது மருத்துவமனையில் இலவச ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

இந்த ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை (பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை) நாளை மறுதினம் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்திருக்கும் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் அல்வின் ஞானஜெயமணி தலைமையில் வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவர்களும் இணைந்து இந்த அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கு லண்டன் இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கிய சபையும், ஜெப ஆலய மிசனும் ஒருங்கிணைந்து அனுசரணை வழங்குகின்றன.

இந்த முகாமில் தீக்காயம், மணிக்கட்டு, கைவிரல் சம்பந்தமான நோய்கள், கோரமான வடுக்கள், கால் சம்பந்தமான காயங்கள், 'துண்டிக்கப்பட்ட நரம்புகள்', நாள்பட்ட புண்கள், பிறப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்குச் சிகிச்சை வழங்கப்படும். மேலும் உலோகத் துண்டுகள், உடைந்த கண்ணாடித் துண்டுகள் ஆகியவற்றை உடலின் உட்பாகத்திலிருந்து அகற்றுதல், மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சை என்பனவும் மேற்கொள்ளப்படும்.

மேற்படி இலவச சிகிச்சையைப் பெற விரும்புபவர்கள் நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா பொதுவைத்தியசாலையின் வாய், தாடை, முகம் சத்திர சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு உரிய ஆலோசனைகளையும் பின்னர் பொருத்தமான காலப்பகுதியில் அறுவைச் சிகிச்சையையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வைத்திய அத்தியட்சகர் பி.சத்தியமூர்த்தி அறிவித்திருக்கிறார். (க)

# அபிவிருத்தியை காணாத வன்னேரிக்குளம் மக்கள்

**60 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமம் மருத்துவம், வாழ்வாதாரம் ஆகிய பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியைக் காணாத நிலையில்.**

அக்கராயன்,பெப்.23

வன்னேரிக்குளம் கிராமம் அபிவிருத்தியைக் காணாத நிலையில் உள்ளதாக அப்பகுதிக் கிராம மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள மக்கள் மீள்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தக் கிராமத்தின் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம் செல்லும் சுமார் 10 கிலோ மீற்றர் நீளமான வீதி மழை காலங்களில் நடந்து செல்வதற்குக் கூட முடியாத நிலையில் உள்ளது. இந்த வீதி பெரிய குழிகளுடன் காணப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 10 நாள்களுக்குள் வன்னேரிக்குளம் வீதி தற்காலிகமாகப் புனரமைக்கப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் ஒரு வருடம் கடந்த நிலையிலும் வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமம் மருத்துவம், வாழ்வாதாரம் ஆகிய பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியைக் காணாத நிலையிலேயே உள்ளதாகவும் தெரிய வருகின்றது. இங்கு சுமார் 460 குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### பாடசாலைகளில் இட நெருக்கடி 2015 ஆம் ஆண்டுக்குள் தீர்ந்து விடும்

#### உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன்,பெப்.23

2015 ஆம் ஆண்டுக்குள் பாடசாலைகளில் இடநெருக்கடியற்ற சூழலை உருவாக்குவோம். இவ்வாறு கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல-02 பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று சிறப்பானதொரு இல்ல மெய்வன்மைப் போட்டியை இந்தப் பாடசாலை சமூகத்தினர் நடத்திக் காட்டியுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் பல்வேறு நெருக்கடிகள் காணப்படுகின்றன. வலயக் கல்விப் பணிமனை, 2015 ஆம் ஆண்டுக்குள் இடநெருக்கடியற்ற வகையில் கட்டட வளங்களை உருவாக்குவதில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.- என்றார்.

பாடசாலை அதிபர் திருமதி இ.இரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் சந்திக்க பஸ்நாயக்கா உட்படப் பலர் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க-18)

### வவுனியாவில் நாளை நூல் வெளியீடு

வவுனியாவில் 'மௌன மொழிகள்' என்ற கவிதை நூல் வெளியீடு நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் யாழரசு எழுதிய இந்த நூல் வெளியீடு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா ஆதிவிநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினர்களாக சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் செல்வி மு.அன்னமலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-402)

## அடிப்படைத் தேவைகள் கிடைக்காத பெரிய பரந்தன் கிராம மக்கள்

அக்கராயன்,பெப்.23

கிளிநொச்சி பெரிய பரந்தன் கிராமத்துக்குரிய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையால் இங்கு வசிக்கும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி - பூநகரி வீதியில் உள்ள பெரியபரந்தன் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இங்குள்ள வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றன. மேலும் குடிதண்ணீருக்குக் கூட பெரியளவில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அத்துடன் சீரான போக்குவரத்து வசதிகளும் மேற்கொள்ளப்படாமையால் இங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (க-6)

## வள்ளிபுனம் கிராமத்துக்கு முதற்கட்ட இந்திய வீடுகள்

புதுக்குடியிருப்பு,பெப்.23

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கிராமத்தில் 112 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இந்திய நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வள்ளிபுனம் கிராம அலுவலர் பிரிவில் தற்போது 540 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இதில் 112 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடனான நிரந்தர வீட்டுத் திட்டங்களுக்கான அனுமதி கிடைக்கப்பெற்று ஆரம்பக் கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை ஏனைய குடும்பங்களுக்கும் குறித்த வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்குரிய ஆய்வுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## இந்த வீதியில் பயணிப்பது எப்படி? மிரளுகின்றனர் சாரதிகள், பயணிகள்!


கிளிநொச்சி, பெப்.23

கிளிநொச்சி கண்டாவளைக் கிராமத்திலுள்ள பிரதான வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வாகனங்களில் வரும் மக்கள் இந்த வீதியைப் பார்த்து மிரளுகின்றனர். சாரதிகள் வாகனங்களை அச்சத்துடனேயே இந்த இடத்தில் செலுத்துகின்றனர்.

கண்டாவளைக் கிராமத்தில் 375 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 600 இக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இங்குள்ள பிரதான வீதியான வெலிக்கண்டல், கண்டாவளை பிரதான வீதி புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் குன்றும் குழியுமாக நீண்டகாலமாகவே காணப்படுகின்றது.

மேலும் கடந்த சில நாள்களாகப் பெய்த மழை வெள்ளம்



காரணமாகவும், இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையாலும் குறித்த பிரதான வீதியை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்து சென்றுள்ளது. இதனால் இந்த வீதியில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. தற்போது இதனூடாக எவரும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இங்கு வசிக்கும் மக்கள் தமது தேவைகளுக்கென வெளி இடங்களுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதியைத் தற்காலிகமாகவேனும் புனரமைத்துத் தருமாறு பிரதேச செயலர் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களிடம் மக்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லையென இங்கு வசிக்கும் மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-6)

## பலகை அரிந்த தொழிலாளியின் விரல்கள் துண்டாகின

தென்மராட்சி, பெப். 23

தளபாட உற்பத்திக்கு பலகை அரியும் பணியில் ஈடுபட்ட வேளையில் பலகையுடன் இணைந்திருந்த இரு விரல்கள் அரியும் இயந்திரத்தினுள்சிக்கிதுண்டாடப்பட்டன.

இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் கெற்பேலி மத்தியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் கைலைநாதன் (வயது 29) என்பவர் கை விரல்கள் வெட்டப்பட்டுதொங்கிய நிலையில்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## உதவிக் கொடுப்பனவு வந்து சேர்ந்துள்ளது

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவின் ஊடாக சுய தொழில் உதவி கோரி விண்ணப்பித்த கைதடி கோவிலாக்கண்டியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் நிருபராணி என்பவருக்கான உதவிக் கொடுப்பனவுத் தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயனாளி தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், பெப்.23

கொழும்புத்துறை, மணியம் தோட்டம் பகுதியில் உள்ள சகல வீதிகளுக்கும் மின்சார வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

முதலாம் குறுக்கு வீதியில் இருந்து 12 ஆம் குறுக்கு வீதி வரைக்குமான பகுதிகளுக்கு இந்த மின்சார வீதி விளக்குகள் பொருத்தப் பட்டு வருகின்றன. அதனை விட பிரதேசத்தில் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்ட மின்சார வீதி விளக்குகளுக்கு மேலதிகமாகவும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## இரு பிரிவுகளாகச் செயற்படும் தொழில்வழிச் சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். போதனா வைத்தியசாலையில் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவு தற்போது இரு பிரிவாகச் செயற்பட்டு வருகிறது.

அங்கங்கள் செயலிழந்தவர்களுக்கு சிகிச்சையை வழங்கும் இந்தச் சிகிச்சைப் பிரிவு இடப்பற்றாக்குறை காரணமாக கடந்த காலங்களில் ஒரு பிரிவில் மட்டுமே சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

எனினும் யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டட வசதிகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கென இரு பிரிவுகளில் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவுகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரிவாக ஐந்தாம் விடுதியில் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவு முன்னர் இயங்கி வந்த இடத்திலும், பெரியவர்களுக்கான சிகிச்சைப் பிரிவு 24 ஆம் விடுதிக்கு பின்புறமாகப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திலும் செயற்பட்டு வருகின்றன.

குழந்தைக்கான தொழில் வழிச் சிகிச்சைகளை காயத்திரி குணவர்த்தனவும், பெரியவர்களுக்கான தொழில் வழிச் சிகிச்சைகளை எஸ். கணேசலிங்கமும் வழங்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்துக்கான பிரதான தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவுகளாக இவை செயற்பட்டு வருகின்றன.

தற்கொலை முயற்சி, விபத்து, பிறப்பு மற்றும் நோய் போன்ற காரணங்களால் அங்கங்கள் செயலிழந்து வலுவிழந்துள்ளவர்களுக்கான சிகிச்சைகளை இந்தச் சிகிச்சைப் பிரிவு வழங்கி வருகிறது.

நாளாந்தம் 20 இற்கும் மேற்பட்டவர்கள் இந்தச் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-14)

## குடாநாட்டுக்குச் சீராக மின்சாரம் விநியோகம்

### மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். குடாநாட்டில் தற்போது மின்சாரம் சீராக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் கூறினார்.

குடாநாட்டுக்கான 24 மெகாவாட் மின்சாரம் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த 24 மெகாவாட் மின்சாரம் மூலம் குடாநாட்டுக்கான மின்சார விநியோகம் தடங்கல் எதுவும் இன்றி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், சில இடங்களில் திருத்த வேலைகள் மற்றும் வீதி புனரமைப்புக்கான மின்கம்பங்கள் பின்னகர்த்தல் போன்ற காரணங்களால்தான் மின்சாரம் தடைப்படுகிறது.

அதனை விட ஏனைய பிரதேசங்களில் மின்சாரம் தடங்கல் எதுவும் இன்றி விநியோகிக்கப்படுகின்றது.

அவசர திருத்தப் பணிகள் இருந்தால் மட்டும் முன்னறிவித்தலுடன் மின்வெட்டு இடம்பெறும்.

திடீர் என்று மின்சாரம் தடைப்படும் பட்சத்தில் மின்சார சபைக்கு தெரியப்படுத்தலாம்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# அரசுக்கு எதிரான அறிக்கைகளை, கண்டனங்களை வெளியிட முடியாத நிலையில் இந்து குருமார்கள்

### உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படும் என்ற அச்சமே காரணமாம்

யாழ்ப்பாணம், பெப். 23

இந்து குருமார் அரசுக்கு எதிரான அறிக்கைகளையோ கண்டனங்களையோ வெளியிட முடியாத சூழலே நிலவுகிறது. இந்து குருமாராகிய எமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படும் என்ற அச்ச நிலைமையே இதற்குக் காரணம். எனவேதான் நாம் மௌனம் காத்து வருகிறோம்.

இவ்வாறு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான ஊடகவியாலாளர் சந்திப்பு நடைபெற்றது.




இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 132 கிறிஸ்தவ குருமார் கையெழுத்திட்டு ஐ.நாவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதுபோன்று அறிக்கையை இந்துகுருமார் என்ற ரீதியில் வெளியிட முடியாது உள்ளது என்பது குறித்துப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்துக்குருமார் சமூகத்தில் சமயம் சார்பான விடயங்களில் மட்டுமே விமர்சிக்க வேண்டும். அரசியல் சார்ந்த விடயங்களை வெளியிடுவதற்கு எங்களுக்கு பக்குவ நிலை இல்லை.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து குமார் அரசுக்கு எதிராக கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டால் உயிராபத்து ஏற்படும் நிலை உண்டு.

ஏனைய கிறிஸ்தவ, பௌத்த குருமார் அறிக்கையிட்டாலோ கண்டனங்களை வெளியிட்டாலோ உடனடியாகச் சர்வதேசத்திடம் போய்ச் சேரும்.

போர்க் காலங்களில் இருந்து பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் இந்து குருமார்கள்.

ஏனைய மதகுருமாருக்குக் கட்டுக்கோப்பான தலைமைத்துவம் உண்டு. வழி நடத்தி செல்வதற்கு இந்து குருமாரைப் பொறுத்தவரையில் இந்த நிலை இல்லை.

இந்து குருமாருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்தால் தாய் நாடாக இருக்கும் இந்தியா கூட குரல் கொடுப்பதில்லை. எங்களுக்கென உதவிகள், பாதுகாப்புகள் இல்லாத நிலையில் அரசியல் பேசும் எண்ணம் தற்போதில்லை.

எங்களின் அமைப்புகளை பலப்படுத்திய பின்னரே இவ்வாறான விடயங்கள் குறித்துச் சிந்திக்கப் படும்.- என்று தெரிவித்தார். (ம-13)

## பருத்தித்துறை டிப்போவுக்கு ஐந்து பஸ்கள் தேவையாம்

வடமராட்சி,பெப்.23

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ சிறந்த பஸ் சேவையை வழங்க மேலும் 5 பஸ்கள் தேவையாக உள்ளன என்று டிப்போ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது உள்ள 41 பஸ்களில் 4 பஸ்கள் லீசிங் கடன் அடிப்படையில் டிப்போவால் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்தப் புதிய பஸ்களுடன் 33 பஸ்கள் கொழும்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய நீண்ட தூர சேவைகளுக்கும் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளூர் இடங்களுக்கான சேவைகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

எஞ்சிய 8 பஸ்கள் திருத்த முடியாத நிலையில் உள்ளன.

**தற்போது உள்ள 41 பஸ்களில் 4 பஸ்கள் லீசிங் கடன் அடிப்படையில் டிப் போவால் கொள்வனவு செய்யப்பட்டன.**

பஸ்கள் பற்றாக் குறைக்கு மத்தியில் வடமாகாணத்தில் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ அதிக வருமானத்தைப் பெறுவதற்கு ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவையே காரணம்.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

## ஆலய திருவிழாக்களில் செலவு செய்யும் நிதியில் ஒரு தொகை இனி விழிப்புணர்வுக்கு

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் ஆலய திருவிழாக்களில் செலவு செய்யும் தொகையின் கணிசமான ஒரு பகுதியைச் சமூகத்தில் நடைபெறும் சிறுவர்கள், பெண்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தவுள்ளோம்.

வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தவும் சுவரொட்டிகள் அடிக்கவும் குறித்த நிதியைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் ச.வாசுதேவக்குருக்கள் இவ்வாறு தெரிவித்தார்.

**சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் மலிந்து காணப்படுகின்றன.**

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் மலிந்து காணப்படுகின்றன.

சமூகத்தில் கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுவர், பெண்கள் இலகுவாக வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கான விழிப்புணர்வுகளை இந்து குருமார் ஒன்றியத்தின் சார்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசாரத் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயிரத்து 448 ஆலயங்கள் உள்ளன. இவற்றில் உள்ள இந்து குருமார்கள், சமய நிறுவனத் தலைவர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம்.

சிறுவர்களுக்கு அறநெறிக் கற்கைகளை நடத்தி பரீட்சை, போட்டிகளை நடத்தி ஆன்மிகத்தை வளர்த்தெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்து குருமார் ஒன்றியத்தில் எழுத்தாளர் அவை உருவாக்கப்பட்டு எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மாதர் அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டு பெண்களின் நலனிலும், முன்னேற்றத்திலும் அக்கறை எடுத்துச் செயற்படுவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூகம் சார்ந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு கல்வி மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.- என்றார். (ம-13-ரி)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக ஜப்பான் வாக்களிக்க வேண்டும்

## அந்நாட்டுத் தூதரிடம் 'டெசோ' வேண்டுகோள்

டில்லி, பெப்.23

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரித்து ஜப்பான் வாக்களிக்க வேண்டும் என்று அந்த நாட்டுத் துணைத் தூதர் ஒகுகாவிடம் டெசோ அமைப்பு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

டில்லியில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு இல்லத்துக்கு ஜப்பான் துணைத் தூதர் ஒகுகா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வந்த விஜயம் செய்தார். அப்போது பாலுவுடன், 'டெசோ' அமைப்பில் இடம் பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனும் உடனிருந்தார்.

'டெசோ' அமைப்பின் நோக்கம் குறித்தும், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அந்த அமைப்பு நடத்தி வரும் பிரசாரம், போராட்டங்கள் குறித்தும் ஒகுகாவிடம் பாலுவும், திருமாவளவனும் விளக்கிக் கூறினர். ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அறிவித்துள்ளன. அந்தத் தீர்மானத்தை ஜப்பான் ஆதரிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.



அதைத் தொடர்ந்து, 'டெசோ' தீர்மானம் குறித்தும் அந்த அமைப்பின் வேண்டுகோள் குறித்தும் ஜப்பான் அரசுக்கு தெரிவிக்கப்படும் என்று ஒகுகா கூறினார்.

அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய பாலு, 'டெசோ அமைப்பின் தீர்மான நகல்களை, தொடர்ந்து, டில்லியில் உள்ள ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் பிரதி நிதிகளிடம் கொடுப்போம். 'டெசோ' அமைப்பின் கருத்தரங்கு டில்லியில் மார்ச் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது- என்றார். (வ)

### சேது கால்வாய்த் திட்டம்

## உச்சநீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய அமைச்சரவை அனுமதி

சேது கால்வாய்த் திட்டம் தொடர்பான ஆர்.கே. பச்சௌரியின் அறிக்கை மீதான மத்திய அரசின் நிலைப்பாட்டை உச்ச நீதி மன்றத்தில் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்ய மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்புதல் தெரிவித்தது.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது, பச்சௌரி குழு அறிக்கையில்,

'சேது கால்வாய்த் திட்டத்தை சுற்றுச்சூழல், பொருளாதார ரீதியாக மாற்று வழித்தடத்தில் செயற்படுத்துவது என்ற நிலையைத் தெரிவிக்கலாம்' என்று கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து அமைச்சரவையில் விவாதித்த பிரதமர், மத்திய சட்டத்துறையின் கருத்தின்படி பச்சௌரி குழு

**இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் தலை மையில் நடைபெற்ற மத் திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.**

அறிக்கை மீதான அரசின் நிலைப்பாட்டை உச்ச நீதி மன்றத்தில் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யலாம் என்று கூறியதாகத் தெரிகிறது.

அதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டை விளக்கும் பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்ய அமைச்சரவை வியாழக்கிழமை ஒப்புதல் வழங்கியதாவும், எதிர்வரும் வாரத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.(வ)

## குண்டுவெடிப்பு நடக்கலாம்

### முன்கூட்டியே எச்சரித்தது அமெ.

டில்லி, பெப்.23

இந்தியாவில் குண்டு வெடிப்பு நிகழும் அபாயம் உள்ளது என்று அமெரிக்கா கடந்த புதன்கிழமை எச்சரித்திருந்தது. அந்த அறிவிப்பு விடுக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே மறுநாளான வியாழக்கிழமை இரவு ஆந்திரா தலைநகர் ஹைதராபாத்தில் பயங்கரமான குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அமெரிக்க உள்துறை அமைச்சகம் கடந்த புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் உட்பட உலகம் முழுவதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளது. இந்தியாவில், ஹர்கத்துல் முஜாஹிதீன், இந்தியன் முஜாஹிதீன், ஹர்கத்துல் ஜிஹாத் இஸ்லாமி, ஜெய்ஷ் இ முகமது ஆகிய அமைப்புக்கள் மற்றும் பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் லஷ்கர் இ தொய்பா ஆகிய அமைப்புகளால் தாக்குதல் நடத்தப்படும் அபாயம் உள்ளது. இந்தத் தாக்குதல் தற்கொலைப் படைத் தாக்குதலாகவோ, குண்டுவெடிப்பு, படுகொலை, கடத்திக் கொல்லுதல் போன்றவையாகவோ இருக்கலாம். இதனால் அமெரிக்கர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. (வ)

## இரண்டு தினங்களுக்கு முன்பே குண்டு வெடிப்பு குறித்து தெரியும்

### உள்துறை அமைச்சர் கூறுகிறார்

டில்லி, பெப்.23

குண்டுவெடிப்புச் சம்பவம் நடக்கும் என்று 2 தினங்களுக்கு முன்பே உளவுத்துறை தகவல்கள் கிடைத்ததாக மத்திய உள்த் துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே கூறியுள்ளார். ஆனால் எங்கு எப் போது நடக்கும் என்பது குறித்து குறிப்பிட்ட தகவல் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹைதராபாத் குண்டு வெடிப்பு குறித்து அவர் கூறுகையில்;

பல்வேறு மாநில முதல்வர்களுக்கும் இந்த குண்டு வெடிப்பு குறித்த உளவுத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து வெளிப்படையாகச் சொல்ல முடியாது. ஆனால் எங்கு குண்டு வெடிப்பு இடம்பெறும் என்பது குறித்து குறிப்பிட்ட தகவல் ஏதும் கிட்டியிருக்கவில்லை. - என்றார். (வ)

### ஹைதராபாத் குண்டுவெடிப்புச் சம்பவம்:

# கொடூரமான செயலை புரிந்தவர்கள் எவருமே தப்பிவிட முடியாது

## பிரதமர் மன்மோகன் கடும் கண்டனம்

டில்லி, பெப்.23

ஹைதராபாத்தில் கோழைத்தனமான, கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது கடும் கண்டனத்துக்குரியது. இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது என்று பிரதமர் மன்மோகன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்புச் சம்பவம் காரணமாக வன் முறைக்கு இடம் கொடுத்து விடாமல் மக்கள் அமைதி காக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசு ஒரு போதும் அலட்சியம் காட்டாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தில்சுக் நகரில் வெடித்த குண்டுகள் சாப்பாட்டு பெட்டியில் வைக்கப்பட்டு வெடிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகின் றனர்.

எனினும், மோட்டார் சைக்கிள் அல்லது சைக்கிளில் வைத்து வெடிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந் துள்ளது, வெடிகுண்டு நிபுணர்களின் ஆய்வுக்குப் பின்னர் தான் இது குறித்து எதையும் சொல்ல முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**முழுமையான விசாரணை பா.ஜ. வலியுறுத்தல்**

பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் டில்லியில், இச் சம்பவம் தொடர்பாக அளித்த பேட்டியில், 'ஆந்திரா குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பா.ஜ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறேன். இந்தச் சம்பவம் மிகவும் கண்டனத்துக்குரியது. மத்திய அரசு இதுதொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். குண்டு வெடிப்பு குறித்து முழுமையான விசாரணைக்கு அரசு உத்தரவிட வேண்டும்.

இதுபோன்ற தீவிரவாத சம்பவங்கள் இனிமேல் நடக்காத வகை யில் தடுக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு. கோழைத்தனமான செயலுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டும்'' என்றார்.





**நாடு முழுவதும் உஷார்**

ஹைதராபாத்தில் தொடர் குண்டுகள் வெடித்ததையடுத்து, நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தலைநகர் டில்லியில் முக்கியமான இடங்களில் பொலிஸ் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், முக்கிய மான இடங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு உள் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகும் மும்பையில் தீவிர கண்காணிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை குண்டு வெடிப்புகளுக்கு ஹர்ஹத் உல் ஜிகாதி இஸ்லாமி என்ற ஹூஜி தீவிரவாத அமைப்புத்தான் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது. (வ)

# இலங்கை அரசைக் கண்டிக்கிறது பஞ்சாப் தீவிரவாத அரசியல் கட்சி



இந்தியாவின் பஞ்சாப் மாநில தீவிரவாத அரசியல் கட்சியான தால் கல்சா இலங்கை அரசுக்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டமை குறித்து சனல் 4 ஒளிப்படம் வெளியிட்டதை அடுத்து இந்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் எச்.எஸ். தாமி தெரிவித்திருப்பதாவது:

இறுதிக் கட்டப் போரின் போது இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச விசாரணை நடத்த வேண்டும். சனல் 4 வெளியிட்ட 12 வயது சிறுவனின் கொலை ஒளிப்படம் இலங்கை மனித உரிமை மீறல் புரிந்துள்ளமைக்கு சான்று. இது தனியே ஒரு தமிழ் மக்கள் பிரச்சினை அல்ல எனவும் மனிதாபிமான பிரச்சினை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள அமெரிக்க பிரேரணைக்கு மேற்குலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், இதுவிடயம் குறித்து இந்தியா அமைதிகாத்து வருகின்றது.

இந்தியாவின் மௌனம் புதிய ஒன்று அல்ல. பல தடவைகள் இந்தியா இரட்டை நிலைப்பாட்டிலேயே இருந்து வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# ஈரானில் அடுத்த தலைமுறை அணுசக்தி உபகரணங்கள்

### ஐ.நா. அணுசக்தி அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, பெப்.23

ஈரான் தனது அணு சக்தி நிலையங்களில் அடுத்த தலைமுறை உபகரணங்களை நிறுவி அணுசக்தி நிலையங்களை மேம்படுத்தத் தொடங்கியுள்ளது - என்று ஐ.நா. அணு சக்தி அமைப்பு எச்சரித்துள்ளது.

ஈரானில் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று அமெரிக்கா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் குற்றஞ் சாட்டி வரும் நிலையில் ஐ.நா. அணுசக்தி அமைப்பினால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதுகுறித்து அந்த அமைப்பு மேலும் குறிப்பிடுகையில்:-

கடந்த 6ஆம் , திகதி ஈரான் தனது 'நடான்ஸ்' அணுசக்தி நிலையத்தில் 'ஐ.ஆர். -2எம் செண்ட்ரி பியூசு' என்ற அதி நவீன அணு சக்தி உபகரணத்தை நிறுவத் தொடங்கியுள்ளது. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள 'ஐ.ஆர். 1'ஐக் காட்டிலும் இது மிகவும் அதிநவீனமான 'செண்ட்ரி பியூசு' ஆகும்.

செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை 5 சதவீதம் பயன்படுத்தும் ஈரானின் 'நடான்ஸ்' அணுசக்தி நிலையத்தை விட, 20 சதவீதம் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை பயன்படுத்தும் 'போர்டோ' அணு சக்தி நிலையம் உலக மக்களைப் பெரிதும் கவலை அடைய வைத்திருக்கிறது. மேலும், இது அணுஆயுதம் தயாரிக்கத் தேவையான 90 சதவீத வலு அளவுக்கு நெருங்கி வருவதும் கவலை அளிக்கிறது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் பிரதி நிதிகள் அணு ஆயுதக் குறைப்புக் குறித்து எதிர் வரும் 26ஆம் திகதி ஈரானுடன் கஜகஸ்தானில் வைத்து பேசவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# செவ்வாய் கிரகத்தில் 'கியூரியோசிட்டி' கலம் முதன்முறையாக வெட்டி எடுத்தது பாறையை



நியூயோர்க், பெப்.23

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள 'கியூரியோசிட்டி' ரோவர் ஆய்வுக்கலம் முதல் முறையாக பாறை ஒன்றை வெட்டிச் சேகரித்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல், தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் போன்றவை குறித்த ஆய்வில் 'கியூரியோசிட்டி' ஆய்வுக் கலம் ஈடுபட்டுள்ளது.

ஈரப்பதம் இருப்பதற்கான சாத்தியம் உள்ள, ஜோன் கிளெய்ன் எனப் பெயரிடப் பட்டவண்டல் படிவுப் பாறையைத் துளையிட்ட 'கியூரியோ சிட்டி' அதிலிருந்து கல்லை வெட்டி எடுத்து ஆய்வுக்கான மாதிரியைச் சேகரித்துள்ளது.

பூமி தவிர்ந்த ஏனைய கிரகமொன்றில் முதன் முறையாக பாறையொன்று வெட்டி எடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது. (ற)

# ஹைதராபாத் குண்டு வெடிப்புச் சம்பவம் கோழைத்தனமான செயல் என்கிறது அமெ.

### புலன்விசாரணைக்கு உதவத்தயார் என அறிவிப்பு

நியூயோர்க், பெப்.23

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பில் அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட் டுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க வெளியுறத்துறை செய்தித்தொடர்பாளர் விக்டோரியா நூலாந், "தாக்குதல் குறித்த புலன் விசாரணைகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும்" என்றார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஹைதராபாத்தில் நடத்தப்பட்ட இந்தக் கோழைத்தனமான தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தாக்குதல் குறித்த புலன் விசாரணைகளுக்கு அமெரிக்கா உதவியளிக்கும். அதற்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் இந்தியாவிற்கு வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளது என்று தெரிவித்தார். (ற)

### ஆளில்லா விமான தாக்குதலில் 4,500 பேர் சாவு



நியூயோர்க், பெப்.23

அமெரிக்காவின் ஆளில்லா 'டிரோன்' விமானத் தாக்குதல்கள் மூலம் இதுவரை 4ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித் துள்ளது.

ஆப்கனில் அமெரிக்கா படை நடவடிக்கையை முன்னெடுத்ததும், தலிபான்கள் ஆப்கன் மற்றும் பாகிஸ்தான் எல்லைகளில் உள்ள மலைப் பிரதேசங்களுக்குச் சென்று மறைந்துள்ளனர்.

அதையடுத்து அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. தற்போது அத்தகைய தமது தாக்குதல்கள் தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:-

2004 ஆம் ஆண்டு முதல் இதுவரை 350 தடவைகள் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் 4 ஆயிரத்து 500 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 250 தொடக்கம் 300 வரையானோர் சாதாரண பொது மக்களாவர்; என்றுள்ளது.

அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்து வருகின்றது. இவ்வாறான தாக்குதல்கள் எல்லை மீறும் சம்பவங்கள் என்றும், பாகிஸ்தானின் இறைமையை மீறும் செயல் என்றும் பாகிஸ்தான் தொடர்ந்தும் குற்றஞ் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

### பாக்.புலனாய்வு அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம்

இஸ்லாமபாத்,பெப்.23

பாகிஸ்தான் உளவு அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் அளிக்க வகை செய்யும் "தொலைத்தொடர்பு சாதனங்களைக் கண்காணிக்க ஏதுவான, 'நேர்மையான விசாரணை சட்டத் திருத்தம்-2013'' இல் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டார்.

சட்டத்திருத்தம் நாடாளுமன்றின் மேலவையில் கடந்த முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட போதும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து அந்தச் சட்டத் திருத்தத்தில் ஜனாதிபதி கையெழுத்திடவில்லை. எதிர்க்கட்சிகளுடன் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்போது ஜனாதிபதி அதில் கையெழுத் திட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சர்தாரி,

அப்பாவி மக்களுக்கு எதிராக ஒருபோதும் இந்த சட்டம் தவறாக பயன்படுத்தப் பட மாட்டாது. தீவிரவாதிகளையும், தீவிரவாதச் செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையே இது - என்று தெரிவித்தார். (ற)

# கார்க்குண்டு வெடிப்பு

## 53 பேர் சாவு; 200 இற்கு மேற்பட்டோர் காயம்

## சிரியத் தலைநகர் டமாஸ்கஸில் பயங்கரம்



டமாஸ்கஸ், பெப்.23

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் கார்க்குண்டு வெடித்ததில் 53 பேர் உயிரிழந்தனர். 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந் துள்ளனர்.

சிரிய ஜனாதிபதி அசாத்தின் கட்சியான பாத் கட்சியின் தலைமை அலுவலகத்தின் அருகே காரில் வைக்கப்பட்டிருந்த அதி சக்தி வாய்ந்த குண்டே வெடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்திய டமாஸ்கஸில் மஜ்ரா பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியில் இந்தக் குண்டு வெடித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடிப்பை அடுத்து அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது என்றும், வீதி கள் அனைத்தும் மூடப்பட்டு போக்குவரத்துக்கள் தடைப் பட்டன என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அதேவேளை, கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த சிறிதுநேரத்தில், டமாஸ்கஸில் உள்ள இராணுவத் தலைமை அலுவலகத்தின் மீது எறிகணைகள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எனினும் அங்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து அறிய முடியவில்லை என்றும் அது கூறியுள்ளது. (ற)

# மாலியில் கடும் துப்பாக்கி மோதல் பிரான்ஸ் படைவீரர் உயிரிழப்பு



பாமகா, பெப்.23

மாலியில் 'இபோகஸ்' மலைப் பகுதியில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் பிரான்ஸ் தலைமையிலான மாலி படையினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கி மோதலில் பிரான்ஸ் படைவீரர் ஒருவரும், 20 தீவிரவாதிகளும் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான மாலியில் இஸ்லாமிய தீவிரவாதிகள் மீது பிரான்ஸ் தலைமையிலான மாலி படையினர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். தாக்குதல் நடவடிக்கைக்காக பிரான்ஸ் இராணுவத்தின் ஒரு தொகுதியினர் மாலியில் முகாமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் 'அட்ரார் டெஸ் இபோகஸ்' மலைப் பிரதேசத்தில் தீவிரவாதிகளுக்கும் பிரான்ஸ் படையினருக்கும் இடையே நேரடித் துப்பாக்கிச் சண்டை மூண்டது. அந்த மோதல்களில் பிரான்ஸ் வீரர் ஒருவரும், 20 தீவிரவாதிகளும் உயிரிழந்ததாக மாலியில் உள்ள பிரான்ஸ் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாலியில் பிரான்ஸ் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையில் இந்தச் சம்பவத்துடன் சேர்த்து இதுவரை இரண்டு பிரான்ஸ் படைவீரர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மீண்டும் ஓர் அணுகுண்டு சோதனை தயாராகின்றதா வடகொரியா?

### சந்தேகம் வெளியிடுகிறது அமெரிக்கா

நியூயோர்க், பெப்.23

வடகொரியா நான்காவது முறையாக மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்தத் திட்டமிட்டு வருகின்றது என்று அமெரிக்கா சந்தேகம் வெளியிட்டுள்ளது.

வடகொரியா கடந்த 12ஆம் திகதி மூன்றாவது அணு ஆயுத சோதனையை வெற்றி கரமாக நடத்தியது. அதற்கு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்த நிலையில், வடகொரியா மீண்டும் ஓர் அணு ஆயுத சோதனையை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்கா விடுத்துள்ள தகவல் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் மூலம் வடகொரியாவின் எல்லைகளைச் செயற்கைகோள் மூலமாக தீவிரமாக ஆராய்ந்தபோது சந்தேகத்துக்கிடமான சில புகைப்படங்களும் தகவல்களும் கிடைத்துள்ளன. கடந்த முறை சோதனை நடைபெற்ற பியோங்யாங்கில் நிலவறைப் பகுதிகள் அனைத்தையும் கடும் பாதுகாப்புடன் வடகொரியா மூடிவிட்டது. அங்கு காற்றில் பரவும் அணுக் கதிர் வீச்சுகள் மூலம் தாங்கள் பயன்படுத்திய யுரேனியம் அல்லது புளுட்டோனியத்தின் அளவை மற்ற நாடுகள் கணக்கிடக்கூடும் எனக் கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்றாவது அணு ஆயுத சோதனை நடத்தப்பட்ட போதே நான்காவது சோதனைக்குத் தயாராக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கிறோம்.- என்றுள்ளது. (ற)

## கடைகள் வாடகைக்கு

இல.228 சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் (யாழ்.பல் கலைக்கழகத்திற்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட புதிய கடைத் தொகுதியில் இரண்டு கடைகள் மட்டும் வாடகைக்குண்டு.

தொ.பே: 0777833807


# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.23

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சைவப்புலவர் பரீட்சைத் தேர்வு பற்றிய விடயங்களும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (3)


சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்

## "பிள்ளைத் தமிழ்"

### நூல் வெளியீட்டு விழா அழைப்பு

இடம்:- அத்தியடி கணபதி கலாசார மண்டபம்

காலம்:- 24.02.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30

பாடியவர்:- திவகம் வே.இராசலிங்கம் (கனடா)(குமர கோட்டம்)

பிரதம விருந்தினர்

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

(முன்னாள் துணை வேந்தர்)

ஆய்வுரை

கலாநிதி.செ.திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

பிள்ளைத் தமிழ் ஓதல்

இசைக்கலைமாணி செல்வி.வெ.விஜயபாரதி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அறங்காவற்சபை


## மரண அறிவித்தல்

### கந்தையா துரைராஜலிங்கம்

(கஜநிதி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர் - கிளிநொச்சி)

மந்துவில் மேற்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜலிங்கம் (20.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (ஆசிரியர்) - மீனம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, மீனாட்சிப்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி, விமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரோயத்தின் அன்புக் கணவரும், கஜநிதி (கனடா), மயூரதன் (கனடா), யசோநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசாயி, மயூஷன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2013) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு.திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி (சகோதரி)

மந்துவில் மேற்கு, கொடிகாமம். (33659 (45.7)

# இளைஞர், யுவதிகளுக்கு வதிவிடப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.23

வலிகாமம் வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 120 இளைஞர், யுவதிகளுக்கான வதிவிடப் பயிற்சி நெறி எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதி களில் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்றம், யு.எஸ். எய்ட் இணைந்து நடத்தும் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 350 ரூபா, மதிய உணவு, தங்குமிட வசதி என்பன செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-ரி)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் A9 வீதியில் 45 பேர்ச்சில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு அல்லது நீண்ட குத்தகைக்கு. வங்கிகள், தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்புக்கு- 077 9773252

## நாய்கள் விற்பனைக்கு

2 வயதுடைய ஜேர்மன் செப்பேட் பெண்நாயும், 2 மாத ஜேர்மன் செப்பேட் ஆண் குட்டி நாயும் விற்பனைக்குண்டு.

தொ.பே: 0775538492 (33666)(7.11)

## விற்பனைக்கு

லேலண்ட் ND xxxx இலக்கமுடைய 54 இருக்கைகள் கொண்ட பஸ் விற்பனைக்குண்டு.

தொ.பே:-0772136097

## தவறிவிட்டது

அல்தவி ஞானப்பிரகாசர் கோஸ்டின் நிமல் என்பவரின் கடவுச்சீட்டு (Passport) (N- 1036146. Ic-840 752518 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே: 077 7911 961 (33668) (45.7)

## வீடு வாடகைக்கு

ஓட்டு மடம் மானிப்பாய் வீதியில் நான்கு அறைகளுடன் சமையல் அறை விசாலமான ஹோல் உட்பட வீடு வாடகைக்குண்டு.

தொ.பே: 077 4837 637 (33667) (45.7)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1974 இல் பிறந்த, அனுசம் 2 ஆம் பாதம், 37 பாவம், செவ்வாய் குற்றமற்ற சைவ போசன அரசாங்க உத்தியோகம் புரிகின்ற மணமகனுக்கு படித்த, அழகான அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. மணமகள் அசைவ போசனம் என்றாலும் ஏற்றுக்கொள்ளப்படும். 6 வயது வித்தியாசம் விரும்பத்தக்கது. வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி பிரதேசங்களில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மணமகனுக்கு சொந்தமாக வீடு வளவு உண்டு.

தொ.பே: 0776094621 (33717)(7.11)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre
### (சியோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with Grammar சிங்களம் Short hand Typing இரு மொழிகள் மூலமும் ESOL பரீட்சைக்குத் தயார் செய்து விடல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்:-

இன்று 25/02/2015

ஆசிரியை :-இ.லோகநாயகி

T.P.No:-0776779340. (33658)(3.5)

## வீடு விற்பனைக்கு

கரவெட்டி கோவிற்சந்தை, ஞானாசாரியார் வீதியில் பாடசாலை, கோயில் அருகில் 5 அறைகள் கொண்ட சகல வசதியுடனான 4½ பரப்புக் காணியை உள்ளடக்கி தென்னை வளத்துடன் கூடிய நான்கு பக்க சுற்று மதில் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொ.பே: 0773171947 (கொழும்பு), 0776315961, 0212263555- (கரவெட்டி)

## மணமகள்தேவை

* 81 இல் பிறந்த,4இல் செவ்வாய்,37 பாவமுடைய, லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 85 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 24பாவமுடைய, ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 76 இல் பிறந்த, 12 இல் செவ்வாய்,45 பாவமுடைய, கனடா பிரஜா உரிமை பெற்ற,விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

மாப்பிள்ளை திருமண சேவை, இல. 435/3,கோவில் வீதி,நல்லூர்.

தொ.பே.:077 607 0862 (33663)(5-7-25)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 19.01.1930

மறைவு 24.01.2013

### திருமதி சிற்றம்பலம் தங்கரத்தினம்

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலிகள் தெரிவித்த உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு; இன்று சனிக்கிழமை (23.02.2013) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால்.

சிற்றம்பலம், மல்லிகா ஸ்ரோர்ஸ். (c/6623)(2.7) -குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னையா துரைராசா

தோற்றம் 10.04.1930

மறைவு 24.01.2013

கடந்த 24.01.2013 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி, இணுவில் மேற்கு. (33550)(7.45)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(19)

"இலட்சியங்களைக் கண்டு பயப்படுவோர்கள் பலர். "ஏன் இதை எமது தலையில் வைத்துக் கொண்டு திண்டாடிக் கொண்டிருக்க வேண்டும்? இதற்குப் பதில் மக்கள் கவனத்தை திசை திருப்பும் காரியத்தில் செலவிடுவோம்" என்பார்கள் இவர்கள். திண்டுக்கல் என்ற ஊரின் பெயர் நன்றாயில்லை என்றோ, எந்தத் தலைவர் எந்தக் குச்சிப்புடியிலிருந்து பிறந்து வந்தார் என்றோ நாட்டு மொத்த மக்களையும் ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவார்கள் இவர்கள்.

"பஞ்சாப் மாநிலத்தில் எமக்கு விற்பனை குறைவாக இருக்கிறது. என்னுடைய நாலு விற்பனையாளர்களையும் அழைத்துக் கொண்டு பஞ்சாபில் ஒரு மாத காலம் முகாம் போடப்போகிறேன்!" விற்பனையைக் கூட்டப் போகின்றேன் என்று புதிய பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொள்கின்றான் ஒருவன். அவன் தலைவன். முன்னுக்கு வருபவன். பொறுப்பைத் தட்டிக் கழிப்பவர்கள், தெளிவில்லாதவர்கள்-துணிவில்லாதவர்கள்.

தாழ்வு மனப்பான்மை, பயம், படபடப்பு, நிரந்தர சோகம் என்று பல விடயங்கள் எமது இலட்சியத் தெளிவைப் பாதிக்கின்றன. இரண்டாவது விடயத்திற்கு வருவோம்.

பலரும், சிறு தடங்கல்கள் வந்தவுடன் சோர்ந்து போகிறார்கள். பெரிய திட்டத்தையே கைவிட்டு விடுகிறார்கள்.

சோர்வு உடலின் இயல்பு. சோர்வைப் போக்கத்தான் இரவு நேரத்தில் உடல் தூங்கப் போகிறது. அதே போல உள்ளமும் பல சமயம் அசதி கொள்ளும், அதைரியம் ஏற்படும். இது இயல்பு. அந்தச் சமயத்திலெல்லாம் நாம் பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். மீண்டும் எமக்கு "இரண்டாவது காற்று" எனப்படும் ஓர் உற்சாகம் பிறக்கும் வரை காத்திருக்க வேண்டும். உள்ளச் சோர்வு ஏற்படாத நிர்வாகியையோ ஞானியையோ நான் பார்த்ததில்லை.

மனநிலையை உற்சாகமாக வைத்திருப்பவர்கள் தான் எளிதில் வெற்றியடைகிறார்கள். துக்கமாக, சோகமாக உட்கார்ந்திருப்பதும் ஏக்கப்பட்டுப் பாடுவதும், புலம்புவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது. குதிரையைத் தட்டிக் கொடுப்பதைப் போல, எம் மனத்தைத் தட்டிக் கொடுத்து, கடிவாளத்தை வெட்டி ஓட்டிச் செல்வதும் எமது கையில் தான் இருக்கிறது. நீங்கள் ஒரு விற்பனையாளராகப் போனால், சோகத்துடனும், துக்கத்துடனும், கோபத்துடனும் அலட்சியத்துடனும்வேலையில் ஈடுபட்டால் ஒரு தலை துவட்டும் துண்டைக்கூட நீங்கள் விற்பனை செய்ய முடியாது. நிலைமை அப்படி இருக்கும் போது ஏன் நீங்கள் உங்களை உற்சாகப்படுத்தும் ஒரு சிறு சொல்லுடன், புன்முறுவலுடன், நல்ல மனநிலையுடன் விடயங்களை அணுகக் கூடாது.

மேலதிகாரியாக இருந்தால் கடுகடுப்பாக இருக்க வேண்டுமென்று யார் சொன்னது? நீங்கள் அமைச்சரானால் கீழே உள்ள பொலிஸ் அதிகாரியை தரக்குறைவாகப் பேசலாம் என்று யார் சொன்னது? முதல்வரானால் கல்லூரி முதல்வரை ஒருமையில் அழைக்கலாம் என்று யார் கூறினார்கள்? நல்ல மனநிலை உங்களை உயர்வில் வைக்கும்.

உற்சாகமான மனநிலை இரண்டு பக்கமும் செல்லும் சாலை ஓட்டம் போல. "யாரையாவது நல்ல வார்த்தை சொல்லிப் பாராட்டிப் பாருங்கள்" என்று கூறுகிறார்கள் அனுபவசாலிகள். செய்து பாருங்கள். உங்களுக்கும் உற்சாகம் பிறக்கும். அவர்களும் உற்சாகமடைவார்கள்.

விடாமுயற்சியைப் பற்றி, ராபர்ட் புரூஸ்-சிலந்தி கதையிலிருந்து தெரிந்து கொள்ளவில்லையா? ஏதாவது ஒரு கதையை அல்லது ஏதாவது ஒரு வாழ்க்கைச் சம்பவத்தை நினைத்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் எம்முள் புது நம்பிக்கை பிறக்கும். புது ஜீவன் பிறக்கும்.

பிரபல எழுத்தாளர் ஏ.ஜே.கிரோனின், தான் எழுதிய நாவலை குப்பைக் கூடையில் தூக்கிப் போட்டுவிட்டு சுமை நீங்கிய விடுதலை உணர்வுடன் கிராமத்துச் சாலையில் நடக்கிறார். அங்கே ஓர் உழவனை சந்திக்கிறார். அந்த உழவன் காட்டைக் கழனியாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் கூறுகிறான். இந்தக் காட்டு நிலத்தை என் பாட்டனார் பண்படுத்தினார். என் தந்தையும் பாடுபட்டார். நானும் முயல்கின்றேன். முயன்றால் இங்கே ஒரு அருமையான விளைச்சல் நிலம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்! அதற்காகத்தான் முயன்று கொண்டிருக்கிறேன் என்கிறார் வியர்வை கொட்டும் முகத்துடன்.

மனம் சோர்ந்து போயிருந்த அந்த எழுத்தாளர் திரும்ப வீட்டுக்குப் போனார். குப்பைக் கூடையில் மழையில் நனைந்து போன நாவலை எடுத்து அடுப்பின்மீது காயவைத்தார். பக்கம் பக்கமாக எடுத்துத் திருத்தினார். அடித்தார். மீண்டும் எழுதினார். எழுதி புத்தகக் கம்பனி ஒன்றிற்கு அனுப்பி வைத்துவிட்டு மறந்து போனார். ஆறு மாதம் கழித்து ஒரு தந்தி வந்தது. "ஐயா! உங்கள் நாவல் அற்புதம்! பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. உடனே வரவும்!" இது உண்மைக் கதை.

எடுத்த காரியத்தைப் பற்றி அயராதீர்கள். சளைக்காதீர்கள்.

மனம் சளைக்காதபோது, செயலில் சளைக்கமாட்டீர்கள், ஒரு காரிய வெற்றியும் சரி, வாழ்வும் சரி ஒரு தொடர் முயற்சி. "கடமையைத்தான் நாம் செய்யலாம்; கடமையைத்தான் நாம் செய்ய வேண்டும்" என்று பகவத் கீதை கூறவில்லையா? ஆகவே நாம் சளைக்காது முயன்றுகொண்டே இருக்க வேண்டும்.

மூன்றாவதாக: செயல்.

"ஆசைகளெல்லாம் குதிரைகளாக மாறக் கூடுமானால் பிச்சைக்காரர்கள் கூட சவாரி செய்வார்கள்' என்று ஓர் அரேபியப் பழமொழி உண்டு. வெறும் ஆசை, வெறும் கனவு எந்தப் பயனையும் தராது. பெரும் பெரும் மாளிகைகள் ஒவ்வொரு செங்கற்களால் தான் அடுக்கப்பட்டு கட்டப்படுகின்றன என்றான் ஓர் அறிஞன். சின்னச்சின்ன செயல்களின் கூட்டுமுயற்சி பெரிய சாதனையாக மலரும்.

எம்.எஸ்.உதயமூர்த்தி (தொடரும்)

# லூர்து அன்னை ஆலயத்தின் திருவிழாவை 30 வருடங்களின் பின்னர் நடத்தியுள்ளோம்

## வண.பிதா. நேசராஜா அடிகளார் தெரிவிப்பு

குருநகர், பெப். 23

சிறுத்தீவில் அமைந்துள்ள லூர்து அன்னை ஆலயத்தின் திருவிழா திருப்பலியை 30 வருடங்களின் பின்னர் நிறைவேற்றியுள்ளோம் என்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை வண. பிதா ஆர்.நேசராஜா தெரிவித்தார்.

குருநகருக்கும் மண்டைதீவுக்கும் இடையில் கடலில் அமைந்துள்ள சிறுத்தீவில் உள்ள லூர்து அன்னை ஆலயத்தின் திருவிழாத் திருப்பலி 30 வருடங்களின் பின்னர் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பக்தர்களிடையே உரையாற்றிய போதே அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆள்நடமாட்டம் அற்ற இத்தீவுக்கு 30 வருடங்களின் பின்னர் போகக் கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கடற்படையினரின் அனுமதி பெற்றே ஆலயத்திற்கு வந்தோம். அப்பொழுது இந்த ஆலயம் சேதமடைந்த நிலையில் பற்றைகளால் மூடிக் காணப்பட்டது.

இளைஞர்கள் ஆலயத்தை துப்புரவு செய்தனர். சேதமடைந்த நிலையில் காணப்பட்ட லூர்து அன்னையின் சிலையை புனரமைத்து மீளவும் இங்கு கொண்டு வந்து வைத்துள்ளோம். இயேசு நாதரின் சொரூபம் திருத்த முடியாத நிலையில் சேதமடைந்ததனால் அதனை இங்கு வைக்க முடியவில்லை.

எமது பிரதேசத்தில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற போரினால் இந்த ஆலயம் பாதிக்கப்பட்டது போலவே எமது மக்களும் பாதிப்படைந்தார்கள். இன்று அமைதி ஏற்பட்டு நாம் இங்கு வந்து வழிபடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. வருடாவருடம் ஆலயத் திருவிழாவை நடத்த வேண்டும். இடிபாடுகள் நிறைந்த இந்த ஆலயத்தை புனரமைப்புச் செய்வதற்கு எல்லோரினதும் பங்களிப்பு அவசியமாகும் - என்றார். (எ-51)

# நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி,பெப்.23

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர் சி.தில்லைநாதன், உபதலைவர் பா.இரகுநாதன், செயலாளர் மு.ஜெகதேவன், உபசெயலாளர் திருமதி சரஸ்வதி தியாகராசா, பொருளாளர் திருமதி நாகேஸ்வரி நேசலிங்கம்.

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.பரராசசிங்கம், ச.இராசேந்திரம், ஆ.செல்வராசா, திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை, திருமதி யோகம்மா ஜெயகுமார், திருமதி ரேணுகா ஸ்ரீதாஸ் ஆகியோர் தெரிவானார்கள். (எ-8)

* * *

எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் சு.ரவிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் பின்வருமாறு:-

தலைவர்- சி.தயாபரன், செயலாளர்- ஆ.சுப்பிரமணியம், பொருளாளர்- சி.சிவகுமார்.

மேலும் 10 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் து.அலெக்ஸாண்டர் கலந்து கொண்டார். (எ-9)

# மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



வேலணை கிழக்கைச் சேர்ந்த சமாதான நீதிவான் சண்முகரெத்தினம் சண்முகதாசன் மொழிபெயர்ப்பாளராக அண்மையில் வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் கணக்கியலும், நிதியியலிலும் இளமானிப் பட்டத்தை பெற்றதோடு, வியாபார முகாமைத்துவம் மற்றும் நூலகமும் தகவல் விஞ்ஞானத்தில் முதுமானிப் பட்டங்களை பெற்றவராவார். மேலும், இங்கிலாந்து முகாமைத்துவ கணக்கியல் பட்டய நிறுவனத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் சிரேஷ்ட உதவி நூலகராகக் கடமையாற்றி வருகிறார். (எ-130)



யாழ். கைதடி பராசக்தி பாலர் பகல் விடுதி மாணவர்களின் ஆக்கச் சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்கள், ஆசிரியர்கள், விருந்தினர்களுடன் காணப்படுகின்றனர். (எ)

# பொன் விழா போட்டி முடிவுகள்

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன் விழாவையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு:-

பிரிவு - 1

9 ஆம் வகுப்பில் இருந்து 11 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில்-

முதலாம் இடம்- வா.விதுஷா (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்- உ.மாதவி (கொக்குவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்- தி.நலவாஜினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

6 ஆம் வகுப்பில் இருந்து 11 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில்-

முதலாம் இடம்- ப.அனுஷா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்- பே.நிலக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி), மூன்றாம் இடம்- பே.நிலக்ஷன் (சென்ஜோன்ஸ் கல்லூரி)

9 ஆம் வகுப்பில் இருந்து 11 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களிடையே நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில்

முதலாம் இடம் - மு.ஹம்சாயினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - நே.சிந்துஜா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ), மூன்றாம் இடம் - தி.பிரசாயினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

பிரிவு 2

ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில்-

முதலாம் இடம்- சி.தாரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் -சி.அனோஜிதா (விக்டோரியா கல்லூரி ), மூன்றாம் இடம்- கி.துர்ஷா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை)

ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்களிடையே நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில்- முதலாம் இடம்- செ.சேயோன் (யாழ் இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்- அ.கஜன் (மல்லாவி மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்- கு.நந்தகோபன் (கொழும்பு இந்துக் கல்லூரி) (எ)

## விபத்தில் காயம்

அச்சுவேலி, பெப்.23

நீர்வேலியில் நடைபெற்ற ஹன்ரர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம் அடைந்த கட்டைப்பிராய் விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வநாதன் (வயது-55) என்பவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயம் அடைந்து மயங்கிய நிலையில் கோப்பாய்ப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-11)

## ஆறு பிணக்குகள் ஜனவரியில் தீர்க்கப்பட்டன

யாழ். குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் ஆறு சிறுதொழில் பிணக்குகள் தீர்க்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அதற்குரிய நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 37 தொழில் சார்ந்த சிறு பிணக்குககள் இருந்தன. தொழில்த் திணைக்களம் இதில் தலையிட்டு ஆறு பிணக்குகளைத் தீர்த்து வைத்துள்ளது.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 80 ஆயிரத்து 800 ரூபா சம்பந்தப்பட்ட தொழில் நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதேபோன்று கிளிநொச்சியிலும் இரண்டு தொழில் சம்பந்தமான பிணக்குகள் தீர்க்கப்பட்டு பாதிக்கப்பட்ட அந்த தொழிலாளர்களுக்கு 49 ஆயிரத்து 480 ரூபா நிதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் வவுனியாவில் இரண்டு தொழில் பிணக்குகள் சமரசமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.(ம-17)

## புதிய மோட்டரும் திருட்டுப் போனது

15 தினங்களுக்கு முன்னர் திருட்டுப் போன நீர் இறைக்கும் மோட்டருக்குப் பதிலாக புதிதாக பொருத்தப்பட்ட மோட்டரும் திருடரின் கைவரிசைக்கு இலக்கானது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கல்வயலில் இடம்பெற்றது. இதேஇடத்தைச் சேர்ந்த தில்லைநடேசன் என்பவரின் வீட்டின் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த மோட்டார் 15 தினங்களுக்கு முன்னர் திருட்டுப் போனது. கிணறு ஆழமென்பதால் வீட்டுத் தோட்டப் பயிர்கள் வாடியதால் புதிய மோட்டார் கொள்வனவு செய்து கடந்த திங்கட்கிழமை கிணற்றடியில் பொருத்தப்பட்டது. நேற்று முன்தினம் அதிகாலையில் வாழைத் தோட்டத்துக்கு தண்ணீர் இறைப்பதற்காக மோட்டரை இயக்க மின்சாரத்தை செலுத்திய போது மோட்டர் செயற்படவில்லை. அங்கு சென்று பார்த்த போது மோட்டார் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது. திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# குடாநாட்டில் 12 இடங்களில் கடந்த வாரத்தில் திருட்டுகள்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் 12 இடங்களில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களில் நகைகள் உட்பட 17 இலட்சத்து 91 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அத்துடன் 19 ஆயிரத்து 900 ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வாரம் அதிக தொகையாக 11 இலட்சம் ரூபா பெறுமதியான கணினி உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ்.கொழும்புத்துறையில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் புத்தூரில் யாருமில்லாத வேளை வீடுபுகுந்த திருடர் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

சில்லாலை, பண்டத்தரிப்பில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியும், பெறுமதிமிக்க 2 கைத் தொலைபேசிகளும் திருடப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

மாதகலில் பயணித்த பஸ்ஸில் வைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத் தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைத் தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். யாழில் வீடு உடைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உடமைகள் திருடப்பட்டுள்ளன.

நல்லூரில் 6 அயிரம் ரூபா பெறுமதியான 2 பித்தளைப் பானைகள் திருடப்பட்டுள்ளன. மானிப்பாயைச் சேர்ந்த 2 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.


மானிப்பாய் கட்டுடையில் சைக்கிளில் சென்ற பெண் வைத்திருந்த கைப்பை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் வீடு உடைத்து ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் உடைமை திருடப்பட்டுள்ளன.

மட்டுவில் வடக்கில் 24 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பசுமாடு திருடப்பட்டுள்ளது . திருநெல்வேலியில் வீடு உடைத்து 11 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் மோட்டர் திருடப்பட்டுள்ளது.

கொடிகாமம் தோப்பு வேலியிப் பகுதியில் 2 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 5 பேர் கைது செய்யப்பளட்டுள்ளனர்.

வேலணை மண்கும்பான் பகுதியில் வீடு உடைத்து வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி 88 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும் 10 ஆயிரத்து 900 ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் வேலணை வடக்கைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ம-4)



அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் மற்றும் கால்நடைகளை கடத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்துவது சம்பந்தமான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றை பொலிஸார் நேற்று நடத்தினர். நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவீந்திரதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (ம-17)

## மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதியை இணைக்கப் புதிய வீதி

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ். மின்சார நிலைய வீதியையும் யாழ்.ஸ்ரான்லி வீதியையும் இணைத்து கஸ்தூரியார் வீதியை அண்மித்து புதியதொரு வீதி உருவாக்கப்படவுள்ளது என்று யாழ். மாநகர நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியையும், யாழ். ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் கஸ்தூரியார் வீதி ஒரு வழிப் பாதையாகவே இருந்து வருகிறது. அதனால் வாகனங்கள் சென்று வருவதிலும் சரி பொது மக்கள் பயணிப்பதிலும் சரி பெரும் இடையூறு இருந்து வருகின்றன. அந்தப் பிரச்சினையைச் சீர்ப்படுத்துவதாக புதிதாகப் அமையவுள்ள வீதி இருக்கும்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் நான்கு மாடிக் கட்டடத் தொகுதிக்கும் அதன் பின்புறமாக உள்ள குளத்துக்கும் இடையிலேயே புதிய வீதி உருவாக்கப்படவுள்ளது.

அந்த வீதியினூடாக பொது மக்கள் நடைபயணம் செய்யவும் சிறிய வகை வாகனங்களிலும் பயணிக்கவும் முடியும்.

பெரிய வகையைச் சேர்ந்த வாகனங்கள் அந்த வீதியூடாகப் பயணிக்க முடியாது. அந்த வகை வாகனங்கள் பிற வீதிகளூடாகவே செல்ல முடியும். யாழ். பழைய தபால் நிலைய வீதியையும் அதற்குப் பயன்படுத்தலாம்.

யாழ். மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. 'அதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-4)

## ஆதரவின்றி வாழ்ந்த வயோதிபர் கைதடிக்கு

யாழ்ப்பாணம், பெப்.23

மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயில் சுற்றாடலில் எவரது பராமரிப்பும் இன்றி வாழ்ந்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார் என்று இல்ல அத்தியட்சகர் என்.கிருபாகரன் தெரிவித்தார்.

நாகமுத்து சிவராசசிங்கம் (வயது-69) என்ற வயோதிபரை தெல்லிப்பழை பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி. கதிரமலை இல்லத்தில் இணைத்துள்ளார்.

இந்த வயோதிபர் மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

நீண்ட காலமாக மல்லாகத்தில் வசித்து வந்த இவர் பின்னர் எவரது பராமரிப்பும் இன்றி ஆலய சூழலில் வாழ்வைக் கழித்து வந்தார்.

தற்போது அவரின் உடல் நிலை பாதிப்படைந்துள்ள நிலைமை குறித்து ஊர் மக்கள் சமூக சேவைகள் உத்தியோகத்தரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். தற்போது இந்த வயோதிபரின் நலனைக் கருத்தில் கொண்டு கைதடி முதியோர் இல்லம் அவரை இல்லத்தில் இணைத்துள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது . (ம-17)

## கசிப்பு வைத்திருந்த பெண்: 60 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.23

கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணையில் இருந்து வந்தது.

2011 ஆம் ஆண்டு ஜனவரியில் சட்டவிரோதமாகக் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் புங்குடு தீவைச் சேர்ந்த இரத்தினம் நாகேஸ்வரி என்பவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் மீதான வழக்கு விளக்கத்துக்கு வைக்கப்பட்டிருந்தது.

வழக்கு நடைபெற்று வந்து விசாரணைகளின் மூலமாக அவர் சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 60 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் இரண்டு மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. (ம-4)

## மின்சார நிலைய வீதிக்கு வந்த வெளியிட பஸ்கள்

யாழ்ப்பாணம், பெப்.23

வெளிமாவட்டங்களுக்கான பஸ் தரிப்பிடம் மீண்டும் மின்சார நிலைய வீதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

ஏற்கனவே முற்றவெளி புல்லுக் குளத்துக்கு அருகில் உள்ள வளாகத்தில் கடந்த இரண்டு மாத காலமாக இந்த பஸ் தரிப்பிடம் செயற்பட்டு வந்தது.

தற்போது மீண்டும் மின்சார நிலைய வீதியில் முன்பு செயற்பட்டு வந்த அதே இடத்தில் இந்தத் தரிப்பிடம் செயற்பட்டு அங்கிருந்தே பயணிகளை ஏற்றி வருகின்றது.

இந்த தரிப்பிடம் போதிய வசதி இன்றி காணப்படுவதால் பயணிகள் சிரமப்பட்டும் வருகின்றனர். அத்துடன் அருகில் உள்ள வண்ணாங்குளத்தின் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருவதால் பஸ்களை தரிப்பதற்கு போதிய இடவசதி இன்றியும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14-17)

## வடமராட்சியில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவது குறித்து நடவடிக்கை

வடமராட்சி,பெப்.23

வடமராட்சி பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மாணம் எடுக்கப்படவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. வல்வெட்டித்துறை நகரில் 50 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மஹிந்த சிந்தனையில் கட்டாக்காலி நாய்களை அழிக்கக் கூடாதா என்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து உதவி பிரதேச செயலர் திருமதி உ.பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு சில வருடங்களுக்கு முன்னர் வீடு வீடாகச் சென்று நாய்களுக்கு கருத்தடை ஊசி ஏற்றப் பட்டது. தற்போது அந்த நடைமுறை இல்லை. இதுவும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.- என்றார்.

யாழ். மாநகர சபை கட்டாக்காலி நாய்களைப் பிடித்து வருகிறது. அதேபோல் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களும் நடவடிக்கை எடுக்கலாம் என்று சபையோரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்துக் குறித்து பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. எனினும் பொலிஸார் சரியான பதிலைக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்துக்கு வருவோம் என்று பிரதேச செயலர் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் கமகே, பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமை அலுவலகப் பொறுப்பதிகாரி ஜகத் அபயக்கோன் ஆகியோருடன் கிராம சேவையாளர்களும் கலந்து கொண்டனர். (ம-8)

**உதயன்** தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 9933, 222 9944, 567 9933, 567 9944
விளம்பரம்: 021 567 ...
விநியோகம்: 021 567 7222
தொலைநகல்
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 222 9731
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
... வீதி, நெல்லியடி (NB அருகே)
தொலைபேசி: 021 226 2789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
... சந்தை ரோட், சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: ... 021 226 3206, ... நெல்லியடி: 021 490 1519, ... 021 227 0399, ... 0752824478, ... 0774937585, ... 0778175116, ... 0779598917, ... 0775033571, ... 98, ... வீதி, மன்னார்: 023 222 33...

# தவறான முடிவுகள்

ஒரு காலத்தில் ஒரு மாமன்னன் இருந்தான். போர் மட்டுமே அவனது ஆட்சியின் சாதனையாக இருந்தது. இறுதியில் முதுமை அடைந்து, அவனது வாழ்வு முடிந்து யமலோகத்துக்கு பாசக்கயிற்றில் கட்டி இழுத்துச் செல்லப்பட்டான். அங்கு ஏராளமான விசாரணைகள். விதவிதமான பிரேரணைகள். சிலர் மட்டுமே அவனுக்கு ஆதரவு. பெரும்பாலானோர் அவன் குற்றவாளிதான் எனத் தீர்ப்பிட, அவனுக்கு நரகலோக வாசம் தண்டனையாகப்பட்டது.

தீர்ப்பைக் கேட்டதும் கதறினான் மன்னன்.

"ஐயோ! இது அநீதி. நீங்கள் முறையாக விசாரிக்காமல் எனக்கு நரக லோகவாசகத்தை தண்டனையாகத் தந்திருக்கிறீர்கள். இது திட்டமிட்ட சதி. அக்கிரமம்" என்று வாதாடவும் செய்தான்.

விசாரணைச் சபை தமக்குள் கூடி விவாதித்தது. யமதர்மன் மன்னனைப் பார்த்து "சரி. பொறுப்புக் கூறலுக்காக உனக்கு ஓர் அவகாசம் தருகிறோம். நீ ஏதாவது ஒரு நல்லகாரியம் செய்ததை நிரூபித்தால் சபை உன் தண்டனையை மாற்றுகிறோம்" என்று தன் முடிவைச் சொன்னான். மன்னனும் சில யமகிங்கரர்கள் சகிதம் பூலோகம் வந்தான். யமகிங்கிரர்களுக்கு தன்னுடைய ஆட்சியின் ஒரேயொரு நன்மையை நிரூபித்தாலும், அவனுக்குச் சொர்க்கம் கிட்டிவிடும்.

நாடு சீரழிந்து குட்டிச் சுவராக மாறியிருந்தது. மன்னன் தான் செய்த நன்மையை அடையாளப்படுத்தும் ஆதாரத்தை தேடி எல்லா இடமும் அலைந்தான். ஆனால் எதுவுமே கிடைத்தபாடில்லை. எங்கும் பசி, பட்டினி. ஒரு சிலர் மட்டுமே பணக்காரர்களாக இருந்தார்கள். அவர்களும் மன்னனின் உறவினர்களே. ஏனையோர் வாழ்வதற்கான வழிதெரியாமல், கடைசியில் சக மனிதர்களையே உணவாகக் கொள்ளுமளவுக்கு கொடூரமானவர்களாக மாறியிருந்தார்கள்.

மக்களில் எவருமே மன்னனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அதற்கேற்றபடி அவனது உருவத்தை மாற்றியமைத்தே அழைப்பட்டிருந்தான். எவருமே அவன் எந்தவொரு நன்மையைச் செய்ததாகவும் நினைவில்லை என்று கைவிரித்தார்கள். கடைசியில் ஓர் ஆமை மட்டுமே மன்னன் நன்மை செய்ததாக சொன்னது.

"மன்னனால் தான் இந்த ஏரி உருவானது. அதில் இன்னமும் உயிரினங்கள் வாழ வழிசமைத்தவன் மன்னனே. அவன் நீடூழி வாழ்க" என்று ஆமை சொன்னதை யமகிங்கரர்களும் கேட்டார்கள். உடனேயே அவர்கள் யமலோகத்துக்குத் தகவல் அனுப்பினர். மன்னன் மீதான நரகலோக தண்டனை நீக்கப்பட்டு அவனைச் சொர்க்க லோகத்துக்கு அழைத்துச் செல்ல புஷ்பகவிமானம் உடனே புறப்பட்டது.

ஆனால் விதி விளையாடியது. மன்னனின் வாய் சும்மாயிராமல் ஆமையிடம், "ஆமையே! நான் தான் உங்கள் மன்னன். ஆனால் எனக்கே இந்த ஏரியை எப்போது கட்டினேன் என்று நினைவில்லையே? அதை நினைவுபடுத்த முடியுமா?" என்று கேட்டான்.

உடனே ஆமையும், "தாராளமாக. நீ போர் செய்த போது பிடிக்கப்பட்ட இடங்கள் புதைகுழிகளாக மாற்றப்பட்டன. அங்கு மனிதர்களே இல்லாத நிலையை உருவாக்கினாய். போரில் கொன்று குவிக்கப்பட்ட மக்களின் ஏராளமான உடலங்களை தடயமின்றி மூட இதுபோன்ற பெரிய பள்ளங்களை உருவாக்கியிருந்தாய். காலப்போக்கில் அந்தப்பள்ளத்தில் மழைநீர் நிறைந்து, இப்படி நிறைய ஏரிகள் உருவாகின" என்றது. அவ்வளவுதான். யமகிங்கரர்களுக்கு தாம் தவறான தகவலை அனுப்பிவிட்டோம் என்று உறைத்தது. உடனேயே இன்னொரு தகவலை அனுப்பினர். "சொர்க்கத்துக்கு மன்னனை அழைக்க வரும் புஷ்பகவிமானத்தை நிறுத்துக". இதுவே அந்தத் தகவல்.

அப்போது ஆமை தன் வாயில் கௌவியிருந்த ஓர் ஓவியத்தை மன்னனிடம் கொடுத்தது. அதில் ஒரு பாலகனை மன்னன் ஆணையிட, பலியிடும் காட்சி வரையப்பட்டிருந்தது.

"மன்னா! நீங்கள் பாலகர்களை பலியிடும்போது, அதனை உங்கள் ஆஸ்தான ஓவியரைக் கொண்டு தத்ரூபமாக வரைந்து பின் விரும்பிய சமயங்களில் பார்த்து இன்புறுவதுண்டு. இதுவும் அன்று வரையப்பட்ட ஓவியம். ஒருமுறை அதைத் தவறவிட்டு விட்டீர்கள். நான் அதைக் கண்டெடுத்து பத்திரமாகப் பேணி வருகிறேன். இந்த ஏரியை உருவாக்கி, என்னை வாழவைத்தமைக்காக இதனை உங்களுக்குப் பரிசாக அளிக்கிறேன்" என்றது.

மன்னனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

யமகிங்கரர்கள் இன்னொரு செய்தியை யமதர்மனுக்கு அனுப்பினர். "இந்த மன்னனுக்கு நரகலோக வாசம் மட்டும் போதாது. எண்ணெய்ச் சட்டியில் போட்டு வேதனையுங்கள்"

'பேசாமல் சாதாரண நரகலோகதண்டனையை முதலே ஏற்றிருந்தால், இந்தப் படுபயங்கர தண்டனையில் இருந்து தப்பித்திருக்கலாமே' என்று மன்னன் தன்னைத்தானே நொந்துகொண்டான்.




# இனியும் உறங்குமா இந்தியா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பன்னிரண்டு வயது மகன் பாலச்சந்திரன் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ள ஆவணப்படங்கள், இங்கிலாந்தின் "சனல்-4' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி, அவை பத்திரிகைகளிலும் பிரசுரமாகி, உலகெங்கும் தமிழர் மனங்களில் அதிர்ச்சி, வேதனை, கோபம் என உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பன்னிரண்டு வயதுச் சிறுவன், கைதொடும் தொலைவில் துப்பாக்கியால் சுடப்படுவதை, "தாக்குதலுக்கு இடையே சிக்கி' இறந்ததாக யாராலும் சொல்ல முடியாது. ஆனாலும் இலங்கை அரசு இதை மறுக்கிறது. இலங்கை அரசின் இந்தியத் தூதரக அதிகாரி காரியவசம், "இந்தப் படங்கள் கணினித் திரிபுப் படங்கள்' என்கிறார். இந்தப் பிரச்சினையில் சர்வதேச விசாரணை தேவையில்லை என்று கூறிய அவர், பாலச்சந்திரனை இலங்கை ராணுவம் கொல்லவில்லை என்றும் சொல்கிறார்.

என்னதான் சொல்ல வருகிறார் இலங்கைத் தூதர் காரியவசம்? உலக அனுதாபம் பெறுவதற்காக, விடுதலைப்புலிகளே பாலசந்திரனைக் கொன்றிருக்கலாம் என்று சொல்கிறாரா? அது நம்பும்படியாகவா இருக்கிறது?

"போர்நிறுத்தப் பகுதி: இலங்கையின் கொலைக்களம்' எனும் ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ள இந்தக் காட்சிகள் குறித்த தடயவியல் ஆய்வுகள் சொல்லும் உண்மை- "இவை கணினித்திரிபுப் படங்கள் அல்ல; இவை ஒரே கேமராவில் எடுக்கப்பட்டவை' என்பதுதான்.

அம்பலம் ஏறியுள்ள இந்த ஆவணத்தை, "விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டார்' என்பதைக் கடந்து, இலங்கை ராணுவத்திடம் சிக்கிய சிறுவர்களும் பெண்களும் இவ்வாறுதான் கொல்லப்பட்டார்கள் என்பதற்கான போர்க்குற்ற ஆவணமாகத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கை ராணுவம், தனது கடைசிக் கட்டப் போரில், வெற்றியைத் தொட்டுவிட்ட மமதையுடன், எந்த வரையறையும் கட்டுப்பாடும் இல்லாமல் வெறித்தனமாகச் செயல்பட்டுள்ளது என்பதற்கான சாட்சியமாக இது பார்க்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று காரணம் கூறிக்கொண்டு, ஒட்டுமொத்தமாக அனைவரின் மீதும் தாக்குதல் நடத்திய இலங்கை ராணுவத்தின் வெறியினால்தான் குழந்தைகளும் பெண்களும் மிக அதிக எண்ணிக்கையில் சாவடைந்தனர். இலங்கை அரசின் பாஷையில் சொல்வதாக இருந்தால் 'காணாமல் போயினர்'!

அப்பட்டமான போர்க்குற்றத்தின் சாட்சியாக, பாலச்சந்திரன் கொல்லப்பட்ட நிழற்பட ஆவணங்கள் அமைந்துள்ளன. இலங்கையின் கடைசிநேர அழித்தொழிப்புப் போரின் அத்துமீறல்கள் குறித்து முழு விசாரணை நடத்தியும், இத்தகைய போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவும் வேண்டும் என்பதே அனைவரின் குரலாக இருக்கிறது.

இந்த ஆவணப்படத்தைக் கண்ட தமிழ்நாட்டின் பல அரசியல் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா, இலங்கையில் நடப்பது "ஹிட்லர் ஆட்சி' என்று கடுமையாகக் கூறியுள்ளார். தி.மு.க. தலைவர் கருணாநிதியும், ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மீண்டும் கொண்டுவர இருக்கும் கண்டனத் தீர்மானத்தின்போது "இலங்கையை இந்தியா காப்பாற்ற முயலக்கூடாது' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், இந்தப் போர்க் குற்றம் குறித்து இந்திய அரசின் கருத்து என்ன என்பது பற்றி இதுவரை மத்திய அரசு கருத்துத் தெரிவிக்கவில்லை.

ஈரானிலும், ஆப்கானிஸ்தானிலும் சொல்லிலடங்கா போர்க்குற்றங்கள் செய்த அமெரிக்காவே, இலங்கை அரசின் போர்க்குற்றத்துக்காக ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வரும் என்றால், ஏன் இந்தத் தீர்மானத்தை எந்தப் போர்க்குற்றமும் செய்யாத இந்தியாவே கொண்டுவரக்கூடாது? இலங்கைத் தமிழர்களைக் காக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு இல்லையா?

இலங்கையில், குறிப்பாக வடக்கில் மறுசீரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிக்காகப் பல நூறு கோடி ரூபாய் நிதியுதவி செய்வதோடு இந்தியாவின் கடமை முடிந்து விடாது. போர் ஓய்ந்த நிலையிலும், தமிழர்கள் வீடுகள் இல்லாமல், பள்ளிகளும் ஆசிரியர்களும் இல்லாமல், மருத்துவர்களும் மருத்துவமனைகளும் இல்லாமல் வடகிழக்கு மாகாணத்தில் இப்போதும் வேதனை தொடர வாழ்கிறார்கள்.

தமிழர் மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்க முடியாது என்று இலங்கை அதிபர் ராஜபக்ஷ வெளிப்படையாக அறிவித்துவிட்டார். அத்தோடு தமிழர் ஆட்சியும், தமிழர் அரசியலும்கூட இல்லாமல் செய்யும் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களர்களைக் குடியேற்றி, எல்லாப் பகுதியிலும் அவர்களைச் சிறுபான்மையினராக ஆக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருப்பதால்தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வாகிறார்கள். இந்த நிலைமையைத் தகர்க்க, சிங்களர்களைக் குடியேற்றி, தமிழர் வாக்குவங்கியை உடைக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. ஊர்களின் தமிழ்ப் பெயர்களைச் சிங்களத்துக்கு மாற்றி, சிங்களர் குடியேற ஊக்கப்படுத்துகின்றது. அடுத்த பத்தாண்டுகளில் வடகிழக்கு மாகாணத்தில் தேர்வு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழர்கள் பாதியாகக் குறைந்துபோவார்கள். அரசியல் பங்களிப்பிலும் தமிழர்கள் இல்லாமல் ஒடுக்குவதுடன் நின்றுவிடாமல், தமிழர்களை வெறும் மொழிச் சிறுபான்மையினராக மாற்றும் பணியில் ராஜபக்ஷ அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

ஒட்டுமொத்தத் தமிழகத்தின், உலகளாவிய தமிழர்களின் கோரிக்கையை மன்மோகன் சிங் அரசு ஏற்று செயல்படப்போகிறதா, இல்லையேல் போர்க்குற்றவாளியாக உலகமே கருதும் இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் பாதுகாவலர்களாக இருந்து அவரைக் காப்பாற்றப் போகிறதா என்பதுதான் தற்போதைய கேள்வி. இத்தனை ஆதாரங்கள் கிடைத்த பிறகும் இனியும் ஏன் தாமதம்?

*(நன்றி :தினமணி)*

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதிற்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மை உண்டு. முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**இடபம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**மிதுனம்:** உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**கடகம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் உண்டு. வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். செயல்களில் முன் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**சிம்மம்:** நீண்ட நாள்களாக தடைப்பட்டு வந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**கன்னி:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும்.

**நாளை**

மாசி- 12 ஞாயிற்றுக்கிழமை 24.02.2013
திதி: சதுர்த்தசி பி.இ. 02.43 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ. 02.01 வரை
சுபநேரம்: 09.29- 10.59 வரை
இராகுகாலம்: 04.59- 06.29 வரை

**துலாம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தடைப்பட்ட வேலையை மாற்று அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் வெற்றி பெறும் நாள்.

**தனுசு:** புதியவர்கள் நண்பர்களாவார்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். எதிலும் கவனத்துடன் செயற்படப் பாருங்கள்.

**மகரம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிட்டும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

**கும்பம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றி அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மீனம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | 1 | | 4 | 3 |
| | 6 | | 8 | 3 | | | 9 | |
| | | 3 | 2 | 4 | | 5 | | 7 |
| | | 1 | | | 5 | 6 | 2 | |
| | | 6 | | | | 4 | | |
| | 7 | 8 | 9 | | | 3 | | |
| 5 | | 7 | | 1 | 8 | 9 | | |
| | 1 | | | 9 | 2 | | 8 | |
| 8 | 3 | | 5 | | | | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 5 | 8 | 7 | 1 | 4 | 9 | 2 |
| 8 | 1 | 9 | 2 | 3 | 4 | 7 | 6 | 5 |
| 4 | 2 | 7 | 5 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 1 | 5 | 6 | 7 | 4 | 8 | 9 | 2 | 3 |
| 7 | 3 | 8 | 9 | 6 | 2 | 1 | 5 | 4 |
| 9 | 4 | 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 7 |
| 5 | 9 | 4 | 6 | 2 | 7 | 8 | 3 | 1 |
| 2 | 8 | 3 | 4 | 1 | 9 | 5 | 7 | 6 |
| 6 | 7 | 1 | 3 | 8 | 5 | 2 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உட்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

01-03-2013 இல்
மாணிக்க விழாவினைக் கொண்டாடும்
மாணிக்க விழா மகுடம்
1973 - 2013
கலையுலகக் கல்விக் கலங்கரை விளக்கமான
The Express Institute இனை
வாழ்த்துவதில் உலக மக்கள் உவப்படைகின்றனர்.

சங்கத்தில் உதித்து, தமிழ் இனத்தை வளர்த்தெடுக்கும்
எமது நிறுவனம் 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்'
என்றென்றும் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழிய பல்லாண்டுகள்...

வாழ்த்துவோர்,
நோர்வே வாழ் பழைய மாணவர்கள்.

# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



பிறப்பு 05 ★ 05 ★ 1925
இறப்பு 26 ★ 01 ★ 2013

யாழ்ப்பாணம், தொல்புரத்தை பிறப்பிடமாகவும் திருகோணமலை, மட்கோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## பொன்னுசாமி தையல்முத்து அவர்கள்

கடந்த 2013.01.26ஆம் திகதி சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி கிரியைகள் 2013.02.25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந் திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க. நந்தினி (பேர்த்தி)
25/12, மட்கோ வீதி,
இலிங்க நகர், திருகோணமலை.
தொ.பேசி: 026 2227568

குடும்பத்தினர்.

(c/4998) (10,6,7)

## மினிபஸ் மீது கார் மோதியது

வடமராட்சி,பெப்.23

மெதுவாகப் பயணித்துக் கொண்டிருந்த மினிபஸ் மீது கார் மோதியதில் காரின் முன்பகுதி பலத்த சேதத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் வீதி- மந்திகை ஆஸ் பத்திரிச் சந்தியில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.


யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் பருத்தித்துறை நோக்கி மெதுவாகப் பயணித்துக் கொண்டிருந்த மினிபஸ்ஸின் பின் பகுதியில் அதே பாதையில் பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த கார் மோதியதில் காரின் முன் பக்கம் பலத்த சேதத்துக்குள்ளானது. மினிபஸ்ஸின் பின்புறம் சிறிய சேதம் ஏற்பட்டது.

எனினும் பயணிகளுக்கோ, சாரதிக்கோ எதுவித சேதமும் இந்தச் சம்பவத்தின் போது ஏற்படவில்லை.

(வ-8)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிவகுருநாதன்



குருநாதசுவாமி கோயிலடி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவகுருநாதன் 17.02.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-நீலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தாம்பிகையின் ஆருயிர் கணவரும், செல்வஜோதி (ஆஸ்திரேலியா), சிவசக்தி (டென்மார்க்), வாசுகி (அமெரிக்கா), கோணேஸ்வரன் (கனடா), முரளிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரட்ணஜெயம், பாஸ்கரன், பத்மலால் (பத்தி), துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவகாமசுந்தரி, ஆறுமுகதாசன், பொன்னம்பலவாணர், அன்னலக்சுமி, காலஞ்சென்ற பரமகுருநாதன் மற்றும் ஞானசரஸ்வதி, சக்திவேல், விக்னேஸ்வரன், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆர்த்தி, ரூபன், அனோஷ், ஆதீனா, நீரஜா, கிரிஷான், தர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-மனோன்மணி தம்பதியரின் சகோதரியின் (மருமகன்) மகனும், இராஜலக்ஸ்மி, சூரியகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 3280 செபேட் அவெனியூ E.Scarbrough எனும் முகவரியில் உள்ள Highland Funeral Home இல் 23.02.2013 அன்று மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு 24.02.2013 அன்று காலை 9.00 தொடக்கம் 10.30 மணிவரை இறுதிக் கிரியை நிகழ்வு நடைபெற்று 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக 256 Kingston Road, Toronto எனும் முகவரியில் உள்ள St.John's நோர்வே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

6473422636 (33585) (6.10)

**மனைவி, பிள்ளைகள்,**

# இலங்கை வரலாற்றில் பல்கலைக்கழகங்களுக்கு இம்முறையே ஆகக்கூடிய மாணவர் அனுமதி

## 2016ஆம் ஆண்டில் 80 வீதமாக அதிகரிக்கும் என்கிறார் பந்துல



கொழும்பு,பெப்.23
இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இந்த முறையே ஆகக்கூடிய மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை 63.1 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கல்வியமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டார்.

பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

2016 ஆம் ஆண்டை அடையும்போது பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படும் வீதம் 80 ஆக அதிகரிக்கப்படும்.

கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற போதிலும், அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 4 வீத வளர்ச்சியை மாத்திரமே கொண்டிருக்கின்றது. அதனால் இதனை வெற்றியாகக் கருதமுடியாது.

கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் முயற்சியால் ஓரளவு சாதகமான பயன்களை அடையக் கூடியதாக இருந்துள்ளது. எதிர்காலத்தில் இதன் வீதத்தை அதிகரிக்கும் வகையில் வினாத்தாள்கள் மற்றும் பாட விதானங்களில் மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்படும். 2012 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள், ஒவ்வொரு பாட நெறிகளிலும் மாணவர்கள் பல் கலைக்கழகத்துக்கு தெரிவாகும் முறைமை ஆகியன கல்வி அமைச்சினால் மாவட்ட மற்றும் மாகாண மட்டரீதியில் ஆராயப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் கொழும்பு மாவட்டத்திலேயே விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவைச் சேர்ந்த அதிகூடிய மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

விஞ்ஞானத்துறையைப் பொறுத்தவரை கொழும்புக்கு அடுத்தபடியாக முறையே மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, கம்பஹா, காலி, கண்டி என்ற ஒழுங்கில் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

கணிதத்துறையில் இரண்டாம் இடத்தில் காலியும் அதனைத் தொடர்ந்து முறையே மாத்தறை, யாழ்ப்பாணம், கண்டி என்ற ஒழுங்கிலும் மாணவர்கள் தெரிவாகும் எண்ணிக்கை அமைந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து அதிகூடிய வர்த்தகப் பிரிவு மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கலைத் துறையைச் சேர்ந்த அதிக மாணவர்களும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

விஞ்ஞானத்துறையில் இரத்தினபுரி, மொனராகலை, மாத்தளை, நுவரெலியா, முல்லைத்தீவு, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

கணிதத்துறையில் திருகோணமலை, நுவரெலியா, மன்னார் ஆகிய மாவட்டங்கள் பின்னடைவுகளை கண்டுள்ளன.

வர்த்தகப் பிரிவில் முல்லைத்தீவு, மாத்தளை ஆகிய மாவட்டங்களும், கலைப் பிரிவில் கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. என்றார். (அ)

## வைத்தியர் மீது அசிட் வீச்சு

கொழும்பு,பெப்.23

வடமத்திய மாகாணத்தின் ஆயுள்வேத வைத்தியத்துறை ஆணையாளர் வைத்தியர் குமார அல்விஸ் அசிட் வீச்சு தாக்குதலுக்கு உள்ளாகியதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் அநுராதபுரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்தில் காயமேற்பட்ட நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்,பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



இலங்கையின் சியாம் மகா நிக்காயவின் 260ஆவது வருட நிறைவை முன்னிட்டு இலங்கை வந்த தாய்லாந்துக் குழு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியது. அந்தக் குழுவில் வந்த வண. தம்ம கோஷஜான் தேரருக்கு ஜனாதிபதி புத்தர் சிலையொன்றை வழங்குகிறார்.

# நெல்லுக்கு உயர்ந்தவிலை கிடைக்கும்வரை விவசாயிகளுக்கு விசேட கடன் திட்டம்

## கறுப்புச்சந்தை மோசடிகளைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்கிறார் வர்த்தகத்துறை அமைச்சர்

கொழும்பு,பெப்.23

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது அறுவடையைப் பேணி உயர்ந்த விலையை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியாக கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் மக்கள் வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தகத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விவசாயிகளுக்கான தவணைக் கடன் வழங்கும் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வங்கிக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதற்கமையவே இந்தக்



கடன் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அறுவடை செய்த உடனேயே அந்த அறுவடையை குறைந்த விலைக்கு கறுப்புச் சந்தை முதலாளிகளுக்கு விற்பனை செய்யாமல் களஞ்சியப்படுத்தி வைத்து நிர்ணய விலைக்கு விற்பனை செய்வதற்கு இந்தக் கடன் வழங்கும் திட்டம் உதவியாக இருக்கும்.

உற்பத்தி செய்த நெல்லைப் பேணி வைத்திருந்து உயர்ந்த விலையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

இந்த கடனுக்கு குறைந்த வீத வட்டியே அறவிடப்படும். அறுவடையை உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யும்வரை நெல் உற்பத்திக்கான செலவை ஈடுசெய்து கொள்வதற்கு இது வாய்ப்பாக இருக்கும். இந்தக் கடன் மூலம் நெல்லுக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த இரு கடன் திட்டங்களில் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாவும் மற்றைய கடனாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகளுக்கு நெல்லுக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

தற்போது நாடெங்கும் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. நெல் சந்தைப்படுத்தும் நிலையங்களும் நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

இதற்கமைய வடமேல் மாகாணம் மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் உள்ள 21 நெல் கொள்வனவு செய்யும் நிலையங்களில் தற்பொழுது நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. - என்றார். (ச)

# உரிமைகளைப் பெற முஸ்லிம்களும் விடுதலை வாதிகளாக மாறவேண்டும்

## மாவை எம்.பி. கோரிக்கை

கொழும்பு,பெப்.23

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. இன்று முஸ்லிம் மக்களின் காணிகள் பறிக்கப்படுகின்றன. பள்ளி வாசல்கள் தாக்கப்படுகின்றன. ஹலால் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவ்விடயங்களைப் பற்றிப் பேசுங்கள். உரிமைகளை வென்றெடுக்க விடுதலைவாதிகளாக மாறுங்கள்.

இவ்வாறு நாடாளுமன்றில் பேசும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

பொறுப்புடன் பதில் அளிக்க வேண்டிய அமைச்சர் குறிப்பிட்ட விடயத்துக்கு அப்பால் பொறுப்பற்ற தன்மையில் பேசுவது எமக்குப் பெரும் வேதனையளிக்கின்றது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. நாம் முஸ்லிம் மக்களுடன் பேசவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் விருப்புடன் இருக்கின்றோம்.

இன்று முஸ்லிம் மக்களின் காணிகள் பறிக்கப்படுகின்றன, பள்ளிவாசல்கள்



தாக்கப்படுகின்றன, ஹலால் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவ்விடயங்களைப் பற்றிப் பேசுங்கள். உங்கள் உரிமைகளை வென்றெடுக்க விடுதலை வாதியாக மாறவேண்டும். ஜனநாயகத்தை சிதைக்கும் இராணுவத்தின் அடாவடித் தனங்களை நியாயப்படுத்த முனைய வேண்டாம்.

அரசு இடம்பெயர்ந்த சகல மக்களையும் மீள்குடியேற்றம் செய்து விட்டதாகக் கூறுகின்றது. ஆனால், இன்னும் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். நாம் யாரிடமும் யாசகம் கேட்கவில்லை. எங்களுடைய சொந்த காணிகளையும் வீடுகளையும்தான் கேட்கின்றோம்.

இன்று கிடைத்த தகவலின்படி யாழ்ப்பாணத்தில் 118 தனியார் விவசாய காணிகள் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இராணுவ அட்டகாசத்தின்போது மக்களால் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?

இதுதொடர்பான புகைப்படங்கள் சகல பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அந்த புகைப்படங்கள் பொய்யானவை என்று பாதுகாப்பு தரப்பால் சொல்லப்படுகின்றது.

அன்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஒளிப் படங்கள் இருக்கின்றன. அவை பொய்யானவையா? இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். உதயன் பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளர் தாக்கப்பட்டுள்ளார். அவருடைய புகைப்படக் கருவி உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-சி)

## பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவருக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு,பெப்.23

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்த ஒருவருக்கு கண்டி உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டமை மற்றும் அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்களை வைத்திருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. மாத்தளையைச் சேர்ந்த ராமநாதன் நவனீதன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நபரை 2008 ஆம் ஆண்டு பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 14.03 2013.

## Unit of Allied Health Sciences, Faculty of Medicine

Temporary Demonstrator in Nursing/Medical Laboratory Sciences/ Pharmacy

## Unit of Siddha Medicine

Temporary Lecturer / Temporary Demonstrator in Siddha Medicine

| Post | Salary scale |
|---|---|
| Temporary Lecturer | Rs.26,020/-(fixed) p.m |
| Temporary Demonstrator | Rs.21,370/-(fixed) p.m |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

(C/6679)(7.11)

# பின் உரித்தாளருக்கு ஊழியர் சேமலாப நிதி

யாழ்ப்பாணம், பெப்.23

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்து அதை எடுக்க தவறிய நிலையில் மரணமானவர்களுக்கு அந்த நிதிக் கொடுப்பனவு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் இவ்வாறு மரணமான 43 பேரின் பின் உரித்தானவர்களுக்கு இந்த நிதி வழங்கப் பட்டுள்ளது என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

குறிப்பாக ஊழியர் சேமலாப நிதி திட்டத்தில் உள்ளவர் மரணமடைந்தால் அவருக்கான நிதி அவரின் பின் உரித்துடையவருக்கு வழங்குவது வழக்கம்.

பின் உரித்துடையவர் முன்னர் கொழும்பு சென்றே இந்த நிதிக்கு விண்ணப்பிப்பது வழக்கம்.

தற்போது தொழில் திணைக்களத்தில் கடந்த ஆண்டில் டிசெம்பர் மாதத்தில் பெருவிரல் அடையாள கருமபீடம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்தக் கருமபீடம் மூலம் பெரு விரல் அடையாளம் பெறப் பட்டு இறந்தவர்களின் பின் உரித்துடைய வர்கள் இந்த நிதிக்கு விண்ணப் பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## துயர் பகிர்கின்றோம்



யா/நாவாந்துறை
றோ.க.வித்தியாலயத்தில்
ஆசிரியையாக கடமையாற்றும்
**திருமதி சாந்தினி அருள்தாஸ்**
அவர்களின் அன்பு மாமனார்
**தேவசகாயம்**
**அந்தோனிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால்

துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

(33672)(3.7)

## துயர் பகிர்கின்றோம்



எமது ஆலய பரிபாலன சபை
உபதலைவரும்
இளைப்பாறிய உதவிதொழில் ஆணையாளருமான
**திரு. சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி**
அவர்களின் மறைவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாரும், காளியம்பாளும் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு,
ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயில்,
(காளிகோயில்) பரிபாலன சபை.

(33676)(45.7)

## வான் விற்பனைக்கு

Toyoto Dolphin LH113 96 model 6 Nuts GQ--xxxx தொடர் இலக்கமுடைய வான் விற்பனைக்கு.

(33682)(3.7) தொடர்பு:0773034467

## வீடு வாடகைக்கு

இல.09, கனகபுரம், 1ஆம் பண்ணை, கிளிநொச்சியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: (33684)(5.7.25) 077 075 4969, 077 714 9396

advt@uthayan.com 0215671111

# BID NOTICE
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

| Serial No | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 01 | Renovation of Skin clinic | 500.00 | 25,000.00 | 60 | 1.3 | C9 |
| 02 | Stainless Steel Curtain Pipes Fixing on Ward no 16 A | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 03 | Stainless Steel Curtain Pipes Fixing on Ward no 16 B | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 04 | Stainless Steel Curtain Pipes Fixing on Ward no 14 | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 05 | Construction of Toilet In Ward no 19 | 500.00 | 12,000.00 | 60 | 0.7 | C9 |
| 06 | Renovation of Hospital Ponnampalam Road Boundary Wall | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 04/03/2013.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accepted till 10.00am on 05/03/2013 and open immediately thereafter. Bidders or their authorized representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
22/02/2013.

STUDY IN CANADA
STEP UP IN LIFE!
Spot Admission
3 Years Work Permit in Canada & more!!!
Intake Available for May 2013
Complete 2 Years Ontario College Diploma in Hospitality Management In JUST 8 months at FANSHWE College Canada
INVITES HOSPITALITY DEGREE / DIPLOMA HOLDERS!!!
MINIMUM PAY SCALE $ 10.50 PER HOUR (UNDER CURRENT IMMIGRATION RULES)
கொழும்பு, யாழ்ப்பாணம்

Admissions
Date 21st, 22nd, 23rd, 24th February
Time 10.00am to 4.00pm
Brock University | Niagara College | Cambrian College | Lambton College | Seneca | Fanshawe College | Loyalist
ASTRA INTERNATIONAL EDUCATION
SENATOR CENTRE for CANADIAN EDUCATION
An ISO 9001:2008 Organisation
No. 71-1/1 Manning Place, Wellawatta, Colombo-06.
Mobile: 0773 900 161 / 0750 252 141
CHENNAI | COIMBATORE | COONOOR | MADURAI | TRICHY | ERODE | PONDY | OMAN | COLOMBO
www.thesenator.org info@thesenator.org

## அம்பாறை மாவட்டத்தில்

# தமிழ்பேசும் மக்களின் நிலங்கள் பெரும்பான்மை இனத்தவரால் ஆக்கிரமிப்பு

### மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு



எருவில்,பெப்.23

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் பெரும்பான்மை இனத்தவரால் ஆக்கிரமிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் குற்றம் சாட்டியுள்ளார்.

கல்முனை பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தில் 4 பிரதேச சபைகள் இருக்கின்றன. அதில் பொத்துவில், சம்மாந் துறை, கல்முனை ஆகிய 3 பிரதேசங்கள் எந்தவிதமான உட்கட்டமைப்பும் இல்லாமல் இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

நாலா பக்கங்களாலும் எங்களை ஆக்கிரமித்து எங்களை அழிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை உணர முடிகின்றது.

இனிவரும் காலங்களிலாவது திட்டமிட்டு கல்வி, சுகாதார அபிவிருத்தி போன்றவற்றில் அக்கறையுடன் இருக்காவிட்டால் எதிர்காலத்தில் கல்முனைப் பிரதேசம் இருள் சூழ்ந்த பிரதேசமாகவே காட்சிதரும்.

எந்தப் பிரச்சினை வந்தாலும் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். கல்முனையில் நல்ல விடயங்கள் செயற்படுத்தப்படும்போது ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒதுங்கியிருக்க வேண்டும்.

ஒரு பிரதேசத்தில் ஒரு சமூகம் வாழ்கின்றதென்றால் அவர்களுடைய கலை, கலாசாரங்கள் , இருப்பு என்பவை பாதுகாக்கப்படவேண்டும். அப்போது தான் அந்தச் சமூகம் தலை நிமிர்ந்து வாழமுடியும். அதற்காக அனைவரும் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு சேவையாற்ற வேண்டும்.-என்றார். (ச-31)

## கற்பாறை சரிவால் இடம்பெயர்ந்த மக்கள் 3 மாதங்களாக தற்காலிக இருப்பிடத்தில்

நுவரெலியா,பெப்.23

நுவரெலியா, இறம்பொடை, லெவண்டன் தோட்டத்தில் ஏற்பட்ட கற்பாறைச் சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் கடந்த மூன்று மாதங்களாகத் தற்காலிக இருப்பி டங்களிலேயே சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் லெவண்டன் தோட்டத்தின் மலை உச்சியிலிருந்து கற்பாறைகள் சரியத்தொடங்கியதையடுத்து மலையடிவாரத்தில் வாழ்ந்துவந்த 63 குடும்பங்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேற நேரிட்டது.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் லெவண்டன் பாடசாலைக்கு அருகிலுள்ள இடமொன்றில் தற்காலிகக் குடிசைகளில் குடியமர்த்தப் பட்டனர்.

எனினும், போதுமான அளவு அடிப்படை வசதிகள் இன்றி சுமார் 200 பேர் கடந்த மூன்று மாதங்களாக சிரமத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

வேறொரு இடத்தில் தமக்கான நிரந்தர வீடுகள் நிர்மாணித்துக் கொடுப்பதற்கு நுவரெலியா மாவட்ட செயலகத்தால் எவ்வித வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கென காணி அடையாளம் காணப்பட்டுள்ளபோதிலும், அதற்கான காணியை ஒதுக்குவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவனம் இதுவரை மேற் கொள்ளவில்லையென நுவரெலிய மாவட்டச்செயலர் டீ. பீ. ஜீ. குமாரசிறி தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான சகல வழிமுறைகளையும் நுவரெலிய மாவட்ட செயலகம் ஆராய்ந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மீது தாக்குதல்

திருகோணமலை,பெப்.23

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பியந்த பத்திரன தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திருகோணமலை ஆண்டாங்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டில் இருந்தபோதே கிழக்கு மாகாண சபைத் தலைவரின் மகன் உட்பட இரண்டு வாகனங்களில் வந்தவர்கள் அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட பியந்த பத்திரன திருகோணமலை வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்கென கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற் றப்பட்டுள்ளார்.

அவரைத் தாக்கிய மாகாணசபைத் தலைவரின் மகனும், உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பியந்த பத்திரணவைத் தாக்கிய வரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது. (40)

## புதையல் தோண்டிய மூவர் மாட்டினர்

திருகோணமலை,பெப்.23

திருகோணமலை, புல்மோட்டை , பொத்மலகுடாப் பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள புராதன இடமொன்றில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

## பொத்துவில் அல்-அக்ஷா வித்தியாலயத்தில்

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

அம்பாறை,பெப்.23

பொத்துவில், சின்ன உல்லை அல்-அக்ஷா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்களை நியமிக்கும் வரை பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புவதில்லை என்று பெற்றோர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 575 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கு 32 ஆசிரியர்கள் தேவையாக இருந்தபோதும் தற்போது 18 ஆசிரியர்கள் மாத்திரமே கல்வி கற்பித்து வருகின்றார்கள்.

பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை வகுப்புகள் நடைபெறு கின்றன. எனினும் மாணவர்களின் தொகைக்கேற்ப ஆசிரியர்கள் இல்லாமையால் தரம் 6 முதல் 11 வரை தமிழ், இஸ்லாம் ஆகிய இரண்டு பாடங்கள் மாத்திரமே தற்போது கற்பிக்கப்பட்டு வருகின்றன.

முதலாம் தவணைப் பரீட்சைக்கான காலம் அண்மித்திருக்கும் இவ்வேளையில் மாணவர்கள் பரீட்சையை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது.



இந்தநிலை தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை மாணவர்களின் கல்வி விடயத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித் தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகைதந்த பொத்துவில் கோட்டக்கல்வி அதிகாரி ஏ.அப்துல் அசீஸ், இது குறித்து மேலதிகாரிகளிடம் தெரியப்படுத்தி உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாகக் கூறினார்.

தேவைப்படும் ஆசிரியர்களை நியமிக்கும்வரை பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புவ தில்லை என்று பெற்றோர்கள், பழைய மாணவ சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். (ச)

## தெரு மின் விளக்குகளை அகற்றியது மின்சாரசபை

### திருகோணமலை வீதிகள் இருளில் மூழ்கும் நிலை என்கின்றனர் மக்கள்

திருகோணமலை,பெப்.23

திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதி, சிவன்வீதி, சமாது லேன் வீதி ஆகிய வீதிகளில் திருகோணமலை நகரசபையால் பொருத்தப்பட்ட தெருமின் விளக்குகளை இலங்கை மின்சார சபையினர் அகற்றியுள்ளனர்.

இந்த மின் விளக்குகள் திருகோணமலை நகர மின்சார சபை அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதன்காரணமாக குறிப்பிட்ட வீதிகள் இரவில் இருளில் மூழ்கியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மின் விளக்குகள் இன்றி எமது பகுதி வீதிகள் இருளில் இருந்தபோது நாங்கள் மின்சார சபையிடம் முறையிட்டோம்.

மின்சாரசபையின் திருகோணமலை நகர அலுவலக உத்தியோகத்தர்கள் இந்த விடயம் எங்களுடைய வேலை இல்லை. மின்குமிழ்களை பொருத்துவது நகர சபையின் பணி. நகரசபையிடம் சென்று முறையிடுங்கள் என்று தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் குறித்து நகரசபையிடம் நாங்கள் தெரிவித்தபோது, நகரசபை நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுத்து தெரு மின் விளக்குகளை பொருத்தியுள்ளது. தற்போது திடீர் என மின்சார சபையினர் தெரு மின் விளக்குகளை அகற்றியுள்ளனர்.

இந்தச் செயல் எந்தவகையில் நியாயமாகும். மின்சார சபையின் இந்த நடவடிக்கை தொடருமானால் நகரின் சகல வீதிகளும் இருளில் மூழ்கும் நிலை உருவாகும்.-என்றனர். (ச-40)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு காராளசிங்கம்



கரவெட்டி கிழக்கு,யாக்கருவைப் பிறப்பிடமாகவும் சந்நிதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு காராளசிங்கம் நேற்று (22.02.2013) வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் யாக்கருவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிர்காமு-பார்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், ஆவரங்கால், 10ஆம் கட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-புதியாத்தை தம்பதியரின் மருமகனும் இளையபிள்ளையின் பாசமிகு கணவரும், இலட்சுமி (சின்னமணி -யாக்கரு), சுப்பிரமணியம் (வவுனியா),காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை(ஓய்வுபெற்ற ஆசிரியர்,பத்தமேனி) கந்தசாமி (நுணாவில்)மற்றும் சின்னப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மார்க்கண்டு (ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்- கொழும்பு), காலஞ்சென்ற கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வயோகம், வாமளாதேவி (லண்டன்), அற்புதராசா(லண்டன்), மாலினி (லண்டன்), தபோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரத்தினம்(கரவெட்டி அஞ்சல் அலுவலகம்), பாலேஸ்வரன் (லண்டன்), திருச்செல்வி (லண்டன்),தவராசா (லண்டன்), பகீரதன்(உள்ளூராட்சி அமைச்சு வட.மா),ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பொன்னையா (ஓய்வுநிலை ஆசிரியர்-யாக்கரு), கந்தசாமி (ஆவரங்கால்),கண்மணி(ஓய்வுநிலை ஆசிரியர்-பத்தமேனி), கனகாம்பாள் (வவுனியா), லீலாவதி (நுணாவில்),சறோஜினிதேவி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், லண்டனைச் சேர்ந்த ஜனனி,ஜாவாகினி, சுஜானி,டெசியா,அஜன்,பிரவீன்,தருண் மற்றும் சுபீட்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2013) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி,தீர்த்தாங்குளம்,உள்ளிவிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

145,சந்நிதி வீதி,
அச்சுவேலி.
021 300 8694.


தகவல்:
குடும்பத்தினர்.

(சி/6630)(5)

# மரண அறிவித்தல்கள்

## கணவதிப்பிள்ளை கறுவல்தம்பி

*(இளைப்பாறிய கிராமசேவையாளர், வடமராட்சி கிழக்கு)*



வெற்றிலைக்கேணி முள்ளியானைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கறுவல்தம்பி கடந்த செவ்வாய்க்கிழமை (19.02.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பத்தினி தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும் தங்கம்மா (பூரணி) யின் அன்புக் கணவரும், உமாபதி, ஐங்கரநாதன், பாமலோஜினி, வாமதேவன், வித்தியாரஞ்சினி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற வடிவேற்கரசன், ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிரட், சிவானந்தம், பிரதீஸ்குமார், பேராயினி, சோபாயினி, வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனும், சாள்பன், சௌமியா, கலக்சன், கிருத்திகா, பிலக்சி, தாரணி, அனிந்திரை ஆகியோரின் அன்புத் தாத்தாவும் (பேரன்) காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, இளையபிள்ளை, வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), நாகராஜா (யா/நெல்லியடி ம.ம.வி. ஆசிரியர்), தங்கமணி, கலைவாணி ஆகியோரின் மைத்துனரும் இராசையா (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி, உதவி ஆணையாளர்) பேரின்பநாயகம் (முன்னாள், பரந்தன் இரசாயனகூட்டுத்தாபனம்), ஞானவேல் (சமூக சேவைகள் திணைக்களம், யாழ். மாவட்ட உத்தியோகத்தர்) ஆகியோரின் சகலனும் உமாராணி (யாழ். கரணவாய், ம.வி. ஆசிரியர்), ஜெயந்தினி (யாழ். விக்னேஸ்வரா கல்லூரி ஆசிரியர்), காலஞ்சென்ற சிவகுரு மற்றும் நாகலிங்கம், இலட்சுமிப்பிள்ளை, அபிராமிப்பிள்ளை, வடிவேலு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அம்மன் கோயிலடி கரணவாய் தெற்கு, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவைரம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
தொ.பே: 0779680076

தகவல்:
குடும்பத்தினர்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஈழத்து மரச்சிற்பக் கலைவரலாற்றிலே
அழியாத தடம்பதித்த ஆறுமுகம் சிற்பாலயத்தின் சிற்பி

## ஆறுமுகம் சிவலிங்கம்



அவர்கள் கலா பூஷணம் விருது பெற்றமையை இட்டு
மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்
இவரும் இவரது குழுவினரும் தனித்துவம் மிக்க
தேர்களைச் செய்து சாதனை படைத்தவர்கள்.
இவரது சகோதரர்களான காலஞ்சென்ற கலாகேசரி
தம்பித்துரை, தேர்க்கலை அரசு ஜீவரட்ணம்
அவர்களின் சிற்பப்பயணத்தின் தொடர்ச்சியாகத் திகழும்
கலாபூஷணம் ஆறுமுகம் சிவலிங்கம் அவர்கள் எங்கள்
ஆலயத்துடன் அத்தியந்த உறவுபூண்டு ஒழுகுபவர். அவர்
கலாபூஷணப் பட்டம் பெற்றமைக்கு எமது நெஞ்சு நிறைந்த
பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்
பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலயம்,
திருநெல்வேலி.

[உ/6627][45.7]


# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் சோமசேகர சர்மா

*(இளைப்பாறிய அரச அலுவலகர், கணக்காளர் பிரிவு, கச்சேரி, யாழ்ப்பாணம்)*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பத்திரகாளி கோயிலடி, தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரஐயர் சோமசேகர சர்மா நேற்று (22.02.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சர ஐயர் விஜயலக்ஷ்மி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெங்கடாசல சர்மா பவானி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கௌரி மனோகரியின் அன்புக் கணவரும் ஜெயபாலசர்மா (மாத்தளை), முரளிதரசர்மா (பூசகர், வீரமாபிடாரி அம்மன் தேவஸ்தானம், கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலரஞ்சனி (ஆசிரியர், திருவள்ளுவர் வித்தியாலயம், பலாப்பத்வெல), சாந்தினி (தாவடி) ஆகியோரின் அன்பு மாமனும் கப்ரஜன், வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சோமர் வீதி, தாவடி தெற்கில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (23.02.2013) சனிக்கிழமை முற்பகல்10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தாவடி தெற்கு, கொக்குவில்,
தொ.பே: 021 222 5970

தகவல்
சோ.முரளிதரசர்மா (மகன்)


# மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

எலக்ரோணிக் கம்பனியில் பைக்கிங் வேலைக்கு ஆள் தேவை.
Room : Free
உணவு : Free
சம்பளம் : 55000
குறைந்த பணத்துடன் சென்று மீதி பணத்தை மாதச் சம்பளத்தில் செலுத்தும் வசதி செய்துதரப்படும்.

தொடர்பு:
0776911402, 0777854086

# மணமகள் தேவை

பிரித்தானியா (UK)குடியுரிமையுடைய வேலணை இந்து கௌரவ குடும்பம் 1981 கேட்டை விருச்சிக ராசி 4இல் செவ்வாய் 37 மொத்தக் கிரக பாவம் 5'6'' GCE A/L. எக்கவுன்ஸ் சுப்பர் மார்க்கட் உரிமையாளர். மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. மணமகன் இலங்கை வந்துள்ளார். உடன் அணுகவும். அனைத்து இனத்தவர்களில் மணமக்கள் தேவைக்கு பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

S.K.சிவகரன்(அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
42/11 இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
கிளை: கல்வியியற் கல்லூரி வீதி,
பூந்தோட்டம், வவுனியா.
தொ.பே.077 969 4009/ 077 145 0599
Email: Shivaalaya@yahoo.com
Jesus wedding matrimony@gmail.com
(33660)(5.7.25)

# காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சந்தி,சித்தன்கேணி வீதியில் 29.02 பேர்ச்சஸ் வளவு உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776463843,0773257019 (33653)(3.7)

# வேலையாள்கள் தேவை

புதிதாக தாவடியில் ஆரம்பிக்கப்பட்ட ஹோட்டல் ஒன்றிற்கு பிறைட்றைஸ், கொத்து ரொட்டி செய்வதற்கு வேலை ஆள்கள் தேவைப்படுகின்றார்கள்.
தொடர்பு:0779790899
(33683)(3.7)

# கடை வாடகைக்கு

67, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் கடை வாடகைக்கு உண்டு. சவுதி அரேபியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட மின் உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு.
(பார்வையிடும் நேரம் 10 மணி-4 மணிவரை-24, 25ஆம் திகதிகள்)
தொடர்பு: 077 268 8434
(33680)(5-7-25)

# புதுக்கடை திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான நந்தன வருடம் மாசிமாதம் 11ஆம் நாள் (23.02.2013) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 வரையுள்ள பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

## நியூ சோதி ஸ்ருடியோ




என்னும் புதுக்கடை திறப்பு விழா செய்ய இறைவன் திருவருள் துணைகொண்டு நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கடையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி பரஞ்சோதி குடும்பத்தினர்.

(33675) (3.0.7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.23

நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் சென் பீற்றேஸ் தேவாலய முன்றலில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆங்கில, உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக நவாலி பங்குத் தந்தை வண. பிதா வை.பி. சோதிநாதன் அடிகளாரும் கலந்து கொள்வர். (3-100)

* * *

யாழ்ப்பாணம், பெப்.23

திருநெல்வேலி 'சிமாட் கிட்ஸ்' முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பரமேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராசாவும், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியர் எம்.கௌரியம்பாளும் கலந்துகொள்வர்.

* * *

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் கே.சசிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா கலந்து கொள்வார்.

* * *

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். (3)

# மின் தடைஅறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் மின்மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரையும் புன்னாலைக் கட்டுவன், புத்தூர், ஆவரங்கால், வீரவாணி, வாதரவத்தை, ஊறணி, அச்சுவேலி, வல்லை முதல் மந்திகை வரையான வடமராட்சிப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம், சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், பன்னாலை, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

# சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சைக்கிள்கள் பரிசோதனை

தென்மராட்சி, பெப்.23

சாவகச்சேரி நகர்ப் பகுதி ஏ-9 வீதியில் மாலை 6 மணிக்குப் பின்னர் செல்லும் சைக்கிள்கள் பொலிஸாரால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

சைக்கிளில் பிரேக், மட்காட் லைற், இந்த வருடத்துக்குரிய இலக்கத் தகடு ஆகியவை உள்ளனவா எனப் பரிசோதிக்கப்பட்டு இவை இல்லாதவர்களின் அடையாள அட்டை பெறப்பட்டு பதிவு செய்து வருவதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

சைக்கிளில் பிரேக் இருப்பதை உறுதிப்படுத்த பொலிஸார் அதனை செலுத்திப் பார்ப்பதாகவும் கூறப்பட்டது.

மாலை மற்றும் இரவு வேளைகளில் ஏ-9 வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் சைக்கிளில் பிரேக் மற்றும் மட்காட் லைற் இல்லாததால் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன. அதனாலேயே இவை பரிசோதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் சைக்கிள்கள் பரிசோதனை மேற்கொள்ளவிருப்பதாகவும், பரிசோதனையின் போது சைக்கிள்களில் பிரேக், லைற், மட்காட் லைற், வருடத்துக்குரிய இலக்கத் தகடு போன்றவை இன்றி வீதியில் செல்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-9)

# தூய ஆவியின் செயற்பாடு

இயேசு தனது உலக மீட்புப் பணியை ஆரம்பிக்க இருந்த வேளையில் தூய ஆவியால் பாலைநிலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு 40 நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அப்போது அவர் அலகையால், சாத்தானால் சோதிக்கப்பட்டார். (லூக் 4:1-13)

தூய ஆவியால் இயேசுவின் பணியில் தொடங்கப்பட்ட திட்டமானது தீய ஆவியால் தடைகள் போடப்படுகின்றன. கடவுளுடைய மதிப்பீட்டின் மேன்மை திருப்பப்படுகிறது. மனிதருடைய வாழ்விலும் இத்தகைய தடங்கல்கள் எதிர்பார்க்கப்படுவது இயல்பே. இயேசுவின் மாதிரிகை நமக்கு ஒரு பாடமாய் அமைகிறது. நமது ஒவ்வொரு முயற்சியிலும் செயல்களிலும் சாத்தான் நன்மை தீமையைச் செய்யத் தூண்டி நமது வாழ்வை தோற்கடிக்க முயற்சிக்கின்றான். எனவே நாம் எப்போதும் நன்மையின் பக்கம் நம் எண்ணங்களைத் திருப்ப வேண்டும்.

நாற்பது நாள் தனிமையிலும் பசியிலும் இயேசு தம் வலிமையற்ற நிலையை உணர்கிறார். பாதுகாப்பான நாசரேத்து வாழ்விலிருந்து இப்போது சிலுவை மரணத்துக்கு இட்டுச் செல்லும் புதிய பாதையில், புதிரான பாதையில் தந்தையின் திட்டப்படி நடக்கத் திட்டமிட்டுள்ளார். இந்த பாதுகாப்பற்ற சூழலிலே எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தையே அளிக்கவிருக்கும் பின்னணியிலே அலகை அவரிடம் பேசுகிறது. குற்றம் சாட்டுவோன் என்பதுதான் அலகை என்பதன் பொருள் ஆகும். ஏனெனில் கடவுளைக் குறை கூற நம்மை அவன் தூண்டுகிறது. பின்னர் நாம் கீழே விழும் போது நம்மீது குறைகூறி, நம் இறைவனின் மன்னிப்பை அடைய முடியாது என்று நம்பிக்கை இழக்க வைக்கிறது. இதை யூதாசின் வாழ்விலே காண்கிறோம். தொடக்க நூலில் 3 ஆம் அதிகாரத்தில்




நமது ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் வாழ்க்கையில் பிசாசின் சோதனையையும் அதற்கு ஏவாளும் அதன்பின் ஆதாமும் வீழ்ச்சியுறுவதைப் பார்க்கிறோம். அவர்கள் சாத்தானின் சோதனையில் தோல்வியுற்று வீழ்ந்ததால் உலக மனுக்குலமே வீழ்ச்சியுற்றது. பாவத்தின் தண்டனையைப் பெற்றது.

இந்தத் தண்டனையிலிருந்து மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கவே இறைவன் தம் ஒரே மகனாம் இயேசு கிறிஸ்துவை உலகத்துக்கு அனுப்பினார். அவர் தனது பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறை நிகழ்ச்சிகள் வழியாக மனுக்குலத்தை மீட்டு இரட்சித்தார். சாத்தானின் செயற்பாடுகளை வென்றுவிட்டார்.

நாம் இயேசு கிறிஸ்து மீது கொள்ளும் விசுவாசத்தால், நம்பிக்கை வாழ்வால் பிசாசின் சூழ்ச்சிகளை வென்று இயேசு கொண்டு வந்த மீட்பைப் பெற்றுக்கொள்வோம்.

-அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா, ஆச்சிரமம்-

# கலந்துரையாடல்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 2007 தொடக்கம் 2011 வரை கல்வியை முடித்து வெளியேறிய பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா கலந்துகொள்வார். (3-8)

விளம்பரத்துக்கு
021 567 1111

**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**

யாழ். நகர் மத்தியில் மாட்டீன் லேனில் அரச தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக அல்லது வசிப்பிடமாக உபயோகிக்கக் கூடிய 1 வரவேற்பறை, 3 அறைகள்(1அறைA/C), 2 குளியலறை, சமையலறை என்பன கொண்ட வீட்டுடன் 1 ¾ பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. வீட்டின் பின்னால் தனிப்பாதையுடன் ஒரு வீடு கட்டக்கூடிய வெற்றுக் காணியும் உண்டு. விரும்பியவர்கள் நேரில் வந்து பார்க்கலாம்.

தொடர்புகளுக்கு
0779168945, 021 2228195
(29164)(3.7)

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, [illegible], யாழ்ப்பாணம்.
கிளை: இல. 30/27, [illegible]
Tel: 021 222 8680, 0775925088, 0750407430
(சி/6183)(2.6)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர்,கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
புறொயிலர் சுத்தம் செய்தது-500/=மட்டும்

நந்தினி பாம்,
இராசபாத றோட்,கல்வியங்காடு.
T.P 0779683028 (33582)(3.7)

**கடை வாடகைக்கு**

766, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் இடத்தில் கடைக் கட்டடம் வாடகைக்குண்டு.
தொடர்பு: 0778264365
(33701)(6.7.11)

**கடை வாடகைக்கு**

இல.363 A, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியிலுள்ள 20'x9' கடை, கொன்கிறீட் கூரை, சுருக்கு கேற் உடையது. உடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0778585973
(18060)(6.7.11)

**வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மொப்பிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப்படும். (நல்லூர் பின் வீதி)
இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:பி.கேதீஸ்வரன் 077351 2591
(33924)(5-6-7)

**வீட்டுடன் காணி மலிவு விற்பனைக்கு**

நல்லூர் மூத்தவிநாயகர் வீதி 133 ஆம் இலக்கத்தில் (பழைய வளவு) 05 பரப்பு காணி பகுதியாகவும் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு:0755109327, 0778323526
(33552)(3.6.7)

## 27ஆவது பிறந்த தினமும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 26 | 06 |
| ★ | ★ |
| 02 | 03 |
| ★ | ★ |
| 1986 | 2012 |

*சரவணபவானந்தம் தயாபரன்*
(கண்ணன்)
(திதி: 23 02 2013)

அன்பெனும் கோயிலில்
அண்ணனாயிருந்தாய்
ஆபத்தில் உதவுகரம் தந்து
எம்மையெல்லாம் வாழவைத்துவிட்டு
நீ மட்டும் வாழாது
போனதேனோ?...
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
என்றும் நினைவில் குடும்பத்தினர்.
(33519) (10.6)

## அகவை இருபத்தொன்றில் ஐந்தாம் ஆண்டு நினைவு



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 23 | 08 |
| * | * |
| 02 | 01 |
| * | * |
| 1992 | 2009 |

**குமரேசன் ருசியந்தன் (துசி)**

அகவை இருபத்தொன்றானதடா இன்றுனக்கு
ஆசையுடன் காத்திருந்தேனடா - ஆனால்
இறைவன் அழைத்து விட்டான்
உனக்கென எதுவும் செய்யவில்லை
ஊரறியச் செய்ய நினைத்தேன்
என்ன குறை கண்டாய்
ஏன் விரைந்தாய் விண்ணுக்கு
ஒரு குறையும் தெரியவில்லை
ஓயாமல் அழைப்பேன் "துசி" என்று
என் குரல் கேட்டால் துடித்து ஓடி வருவாயே
வழியனுப்பி வைப்பேனே - வரும் வரை
வாயிலில் நிற்பேனே
வாய் விட்டுச் சொல்ல எவருமில்லை
வருந்துகின்றேன் தனிமையில் உனை நினைத்து
வீடு வெறிச்சோடிப் போச்சடா
நீ நடந்த முற்றம் தேடுதடா - உன்னை
விண்ணில் வாழும் உனக்காக
மண்ணிலே தவிக்கின்றோம் நன்றி - இறைவனுக்கு

சிவிச் சென்ரர், வட்டக்கச்சி.
பிரிவினால் வருந்தும் குடும்பத்தினர்.
(33599) (10.6.7)

# கண்ணீர் அஞ்சலி



பு.ரஜீகீதா முகாமைத்துவ உதவியாளர் பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி வட மாகாணம்)

அவர்களின் அன்புத்தந்தை

*கட்டையர் புஸ்பராசா* அவர்கள்

நேற்று(22.02.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி வட மாகாணம்) (33725)(8.7)

# மரண அறிவித்தல்கள்

## பாலசுப்பிரமணியம் அரவிந்தன் (அகிலன்)



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வருபவருமாகிய பாலசுப்பிரமணியம் அரவிந்தன் (அகிலன்) நேற்று முன்தினம் (21.02.2013) வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - யோகலட்சுமி தம்பதியின் அன்பு மகனும் அன்பரசன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கீதாவின் மைத்துனரும் சஞ்சேயின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 24, சந்தனமாதா லேன், கண்டிகுளி, யாழ்ப்பாணம்.

தகவல்
க.பாலசுப்பிரமணியம் (பெரியமினி) தந்தை
தொ.பே: 021 321 9352

## *சின்னத்துரை இரத்தினவேல்*

*(நாகராசா)*

*(இளைப்பாறிய யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்)*



யாழ். கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இரத்தினவேல் நேற்று முன்தினம் (21.02.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இரத்தினம் தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான சோமசேகரம், அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயமோகன் (சுவிஸ்), ஜெயந்தினி, ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), சுகந்தினி, ஜெயசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், உஷாநந்தினி (சுவிஸ்), தர்மேந்திரா, ஸ்ரீகஜனி ஆகியோரின் மாமனும், ஷஜன், வர்ஷனா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கந்தரோடை சங்கம்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா உபாத்தியாயர் வீதி, தம்பியா பாலையடி, கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

# சிறுவர்களை துன்புறுத்தியவர்கள் விளக்கமறியலில்

கைத்தொலைபேசி, கமெரா என்பவற்றைத் திருடினார் என்று கூறி இரண்டு சிறுவர்களை அழைத்துச் சென்று தடுத்து வைத்து துன்புறுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு கமெராக்கள், இரண்டு கைத்தொலைபேசிகள் என்பவற்றை இரண்டு சிறுவர்கள் திருடினர் என்று குற்றஞ்சாட்டியே அவர்களைப் பிடித்துச் சென்று தடுத்து வைத்து துன்புறுத்தினர். சிறுவர்களைத் துன்புறுத்தியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 4 பேரும் கைது செய்யப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர். (4)

# ஒருவருக்கு வாள் வெட்டு

தென்மராட்சி, பெப். 23

இரு குழுவினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் வாள் வெட்டுக்கு இலக்காகி ஒருவரும், தாக்குதலுக்கு இலக்காகி ஒருவரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு மட்டுவிலில் இடம்பெற்றது.

சரசாலை மத்தியைச் சேர்ந்த துரைசிங்கம் சுதாகரன் (வயது-27) என்பவர் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையிலும், சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த நாகமுத்து மேனு (வயது-32) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நள்ளிரவு வேளையில் சேர்க்கப்பட்டனர். சுதாகரன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (த-9)


## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ். நகரின் மத்தியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு- 0772866429
பார்வையிடும் நாள்- (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை மட்டும்.

## கேக் தயாரிப்பு

ஐசிங் கேக் வகைகள் மற்றும் நிகழ்வுகளுக்குத் தேவையான கேக் வகைகள் தயாரித்து வழங்கப்படும்.
தொடர்பு : 0757278676

## தேவை

மருந்து, உணவுப்பொருள்களை வாகனத்தில் கடைகளுக்குச் சென்று விநியோகிப்பதற்கும் கணக்குப் பதிவதற்கும் கணனி, ஆங்கில மருந்துப் பொருள்கள் அனுபவம் உள்ளவர்களும் தேவை.
தொடர்பு
0752430276
(33724)(8.7)

## விற்பனைக்கு

2 வயது நிரம்பிய கிறேட்டேன் கறுப்பு பெண் நாயும், 1 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் ஜேர்மன் செப்பேட்டும் 2 1/2 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் ஜேர்மன் செப்பேட்டும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777111145

## விற்பனைக்கு

டல்மேஷன் ஆண், பெண் நாயும், அல்ஷேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், டாஸ்-சோன் ஆண், பெண் நாயும், 45 நாள்கள் பூர்த்தியான பொமேரியன் நாய்க்குட்டிகளும், மணித்தரா, முயல், கினிபிக் விற்பனைக்கு. தொடர்பு- வி.மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவைப் பிள்ளையார் முன்பாக பூதவராயர் கோயிலடி (டயலொக் ரவர் அருகில்)

மாற்ற முடியாதது எதுவுமே இல்லை
மாற்றம் தேவையானது.
எங்கள் மாற்றம் உங்களை வியக்க வைக்கும்

### ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.



கருமை நிற நீக்கம் (மாநிறத்தில் இருந்தழகிய சிவப்பழகு) கருவளையம் உதட்டுக்கருமை,கழுத்துக்கருமை,நீக்கம் முகக்கோரங்களிலுள்ள ✱ கொழுப்புப்புருக்கள் போன்றவற்றிற்கு நிரந்தரதீர்க்கான ஆயுர்வேத சிகிச்சைகள். **ஆயுர்வேத ஒயில்மசாஜ்** (முகம்,கழுத்து) முடிசம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகள். உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல் (இடுப்பு,கை,தொடை) போன்ற தலை குறைப்புக்கள்) வரையான சிகிச்சைகள்.

எமது முகவரி:
இல.262, "சானியா கேயல் கெயர்"
நாயன்மார்கட்டு அயுர்வேத வைத்தியசாலை,
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



முற்பதிவு அவசியம்: 0777351954




சங்கானை
நிகரையம்பதி சாமுண்டாதேவி
சமேத அருள்மிகு
ஞானவைரவர் ஆலய
10 ஆம் திருவிழா
திருமஞ்ச இந்திரவிழா

நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகமும். அன்னதானமும் மாலை மஞ்சத்திருவிழாவும் நடைபெறும்.

★ வளக்கம்பரை சிவகுமார் குழுவினரும்.
வடலியடைப்பு கோவிந்தசாமி குழுவினரும் இணைந்து தவில் நாதஸ்வர இன்னிசை கானமழை பொழிவார்கள்.

★ வான வேடிக்கைகளும் அத்துடன் வல்லையூர் குழுவினரின் இராட்சத வெளிச்சக்கூடு விண்ணில் ஏவப்படும்.

வைரவப் பெருமான் அடியார்கள் அனைவரையும் விழாவினைக் கண்டு களித்து வைரவப் பெருமானின் அருளைப் பெற்று உய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

நிகாரை வீதி, சங்கானை.

ஆசைப்பிள்ளை குடும்பத்தினர்
10 ஆம் திருவிழா உபயகாரர்

# கண்ணீர் அஞ்சலி

## *சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி*

*(பிரசித்த நொத்தாரிசு)*

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்களும், பிரசித்த நொத்தாரிசுகளும்.


# கொக்குவில் வளர்மதி முன்பள்ளி

## ஆசிரியர்தேவை

வளர்மதி நிறைவாழ்வகம், கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் என்பவற்றால் நடத்தப்படும் மேற்படி முன்பள்ளி மாணவர்களுக்கும், எமது ஆங்கிலப்பிரிவு மாணவர்களுக்கும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.

## முன்பள்ளி

தராதரம்:- முன்பள்ளி கற்கையில் தேர்ச்சியும், அனுபவமும் கொண்டவர்கள். பாடல், ஆடல், விளையாட்டினூடாக கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர்கள், ஆங்கில அறிவுடையவர்கள்.(கணினி அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.)

## ஆங்கிலப்பிரிவு

தராதரம்:- ஆங்கிலத்தில் உயர்தர டிப்ளோமா/பட்டம் பெற்றவர்கள், சிறப்புத்தேர்ச்சியும், அனுபவமும் கொண்டவர்கள் பேச்சு, எழுத்து, பாடல்கள் என்பன கற்பிப்பதில் திறமை கொண்டவர்கள்.

மேற்படி விளம்பரத்திற்கு பொருத்தமானவர்கள் நாளை மறுதினம்(25.02.2013) திங்கட்கிழமை எமது நிலையத்திற்கு மு.ப.10.30 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரடியாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு அவர்களது திறமைக்கேற்ப சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படுவதுடன் EPF.ETF என்பன எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

சம்பியன் லேன், கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம், வளர்மதி நிறைவாழ்வகம்.


# அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

*அமரர் மாணிக்கவாசகர் கனகாம்பிகை அம்மா*

*(குலனை அராலி வடக்கு, வட்டுக்கோட்டை)*



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்ப ஏகத்திருவிளக்கொளி திருமதி மாணிக்கவாசகர் கனகாம்பிகை அம்மா அவர்கள் ஜீவாத்மா உடல் நீத்த செய்தியறிந்து பிரான்ஸிலும், வேற்று நாடுகளிலும் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வீட்டுக்கு நேரில்வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளின் போது அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

25.02.2013 திங்கட்கிழமை பிரான்ஸிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நாளை மறுதினம் (25.02.2013) திங்கட்கிழமை அராலியில் அவரது வீட்டில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
37, Rue des coccinall 93150 Le Blance Mesnil Tel-0148665536, Por-0616070798.

தகவல்: குடும்பத்தினர்.

# பாலச்சந்திரனின் படங்கள்: நிராகரித்தார் கோத்தபாய

கொழும்பு,பெப்.23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனுடையது எனக்கூறி சனல்-4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் அனைத்தும் வெட்டி ஒட்டும் முறையிலேயே வெளியிட்டன என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அதனை நிராகரித்தார்.

சனல்-4 தொலைக்காட்சி தொடர்ச்சியாக படங்களை வெட்டி ஒட்டி வெளியிடும் வேலையினையே செய்து வருகின்றன. இந்தப் படங்களை எடுத்தவர் யார்?

அச்சிறுவன் இராணுவத்தின் பதுங்கு குழியில் உள்ளார் என சனல்-4 எவ்வாறு கூற முடியும்? எனவும் பாதுகாப்புச் செயலாளர் கேள்வி எழுப்பினார்.


## வாகனம் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள மிற்சுபிசி வடிக் கன்டர் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
077 6545116, 0756701519


# பாலச்சந்திரன் கொலைக்கு நீதி வேண்டும்

## 'இந்து' பத்திரிகை

பாலச்சந்திரனின் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை முன்னுதாரணமான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும்.- இவ்வாறு இந்தியாவின் 'இந்து' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கடந்த ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய புதல்வரின் பிறிதொரு படம் வெளியாகியிருந்தது. அதில் அச்சிறுவனின் நெஞ்சுப் பகுதியில் துப்பாக்கி ரவைக் காயங்கள் பார்க்கக்கூடியவையாக இருந்தன. இச்சிறுவன் எதிரும் புதிருமான துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி மரணித்துள்ளான் என இலங்கை வியாக்கியானம் அளித்திருந்தது. இது உண்மை போன்றே தோன்றியது.

இப்போது 'சனல் - 4' அளித்துள்ள படத்தில் மணல் மூடைகள் சூழ அடுக்கப்பட்டுள்ள இராணுவச் சூழலுக்குள் பாலச்சந்திரன் அமர்ந்த நிலையில் உள்ளார். இது அச்சிறுவன் வாழ்வு எவ்வாறு முடிவடைந்துள்ளது என்பது தொடர்பாக முற்றிலும் மாறுபாடான தகவலை அணுக வழிசமைக்கிறது. இலங்கைக்கு எதிரான இதர போர்க்குற்றச்சாட்டுகளையும் கோடிட்டுப் பார்க்கத் தூண்டுகிறது.

இப்புதிய படங்களை, "இட்டுக்கட்டப்பட்ட பொய்யானவை; பாதி உண்மையையும் வியூகங்களையும் கொண்டவை" என கொழும்பு சுட்டிக்காட்டி நிராகரித்துள்ளது. இதன் மூலமாக ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இந்நாடு சங்கடத்தை எதிர்கொள்ள நேரிடலாம்.

இவ்விவகாரம் அத்தகைய விவகாரமாகவிருந்தால், பாலச்சந்திரன் எவ்வாறு கொல்லப்பட்டிருப்பார் என்பதை கண்டுபிடிக்க இலங்கை தனது நலன்கருதி உடனடியாக நேர்மையான - நம்பத்தகுந்த ஒரு விசாரணையை ஆரம்பிக்கவேண்டும். இந்த விசாரணைகளின் கண்டுபிடிப்புகளையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

படங்கள் சுட்டிக்காட்டுவதைப் போல, அச்சிறுவன் இராணுவ பதுங்கு குழிக்குள் வைக்கப்பட்டிருந்தமை உண்மையானால், காவலின் கடூரம் எத்தகையதாக இருந்திருக்கும் என்பதை சுலபமாக அனுமானித்துவிட இயலும். அதேவேளை, முடிவான இந்தப் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை முன்னுதாரணமான தண்டனைக்கு உட்படுத்தவேண்டும்.

'சனல் - 4' தனது நிலைப்பாடு குறித்து குறிப்பிடுகையில், "இப்படங்கள் நிபுணர்களின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஒரே படப்பிடிப்புக் கருவி மூலமாகவே மூன்று படங்களும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை நிபுணர்கள் உத்தரவாதப்படுத்தியுள்ளார்கள்" என விளக்கமளித்துள்ளது.

இத்தருணத்தில் புதிய சாட்சியத்தைச் சமர்ப்பிப்பதற்கும், அடுத்த மாதம் ஆவணமொன்றை தான் சமர்ப்பிக்கவிருப்பதற்கும் 'சனல் - 4' வெளிப்படையாகவே காரணம் கூறியுள்ளது. 2009ஆம் ஆண்டு போரின் இறுதி வாரங்களில் இடம்பெற்ற சிவிலியன்களின் உயிரிழப்புகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கைக்கு சர்வதேசம் அதிகபட்ச அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவே இவை சமர்ப்பிக்கப்படுகின்றன என அது தன் நிலைப்பாட்டை விளக்கியுள்ளது.

ராஜபக்ஷ அரசு மூன்று வருடங்களுக்குப் பின்னரே முதன்முதலாக சில சிவிலியன்கள் மரணித்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதற்காக, 'பூஜ்ய சிவிலியன்கள் உயிரிழப்பு, காயமுற்றோர்' குறித்துப் பேசியுள்ளது. எனினும், எத்தனை பேர் எத்தகைய சூழ்நிலையில் கொல்லப்பட்டனர் என்பது இன்னுமொரு வாதத்துக்குரிய விவகாரமாகவே இருந்து வருகிறது.

மனித உரிமைகள் பேரவையின் 2012ஆம் ஆண்டு தீர்மானத்தின் அறிவுரைக்கேற்ப இலங்கை அதன் சொந்த கற்றுக்கொண்ட பாடங்களுக்கும், நல்லிணக்கப்பாட்டுக்குமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முன்வந்தது. அத்துடன், இது தொடர்பாக 'தேசிய செயற்பாட்டுத் திட்டம்' அரசின் இணையத்தில் இடம்பெற்றது. எனினும், முன்னேற்றத்துக்கான அறிகுறி தென்படவில்லை.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை வாக்கெடுப்புக்கு வருவதற்கு முன்னர் அதன் இறுக்கத்தை தணிப்பதற்காக புதுடில்லி செயற்பட்டுள்ளது. தற்போதைய புதிய படங்கள் தொடர்பாக மறுமொழி அளிக்க புதுடில்லி தீர்மான சிந்தனையை மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் கதிரவேலு

கோப்பாய் வடக்கு பிராமண ஓடையைப் பிறப்பிட மாகவும் திருநெல்வேலி மற்றும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட மயில்வாகனம் கதிரவேலு கடந்த (20.02.2013) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின்(ராணி) பாசமிகு கணவரும் கோமதி(கனடை), மதியழகன்(கனடா), அன்பழகன்(கனடா), மெய்யழகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன்னையா, வேலுப் பிள்ளை, பொன்னம்மா, நாகம்மா, தம்பிப்பிள்ளை(சிங்கப்பூர்), பார்வதிப்பிள்ளை மற்றும் தர்மலிங்கம்(ஏழாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எதிர்வரும் (26.02.2013) செவ்வாய்க்கிழமை கனடா நேரம் மு.ப. 11.00-12.00 மணியளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிராமண ஓடை, கோப்பாய்
வடக்கு, கோப்பாய்

தகவல்:
சி.செல்வமலர்
0014162849203

## திருமதி கந்தசாமி பராசக்தி



சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பராசக்தி நேற்று (22.02.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் (ஓய்வுபெற்ற அதிபர்- பலாலி ஆசிரியர் கலாசாலை) அன்பு மனைவியும், மதிதரன் (கனடா), கமலவதனி (இந்தியா), கெங்காதரன் (கனடா), சிவாஜினி, சுபோதினி (ஜேர்மனி), முரளிதரன் (பிரதேச செயலம், நல்லூர்), கலாநிதி (லண்டன்), கிரிதரன் (ஆஸ்திரேலியா), உமாதரன் (ஆஸ்திரேலியா), யாழினி (ஆசிரியை, வல்வை மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், நடேசன் (இந்தியா), இராஜேந்திரம் (ஜேர்மனி), கங்காதேவி (மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்), நிர்மலன் (லண்டன்), மணிவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கோபின் (கனடா), சுஜித்தா (ஜேர்மனி), றஜீவா (ஜேர்மனி), சஜனிகா, சரண்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மனோன்மணி, மகேஸ்வரி, கமலேஸ்வரி (ஓய்வு நிலை அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாமியன் அரசடி,
கரவெட்டி.

தகவல்:
வ.கந்தசாமி (கணவர்)

# தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு

அமரர்
திருஞான சம்பந்த
குருக்கள்
கருணாகரேஸ்வரி



நிகழும் நந்தன வருஷம் மாசி மாதம் 04ஆம் நாள் (16.02.2013) சனிக்கிழமை அமரத்துவமெய்திய எங்கள் குடும்பத் தலைவி தி.கருணாகரேஸ்வரி (மணி) அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

மாசி 13ஆம் நாள் (25.02.2013) திங்கள் மு.ப 10.00 மணி- தசாகம்
மாசி 14ஆம் நாள் (26.02.2013) செவ்வாய் காலை- ஏகோதிஷ்டம், மாசிகம்
மாசி 15ஆம் நாள் (27.02.2013) புதன் காலை- சபிண்டீகரணம்
மாசி 16ஆம் நாள் (28.02.2013) வியாழன் நண்பகல் 12.00 மணி- கிருஹயஜ்ஞும், மதியபோசனம்

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலடி வீதி, பலாலி றோட்,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## இராஜ்குமார் ரவிராஜ்

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், சிறுவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜ்குமார் ரவிராஜ் நேற்று (22.02.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜ்குமார் மற்றும் தர்மஜோதி தம்பதியரின் அன்பு மகனும், ரகுராஜ், புவிராஜ் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முள்ளானை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுவிளான்,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## தாமோதரம்பிள்ளை செல்வநாயகம்



மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், கொட்டடி வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி, இல.17இனை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை செல்வநாயகம் (22.02.2013) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை-இராசபூபதி தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரம்-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான இராசதேவி, முத்துலிங்கம் மற்றும் புஸ்பமணி, சௌபாக்கியவதி, பிரேமாதேவி ஆகியோரின் சகோதரனும் இந்துமதி, திலீபன், கிரிதரன் ஆகியோரின் தந்தையும் ஜெயகதீஸ்வரனின்(கமல்) மாமனாரும் கிதுஷா, யதுஷன், ஷரிஸ்னா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.10 மணிக்கு மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லூன்றிப்பிள்ளையார்
கோவில் வீதி,
கொட்டடி.


தகவல்:
குடும்பத்தினர்.


# பொன் அணிகள் போரில் இரு அணிகளும் மந்தம்















யாழ்ப்பாணம்,பெப். 23

96 ஆவது பொன்அணிகள் போரில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 142 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வருடம் தோறும் மோதிக்கொள்ளும் மாபெரும் துடுப்பாட்டத் தொடரான பொன் அணிகள் போரின் 96 ஆவது போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று பெரும் திரளான பார்வையாளர் மத்தியில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி. பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் யாழ்ப்பாணக் கல்லூரியின் துடுப்பாட்ட வரிசை எடுத்த எடுப்பிலேயே ஆட்டம் காணத் தொடங்கியது. எனினும் அபிராஜும், மதுசனும் பொறுப்புணர்ந்து ஆடி கௌரவமான இலக்கை தமது அணி பெறுவதற்கு உதவினர்.

55 பந்துப்பரிமாற்ற நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி , சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் அபிராஜ் ஒரு சிக்ஸர், 5 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், மதுசன் 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலான 32 ஓட்டங்களையும், அணித் தலைவர் நிமலேந்திரா 15 ஓட்டங்களையும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அஜித்டார்வின் 13.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், லிவிங்டன் 17 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், தனுசங்கர் 5பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், சுபநேசன் 3பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 6ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், ஜெயந்திரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி15 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி நிதாண ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஓட்டங்களை குவிப்பதை விடவும் அணியின் இலக்குகளை தக்கவைப் பதிலேயே பற்றிக்ஸ் கல்லூரி துடுப்பாட்ட வீரர்கள் குறியாகவே இருந்தார்கள் ஆயினும் அதனையும் மீறி பற்

றிக்ஸ் கல்லூரியின் நான்கு இலக்குகளை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள் வேட்டையாடினார்கள். நேற்றைய முதல் நாள் நிறைவில் 40 பந்துப்பரிமாற்றங்களில் நான்கு இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களை பற்றிக்ஸ் கல்லூரி எடுத்தது. இதில் ரியூடர் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களையும், யக்ஸன் 34 ஓட்டங்களையும், கரன்ஸ்ரன் 2 ஓட்டங்களையும் , கபிலன் ஒரு ஓட்டத்தையும் பெற்று ஆட்டமிழந்தனர் களத்தில் சுபநேசன் 12 ஓட்டங்களுடனும் , ஜெயந்தன் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரியின் நிமலேந்திரா 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும், சோபிநாத் 14 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

நேற்றுவெள்ளிக் கிழமை என்பதால் பார்வையாளர்களின் எண்ணிக்கை வழமையை விடவும் குறைவாகவே காணப் பட்டது. ஆயினும் இன்று சனிக்கிழமை என்பதாலும் ஆட்டத்தின் இறுதி நாள் என்பதாலும் ஏராளமான ரசிகர்கள் திரளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டியின் இறுதி நாளான இன்று முன்னிலை பெற்று வெற்றியை தம்பக்கம் சுவீகரிக்க இரு அணிகளும் கடுமையாக போராடும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். (ங-23-86)

## பொலிஸ்-இளைஞர் மோதல் பொன் அணிகள் போரில்

### விளையாட்டு வினையானது



வலி.வடக்கு,பெப்.23

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 'பொன் அணிகள் போர்'' கிரிக்கெட் போட்டியில் இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களுக்கு இடையே மோதல் ஏறபட்டது. இதனையடுத்து களத்துக்கு அழைக்கப்பட்ட பொலிஸாரும், சிவில் உடையில் வந்த பொலிஸாரும் பழைய மாணவர்கள் சிலரை தாக்கினர் என்று நேரில்கண்டவர்கள் தெரிவித்தனர்.

போட்டி பரபரப்பான கட்டத்தை அடைந்தபோது, இரு கல்லூரியினதும் பழைய மாணவர்கள், சிலர் மதுபோதையில் தமக்கிடையே மோதிக்கொண்டனர். ஆரம்பத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் அடிதடி வரை சென்றது.

இதனைடுத்து குழப்பத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் களத்துக்குள் பொலிஸார் சிவில் உடையிலும், சீருடையிலும் வந்து சேர்ந்தனர். இதனால் பழைய மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில்முறுகல் நிலை தோன்றியது. பின்னர் பழைய ம்ாணவர்களும், சிவிலில் நின்ற பொலிஸாரும் பொதுமக்களின் முன்னிலையில் மோதிக்கொண்டனர். இதன் பின்னர் பழைய மாணவர் ஒருவரை பொலிஸார் பிடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ங-23-86)

## இன்றைய ஆட்டம்



கைதடி,பெப்.23

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம், தென் மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத் தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொட ரில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மூன்றாம் இடத்துக்கான போட் டியில் பங்குபற்றவுள்ள அணிக ளின் விவரம் வருமாறு.

பி.ப.7.30 மணி

கைதடி வளர்மதி விளை யாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் கைதடி மின்னொளி விளை யாட்டுக் கழக. 'ஏ' அணி.

(ங-23-228)

# அஸ்வின் மிரட்டல்; மீண்டது ஆஸி.

தமிழக வீரர் அஸ்வின் சுழலில் மிரட்டிய போதும், மைக்கல் கிளார்க்கின் அபார சதத்தின் உதவியுடன் ஆஸ்திரேலிய அணி சரிவில் இருந்து மீண்டது.

ஆஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான




முதலாவது டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். எட்கோவனும், வோர்னரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கி, நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தவேளையில், அஸ்வினின் சுழல் மையங்கொள்ள ஆரம்பித்தது. சொந்த மைதானம் என்பதால் வழமையைவிட ஆக்ரோஷமான பந்துவீச்சில் இறங்கிய அஸ்வினின் சுழலுக்கு முதலில் இரையானவர் எட்கோவன். 29 ஓட்டங்களை எட்கோவன் பெற்றிருந்தபோது, அஸ்வின் வீசிய பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து அவர் நடையைக் கட்டினார்.

பின்னர் களமிறங்கிய ஹியூக்ஸ் (6) வந்த வேகத்திலேயே அஸ்வினின் பந்தில் இலக்குச் சிதற, ஆட்டமிழந்தார். பின்னர் வோர்னரும், வொட்சனும் கூட்டுச் சேர்ந்தனர். இவர்களின் இணைப்பில் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 100 ஐத் தாண்டியது. இந்தியப் பந்துவீச்சைச் சிறப்பாக எதிர்கொண்டு அரைச் சதமடித்தார் வோர்னர். ஆயினும் அணியின் ஓட்ட எண்ணிக்கை 126 ஐத் தொட்டபோது, வொட்சன் 28 ஓட்டங்களுடன் களத்தை விட்டகன்றார். அவரைத் தொடர்ந்து வோர்னரும் (59) அஸ்வினின் சுழலில் சிக்கினார்.

அதன் பின்னர் ஆட்டத்தைக் கையிலெடுத்தார் கிளார்க். அவருடன் இணைந்து சிறப்பாக ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட மத்யூ வேட் (12) ஏமாற்றினார். அவரும் அஸ்வினின் பந்திலேயே தன் இலக்கைப் பறிகொடுத்தார்.

இதனால் 153 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது ஆஸ்திரேலியா. எனினும் தொடர்ந்தும் அஸ்வினின் சுழலை விஸ்வரூபமெடுக்க விடாமல் மைக்கல் கிளார்க்கும், ஹென்றிகியூஸும் தடுத்தாடத் தொடங்கினர். அதன் பின்னர் இந்தியப் பந்துவீச்சாளர்களின் இலக்குவேட்டைக்கு தடை ஏற்பட்டது. ஆரம்பத்தில் நிதானமாக ஆடத்தொடங்கிய இந்த இணை, போகப்போக அதிரடியிலும் இறங்கியது. தனது அறிமுக ஆட்டத்தில் கன்னி அரைச்சதம் அடித்தார் ஹென்றிகியூஸ். அவரும் கிளார்க்கும் இணைந்து 151 ஓட்டங்களை அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

நீண்ட நேரமாகக் களத்தில் நிலைத்து நின்று இந்தியப் பந்துவீச்சாளர்களுக்குத் தண்ணி காட்டிய ஹென்றிகியூஸ்- கிளார்க் இணையைப் பிரித்தார் அஸ்வின். ஹென்றிகியூஸ் 68 ஓட்டங்களை எடுத்து, அஸ்வினின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் வீழ்ந்தார்.




வந்த ஸ்ராக்
கைத் தகர்த்து
றினார் ரவீந்திர
பின்னர் பீற்றர்
யில் நின்று நிலைத்
யில் சதம் கடந்தார்
தலைவர் மைக்கல்
168 பந்துகளை
இந்தச் சதத்தை
ஆட்ட நேர
திரேலிய அணி, 7
இழந்து, 316
எடுத்திருந்தது.
சார்பில் அஸ்
களையும்,
இலக்கையும்
ஆஸி. அணி
103 ஓட்டங்
சிடில் ஓர்
னும் ஆட்
களத்தில்
இரண்
ஆட்டம்
ரும்.

தொடர்ந்து
கின் இலக்
வெளியேற்
ஜடேஜா.
சிடில் ஒருமுனை
தா, மறுமுனை
ஆஸி. அணித்
கிளார்க். அவர்
எதிர்கொண்டு
அடித்திருந்தார்.
நிறைவில் ஆஸ்
இலக்குகளை
ஓட்டங்களை
இந்திய அணி
யின் 6 இலக்கு
ஜடேஜா ஓர்
வீழ்த்தினார்.
பின் கிளார்க்
களுடனும்,
ஓட்டத்துட
மிழக்காது
உள்ளனர்.
டாம் நாள்
இன்று தொ

(நு)

## மும்பைக்கு தலைவர் பொன்டிங்

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக ஆஸ்திரேலிய முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.




மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக ஆரம்பத்தில் சச்சின் டெண்டுல்கர் செயற்பட்டிருந்தார். கடந்த வருடம் ஹர்பஜன் சிங் அந்த அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் இந்த வருடம் சச்சின் டெண்டுல்கரே மீண்டும் தலைவராகச் செயற்படுவார் என்ற கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் இந்த மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற ஐ.பி.எல். ஏலத்தில் ரிக்கி பொன்டிங்கை 400,000 டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்தது மும்பை அணி. தற்போது அவரையே அணித்தலைவராக நியமிக்கவும் அந்த அணி முடிவு செய்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவதே அவரது துடுப்பாட்டத்துக்குச் சிறப்பானது என்பதாலேயே ரிக்கி பொன்டிங்கைத் தலைவராக நியமிக்கும் எனது கருத்தை சச்சின் டெண்டுல்கர் ஏற்றுக் கொண்டார் என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டுள்ள அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார்.


இதேவேளை, மும்பை அணியின் தலைவராக நியமித்தமை எனக்களிக்கப்பட்ட மிகப்பெரிய கௌரவம். இதனை நான் காப்பாற்றுவேன். இந்த முறை ஐ.பி.எல். கிண்ணத்தை மும்பைக்கு பெற்றுக்கொடுப்பதே என் இலக்கு என்று தெரிவித்துள்ளார் ரிக்கி பொன்டிங்.

(நு)

## குற்றம் ஐ.சி.சி. மீதே

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமை தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபையை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன் ரணதுங்க விமர்சித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளில் நடுவர்கள் வழங்கும் தீர்ப்புகளில் ஏற்படும் தவறுகளை இல்லாமற் செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நடுவர்



மீள்பரிசீலனைத் திட்டத்துக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடர்ந்து எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருகிறது. இந்த நிலையில் அந்தத் திட்டத்தைக் கட்டாயப்படுத்த சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) மறுத்து வருகிறது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அர்ஜுன் ரணதுங்க, இதற்கு சர்வதேசக் கிரிக்கெட் சபைதான் பொறுப்புக்கூற வேண்டும். நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்துவதா? இல்லையா? என்பது குறித்த முடிவை போட்டிகளை நடத்தும் நாட்டிடம் விடக்கூடாது. இந்த விடயம் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கிரிக்கெட் போட்டிகளைப் பாதுகாக்க வேண்டுமே தவிர, சில நாடுகளையல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

(நு)

# ஐ.பி.எல். இலங்கை வீரர்களுக்கு சிக்கல்

ஆசிய தடகள போட்டியை நடத்த முடியாது என்று தமிழக அரசு அறிவித்த நிலையில் சென்னையில் நடக்கும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்க முடியுமா என்று கேள்வி எழுந்துள்ளது.

அடுத்தமாதம் சென்னையில் ஆசிய தடகளப்போட்டி நடைபெறவிருந்தது. இலங்கை வீரர்களும் இதில் பங்கேற்கவிருந்தனர். ஆனால், இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் போட்டியை தமிழகத்தில் நடத்தமுடியாது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி 6 ஆவது ஐ.பி.எல்., 20/20 தொடர் தொடங்குகிறது. இதில் சென்னை, மும்பை, கல்கத்தா உட்பட 9 அணிகள் பங்கேற்கவுள்ளன. இந்த அணிகள் சென்னையில் தலா ஒரு போட்டியில் மோத வேண்டும். இதில் பஞ்சாப் தவிர ஏனைய அணிகளில் மொத்தம் 13 இலங்கை வீரர்கள் உள்ளனர்.

இவர்களுக்கு சென்னையில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்க தமிழக அரசு அனுமதி மறுக்குமா? அல்லது இவர்களை இலங்கை வீரர்கள் என்று பார்க்காமல், ஐ.பி.எல்., அணிகளின் வீரர்கள் என்ற அடிப்படையில் அனுமதி அளிக்குமா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

இவ்வாறு ஐ.பி.எல். போட்டிகளில் சென்னையில் நடைபெறும் போது இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டால் பின்வரும் வீரர்கள் விளையாட முடியாத நிலை தோன்றும்:

குலசேகரா, தனஞ்செயா (சென்னை), ஜெயவர்த்தன, ஜீவன் மெண்டிஸ் (டெல்லி), சேனநாயக்க (கல்கத்தா), மலிங்கா (மும்பை), மத்தியூஸ், அஜந்த மெண்டிஸ் (புனே), பெரேரா (ராஜஸ்தான்), டில்ஷான், முரளிதரன் (பெங்களூர்), சங்கக்கார, திசரா பெரேரா (ஹைதராபாத்). (ந)


## CANADA
**Work Permits - Cleaners**
* Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract

2nd Batch Closing Date 01-03-2013

தொடர்புகளுக்கு

iCS Integrated Corporate Solutions Pvt Ltd.
No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000

## ST. ANTONY'S ல்
கணினி மலிவு விற்பனை
Dual core 3.0, 250GB HDD, DDR III 2GB, 19" LDE, DVDWri, ATX CAS, K/B, Mipad.
39,500/= 3 வருட உத்தரவாதம்
Free-4GB Pen/ web cam/ Bag/ Headphone.
187, K.K.S ROAD JAFFNA.
021 222 4865, 0750698608

## NALIN IT
எமது கணினி நிறுவனத்தின் சேவை நிலையத்திற்கு சுன்னாகம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் கடை வாடகைக்கு தேவை.
குறிப்பு - பிரதான வீதிகளில் இருப்பது விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு - 0212221121, 0777667975
NALIN INFORMATION TECHNOLOGIES Pvt.ltd

## கடை வாடகைக்கு உண்டு
அடித்தளம் 980 சதுர அடியும் மேற்தளம் 1190 சதுர அடியும் கொண்ட கடை தொகுதி A9 வீதி, கிளிநொச்சி நகர் பகுதியில் (LB பினான்ஸ் அருகில்) வாடகைக்கு உண்டு. (சகல பகுதிகளுக்கும் மாபிள் பதிக்கப்பட்டுள்ளதுடன் குளியலறை வசதியும் உண்டு)
அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0777324648, 0779122714.

## சாதனைகள் படைத்த முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியில்....
ஆஸ்திரேலியா (தனியாள்) விசா ஆலோசனை
டுபாய், ஒரு இலட்சம் வரை சம்பாதித்துக் கொண்டே படிக்கலாம்
வயதெல்லை இல்லை
நியூசிலாந்து படித்தபின் PR பெற வாய்ப்பு
IELTS இல்லாமல் ஐரோப்பிய நாடுகள் சைப்பிரஸ், லிதுவேனியா, போலந்து
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090 (33661)(6.7.11)

## மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1986 மகம் 2ஆம் பாதம் மிகக் குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற அழகிய கலைப் பட்டதாரிப் பெண்ணுக்கு தகுதியான உள்நாடு, வெளிநாட்டு மணமகன் தேவை.
தொடர்புக்கு:- 0718285673

## காணி விற்பனைக்கு
அச்சுவேலியில் இருந்து இராசவீதியில் 200 மீற்றர் தூரத்தில் றோட்டுக்கு வடக்குப்பக்கமாக 2ஆம் காணி 4 பரப்பு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0775005223 (29052)(3.8.7)

## கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
அதி உயர் சம்பளம், மிகக்குறைந்த கட்டணத்தில் பயணமாக கீழ்க்காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| மேசன்/ மேசன் உதவியாளர் | - 20 |
| காப்பெண்டர் | - 10 |
| ELECTRICIAN, WELDER | - 20 |
| HOUSE PAINTER | - 10 |
| கம்பி கட்டுநர் | - 20 |
| பைப் பொருத்துநர் | - 20 |
| PIPEPITER | - 10 |
| பொது உதவியாளர் | - 20 |

உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் கீழ்க் காணும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.
மார்ச் 1ஆம் திகதி - யாழ்ப்பாணம்
மார்ச் 2ஆம் திகதி - முல்லைத்தீவு
மார்ச் 3ஆம் திகதி - வவுனியா
தொடர்புகளுக்கு: Air trust
No:.945, Boralla Road, Maradana, Colombo - 08.
T.P: 0112676777, 0777929475.

## யாழ். நகரில் மீண்டும் ஓர்
உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.
கீர்த்தி வாய்ந்த நவநாகரிக ஆண்களின் ஆடையகம்
STYLO
இதன் களஞ்சியசாலையில் பின்வரும் வெற்றிடங்கள் இருப்பதை அறியத் தருவதுடன் தகுதிவாய்ந்தவர்களை நேர்முகம் காண அழைக்கின்றோம்.
1. Clerk (களஞ்சியசாலை எழுதுவினைஞர்)-(பொருள் பெறுதல் மற்றும் பொருள் வழங்கல்)
2. General Helpers (பொது உதவியாளர்);
3. Salesman (விற்பனையாளர்)
(ஆண்களாக இருத்தல் அவசியமானது)
* தகைமை உள்ளோருக்கு தகுந்த வேதனம் வழங்கப்படும்.
* அவசியமெனில் தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.
* நேர்முகப் பரீட்சை திங்கட்கிழமை- 25.02.2013 (நேரில் வரவும்)
இடம்: STYLO No. 442, HoSpital RD., Jaffna.
தொ.பே.:021 221 9696 நேரம்: 10.30 A.M.
(33657)(5-7-25)


# மரண அறிவித்தல்



**சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி (JP)**
Rtd.Assistant Commissiner Labour Department (Notary Public).
(இளைப்பாறிய உதவித் தொழில் ஆணையாளர்)

பாகுதேவன்புலம், தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி நேற்றுமுன்தினம் (21.02.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம்-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி-மகேஸ்வரியின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், Dr.ராஜ்குமார் (Doctor General Hospital-Trincomalee), விஜிதா (Assistant Manager, Sampath Bank, Thirunelveli), ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கமலநாதனின் (Seylan Bank) அன்பு மாமனும், பிரதீப்பின் அன்புப் பேரனும் தட்சணாமூர்த்தி (U.K), கமலாதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.02.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


## NALIN IT
புதிய வகை HP,DELL (13,15.17) LAPTOPS எமது காட்சியறையில்...... மிகமிக குறைந்தவிலையில்......... எம்மிடம் மட்டுமே.......
HP -1000,2000,PROBOOK,G6
DELL -5423,5520,3520,3521,1450
NALIN INFORMATION TECHNOLOGIES Pvt.ltd
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna. TP-0212221121 / 0777667975

## NEW DEGREE COLLEGE
புதிய பட்டப்படிப்புக் கல்லூரி
மானிப்பாய்
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
G.A.Q, B.A.யாழ்ப்பாணம், பேராதனை
விரிவுரைகள் ஆரம்பம்
25.02.2013 திங்கள் முற்பகல் 11.00மணி

| | |
|---|---|
| தமிழ் | வரலாறு |
| திரு.N.சத்தியவேந்தன் | திரு.M.பத்மன் |
| அரசியல் | இந்துநாகரிகம் |
| திரு.இளங்கோ | திரு.S.ஜெயக்குமார் |
| பொருளியல் | புவியியல் |
| திரு.M.C.சுதாகரன் | திரு.S.P.கரன் |
| மெய்யியல் | நா.அரங்கு |
| திரு.P.கமல் | பிரபல ஆசிரியர் |

* யாழ். பிரபல ஆசிரியர்களின் சேவை
* எல்லா பாடங்களுக்குமான விரிவுரைகள் நடைபெறும்.
* அனுமதிகள்,நேர அட்டவணை,ஏனைய விடயங்கள் அலுவலகத்தில்.
* A/L 2013 DAY CLASS மாலை-4.00மணி
* A/L வர்த்தகப்பிரிவுகள் மிக விரைவில்.

நிர்வாகி.

## வடமராட்சி மக்களுக்காக.....
யாழ் மணியம் இம்பெக்ஸ் இப்பொழுது நெல்லியடியிலும் ›››
LED 19" TV 18500/- 16250/-
LED 24" TV 28900/- 24500/-
SONY LCD 32"- 53000/=
SONY LED 32"- 67000/=
SUMSUNG LED 32"- 56000/=
PANASONIC LCD 32"-42000/=
அனைத்தும் உத்தரவாதத்துடன்
SPECIAL PRICE
LCD BRACKET 990/=இருந்து
நம்பமாட்டீர்கள்!! Sumsung ,LG Fridge யாழ்ப்பாண விலையில் நெல்லியடியிலும் !!
SONY 21" TV 15000/=இருந்து....
SPECIAL OFFER
Recharge Offers
FREE FITTING OFFER!
1 YEAR Dish TV Full Set 8250/=
121, Kasthuriyar Road, Jaffna. Tel-0212222819
Main Street, Nelliyady. 0779480941 (Near HNB)

## ABI BABY MART
BABY களுக்கான தரமான ஆடைகள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள், புதிய மாதிரியான வடிவங்களில் புத்தகங்கள் சகலதும் பெற்றிடலாம்.
267, Brown Road, Jaffna.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093
# 61, Kachcheri Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## தவறிவிட்டது
கணேசு ராயு என்பவரது தேசிய அடையாள அட்டை (690821400V), B90249 இலக்கமுடைய லைசன்ஸ், ATM காட் என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு
0776172747, 0776690411

## CIMA-UK கற்கைநெறிக்கான புலமைப்பரிசில்
CIMA கற்கைநெறிக்கான புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. A/L பரீட்சைக்கு தோற்றியோர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களை 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள MCS வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 772395895


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.